53

திரட்டு

சிறந்த மாதாந்தர கட்டுரைப் பொக்கிஷம்

ஜய௵
மாசி — பங்குனி

REGISTRAR OF BOOKS
25 APR 1955
MADRAS

உயிர்க்கனல்
(தொடர் நாவல்)

தேவாரத்தின் மகிமை

துயரம் அளித்த வைரம்

தனுஷ்கோடிக்குத் திகில்

உள்ளந் தெளிந்தது — சிறு கதை
"சேது"

நேதாஜியின் வாழ்க்கைச் சுருக்கம்

... வழக்கம்போல் தொடர் நாடகம்,
... கதை, சுவையான கட்டுரைகள்
உண்மை சம்பவங்கள்.

583
2-55-

N53T4
N55.2-4
198757

Mar. 1955
Vol. 2. No. 4.
128 Pages

8 அணா

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ் ரெடிமேட் ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ் மானுபாக்சரிங் கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.



உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா



பௌண்டன் பேனா இங்க்

(''எஸ்-100'' ஸால்வென்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32

Branches : **Delhi - Bombay - Madras**

மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

ஸ்ரீ அம்பிகா எம்போரியம்

தாசர்புரம், திருநீண்டயூர் போஸ்டு
திண்ணணூர் ரயில்வே ஸ்டேஷன்.





உத்தரவாதமான பி. அண்டு சி. மில்
ரெடிமேட் ஆடைகளுக்கும் நூதன பைகளுக்கும்
சிறந்த இடம்:

உரிமையாளர்
எம். கே. ரங்கனாதன்

போஸ்ட்

வணக்கம். தங்கள் "திரட்டு" பத்திரிக்கையின் ஜனவரி இழழ் நான் படிக்க நேர்ந்தது குறித்து மட்டற்ற மகிழ்ச்சிகொண்டவனாக இருக்கிறேன். படித்து உள்ளத்திலே ஒரு திருப்தி கொண்டவனாகவும் ஆனேன். இவ்விதழின் தனிச்சிறப்பு அளிக்கும் "திருவாதிரை நாள்", மேவார் வீழ்ச்சி நாடகம் முதலிய கருத்தை கவரும் கட்டுரைகள் உயர்ந்த எண்ணத்தை பரப்பும் முறையில் அமைந்திருக்கிறது. உண்மையிலேயே சோம்பித்திரியும் எண்ணற்ற இந்து இளைஞர்களுக்கு இம்மாதிரியானகட்டுரை ஒரு பெரும் ஔஷதம் என்றே நினைக்கலாம். இம்மாதிரி இன்னும் பல கட்டுரைகள் தாங்கி வெளிவரும்என்று நம்புகிறேன்.

S. K. பாலகிருஷ்ணன்
மதுரை

★

"திரட்டு" பத்திரிகை படிப்பதற்கு மிகவும் நன்றாக இருக்கிறது. இம்மாதிரி அழகான கதைகளையும், ஜனங்களுக்கு அவசியமான புத்திமதிகளையும் கொடுத்து ஜனங்களின் வாழ்க்கைக்கு உபயோகப்படும்படியான கருத்துக்களையும் மக்களுக்கு அளிக்கின்ற "திரட்டு" பத்திரிகை ஆசிரியருக்கு என் நன்றி.

Thangamani Padmanabhan
Kallidaikurichi.

சிறுமதியாளர்களின்
குறுமதியை
கிழித்தெறிந்திட
எரிமலையென
குமுறி எழும்
தேசிய வார ஏடு

தேசியக் குரல்

விற்பனையாகிறது.

டிபாஸிட் கட்டக்கூடிய
ஏஜெண்டுகள் தேவை.

★

விரங்களுக்கு :—

நிர்வாகி :

தேசியக் குரல்
திருவல்லிக்கேணி
சென்னை.

தீரட்டு

Vol. 2   No. 4

பொருளடக்கம்

லக்ஷ்மியின் உறைவிடம்	5
திருத்தணி	7
சீதையின் அக்னிப்பிரவேச வரலாறு	9
பேருணவாகும் பேரீச்சை	10
சபரி	11
வெளியே பக்தி, உள்ளத்திலே?	23
அமுதமொழிகள்	24
தனுஷ்கோடிக்குத் தி[illegible]	26
விலங்கிட்டும் வேலைத்தனம்	27
சிருஷ்டி — ஒரு கண்ணாடி	28
தந்தை சொல்லிய மந்திரம்	33
மூலகாரணம்	34
அசோகர் கற்பித்த பாடம்	35
மணமும் மரணமும் அளிக்கும் தார்	36
மிகப்பெரிய உற்பத்தி	37
உள்ளம் தெளிந்தது	38
அழிவிலே சிலை	46
அராபிக்கடலின் அழகான 'பால்கனி'	47
உண்மை ஹிந்து	49
காலை சாஸ்திரம்	50

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 APR 1955
MADRAS

விநாயக் நரஹரிபாவே 51

சத்துள்ள சர்க்கரைவள்ளிக்கிழங்கு 60

ராணியின் காதல் 61

தேவாரத்தால் ஆகாதது ஒன்று உண்டா? 71

பதினெட்டாம் நாள் யுத்தம் 74

உயிர்க்கனல் 81

ஸதாசிவ பிரஹ்மம்—அருணசல கவிராயர் 90

பழமையில் மோகம் 91

மேவாரின் வீழ்ச்சி 100

அச்சுப் பேச்சு 111

ஹிந்துமதமே பாரதம் 112

வாழ்க்கை முழுமையும் கடவுள் மயமாக்க 114

பிராயச்சித்தம் 120

மயக்கம் பிறந்த கதை 125

துயரம் அளித்த வைரம் 127

ஆவணக் காப்பக நூலக

198757

சென்னை-600 008

"THIRATTU" Tamil Monthly Digest.

திரட்டு

சிறந்த மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

மார்ச்சு ○ 1955

லக்ஷ்மியின் உறைவிடம்

'வினேபாஜி'

பணம் என்பது லக்ஷ்மி அல்ல; அது ஒரு ராட்சதன் தான். வாழை, மா, காய்கறி, உணவுப் பொருள் இவைதான் லக்ஷ்மி. ஆனல் இந்தப் பணம் இருக்கிறதே, அது எங்கு உற்பத்தியாகிறது? நாசிக் என்ற சிறையில். அங்கு அது காகிதத் திஞல் செய்யப்படுகிறது. ஒரு துப்பாக்கியைக் கர்ண்பித்து வாழைப் பழம் கொடுக்கிருயா என்று மிரட்டுவதைப் போல, நோட்டைக் காட்டிக் கேட்கிருர்கள். துப்பாக்கியைக் காட்டி வாழைப்பழம் பெறு வதை எவ்விதம் பகல் கொள்ளையாகக் கருது

கிரோமோ, அதேபோல் நோட்டைக் காண்பித்து வாங்குவதும் பகல் கொள்ளையேயாகும். இந்தப் பணம் என்பது ராட்சதனின் ஒரு ஆயுதமேயாகும். ஆனால் நாம் பூஜிக்கும் லக்ஷ்மி ஒரு தேவதை. லக்ஷ்மி கிருக்ஷ்ண பகவான் அடைக்கலத்தில் இருக்கிருள்,

உழைப்பவர்களுக்குத் தான் லக்ஷ்மி பிரசன்னமாவாள். லக்ஷ்மி நமது கைவிரல்களில்தான் வசிக்கிருள். நமக்கு இறைவனுல் கொடுக்கப்பட்ட இந்தப் பத்து விரல்களால் உழைத்து லக்ஷ்மியைப் பெறலாம். ஆகையால் இந்த சேர்த்து வைக்காத சமுதாயத்தில் மிகவும் குறைவாகக் கிடைக்கும் வஸ்து பணமே. பணம் எல்லோரையும் ஒரு மாயையில் அழுத்தி இருக்கிறது.

உண்மையில் தரித்திரமாக இருப்பவனை லக்ஷ்மி கடாட்சம் பெற்றவன் என்றும் லக்ஷ்மி கடாட்சம் பெற்றவனைத் தரித்திரன் என்றும் கூறுகிரோம். பால், தயிர், காய் கறி உணவுப்பொருள் வைத்திருப்பவனை தரித்திரன் என்றும், இவைகள் ஒன்றும் வைத்திராமல் வெறும் பணம் நோட்டுகளை வைத்திருப்பவனை லக்ஷ்மி கடாட்சம் பெற்றவன் என்றும் கூறுகிரோம். இந்த உழைப்பாளிகளிடம் பணக்காரர்கள் சென்று தங்களிடம் உள்ள நோட்டுகளைக் கொடுத்து சாமான் வாங்குகிருர்கள். ஆனால் தனி சேமிப்பு அற்ற சமுதாயத்தில், இவை நடைபெரு.

" புயற் பொழில் வயற்பதி நயப்
படு திருத்தணி "

திருத்தணி

" பண்டாரப் பையனென்பார் பரிந்தவன் மணந்துகொண்ட
பெண்டாட்டி இருவ ரென்பார் பேசுமெய்த் தெய்வமென்பார்
கொண்டாடத் தணிகை வெற்பிற் கோவில்கொண் டுள்ளானென்பார்
தண்டாமல் அவன்கை வேலைத் தரிசிப்பதெமக்கு வேலை."

குன்றுதோருடல் எனப்படும் ஸ்ரீமுருகன் சன்னிதானங்கள் பலவற்றுள் இச் சந்நிதானத்தில் வீற்றிருக்கும் தணிகை நாதன் தனிச்சிறப்பு உடையவர். மலையடிவாரத்தில் பெரிய திருக்குளம் இருக்கிறது. ஆலயம் மலையின்மேல் இருக்கிறது. 365 அழகான படிக்கட்டுகள் உள்ளன. மலைக்குப்போகும் வழியில் அநேக சத்திரங்களும், நீர்ச் சுனைகளும், அழகிய சிற்பங்களை



மலைமீதுள்ள ஸ்ரீ தணிகைநாதன் ஆலய தரிசனம்

கொண்ட மண்டபங்களும், மின்சார விளக்குகளும் காணப்படுகின்றன. மலைமீது வெளிப்பிரகாரங்களும், உட்பிரகாரங்களும் கொண்டதோர் பெரிய கோயில். மூலஸ்தானத்தில் வள்ளி தேவசேனா சமேதராய் குறவாணர் குன்றிலுறை பேதைகொண்டு" ஸ்ரீ தணிகைநாதன் வீற்றிருக்கிறார். தலத்தின் பெயருக்கேற்றபடி

புன்முறுவல் கொண்ட தணிந்த முகத்துடன் வள்ளி மணாளனாய் நிற்கும் காட்சியைப் பார்க்கும்போது நாம் அடுத்து இன்னது செய்வதென தோன்றாமல் அப்படியே நிற்கச் செய்கின்றது. தணிகைநாதனின் பெருமையே பெருமை. வள்ளி தேவசேனா சந்நிதானங்கள் தனித்தனியே உண்டு. பிரமன் பூஜித்த ஸ்தலம். மலையின் மேல் நீர்ச்சுனை இருக்கிறது. அதிலும் ஸ்நானம் செய்யலாம்.



ஸ்ரீ தணிகைநாதன் ஆலய முன் கோபுர வாயிலும் படியேறும் காட்சியும்

திருத்தணிகை ரெயில் நிலயத்திற்கு கிழக்கே நாரசங்குப்பத்திற்குப் போகும் பாதையில் கால் மைல் தூரத்தில் நந்தியாற்றங்கரையில் ஆறுமுக சுவாமி ஆலயம் இருக்கிறது. அகஸ்தியரால் பூசிக்கப்பெற்ற ஸ்தலம். விசேஷமான சந்நிதி. இங்கே பெருமான் ஆறுமுகம் பன்னிரண்டு கரங்களோடும், மயில்மீதமர்ந்து, ஆனந்தமும், அமைதியும் ஒருங்கேயுள்ள இந்தஸ்தலத்தின் தரிசனம் நம்மை ஆனந்தக் கடலிலாழ்த்துகிறது. திருத்தணி ரெயில் நிலயத்திலிருந்து மலையடிவாரம் மேற்கில் ஒரு மைல்.

மூலம் :— காளத்தி நடேசமுதலியார் இயற்றியுள்ள ''இறைவனின் உறைவிடங்கள்'' என்ற நூல்.

ASOKA SCENTED BETELNUT POWDER

சீதையின் அக்னிப்பிரவேச வரலாறு

ஆசிரியர் : 'திரட்டு'

ஐயா,

தங்களுடைய கார்த்திகை—மார்கழி மாத இதழில் "மங்கையரின் மகுடம்" என்ற தலைப்பின்கீழ், பக்கம் 85-ல் கண்ட சீதையின் வரலாற்றில் கூறியபடி சீதை அக்னிபிரவேசம் கீழே கொடுத்திருக்கிற காரணத்தை யொட்டியதாக உள்ளது. விபரம் வருமாறு :

பூர்வத்தில் **வேததி** என்கிற கன்னி யௌவனப்பெண் ஸ்ரீவிஷ்ணுவையே **பதியாக** அடையவேண்டும் என்ற நோக்கத்துடன் தவம் செய்துகொண்டிருந்தாள். அவ்வமயம் ராவணன் திக்விஜயம் செய்துகொண்டுவரும் காலத்து தவம்செய்துகொண்டிருந்த அந்த யௌவன ஸ்திரீயைக் கண்டு தான் அடையும் பொருட்டு அவள் தவம் கலையும்படி செய்தான். பின்னர், அவள் "நீ என் தவத்தைக் கலைத்ததால் என்னாலேயே உன் அந்திய முடிவு ஏற்படும்" என்று சபித்து தவத்தில் ஆழ்ந்திருந்தாள். பின்னர் விஷ்ணு அவளுக்குகலியுகத்தில் வெங்கடாசலபதியாய் அவதரிக்கும் காலத்தில் அவளை மணம்செய்து கொள்ளுவதாகவும் அதுவரை அக்னி வீட்டில் இருக்கும்படியாகவும் வரம் கொடுத்தாராம்.

பூர்வத்தில் பசுபதியைப் பார்த்து பார்வதி தான் லக்ஷ்மியை **தனித்து பூஜிக்கவேண்டும்** என்று வேண்டி வரம் கேட்டதாகவும் அதற்கு பசுபதி இவ்விதம் வரம்கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது.

"ராமாவதாரத்தில் ராமனும் லக்ஷ்மணனும் சீதையை தனியாக விட்டு மாய மானைத் தொடர்ந்தபோது அக்னிதேவன் அவ்விடமிருக்கும் சீதையை உன்னிடம் சேர்த்து, பின் தன்னிடம் (அக்னியின் வீட்டிலிருக்கிற வேததி) என்கிற பெண்ணை ராவணன் நாசத்துக்காக சீதைபோல் சீதையிருந்த இடத்தில் இருக்கவும், அவளைப் பின்னர் ராவண வதம் ஆன பின்னர் அவள் அக்னிப் பிரவேசம் செய்வாள்; அவ்வமயம் அக்னி அவளைத் தன்னிடம் சேர்த்துக்கொண்டு, உன்னிடமிருக்கும் சீதையை ராமனிடம் சேர்க்கக் கடவது" என்பதாக வரமளித்த காரணத்தை யொட்டி

ஸ்ரீராமன் சீதையை அக்னிப்பிரவேசஞ்செய்யச் சொல்ல சீதை அக்னிப்பிரவேசம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே சீதையின் கற்பின் மேல் ஸ்ரீராமர் (பகவான்) களங்கம் கொள்ளவில்லை என்பதை நிரூபித்துவிடலாம்.

இவ்வாருக வேததியின் சாபமும் பார்வதியின் வரமும் நிறைவேறுகின்றன. ஸ்ரீராமன் வேததியை அப்பொழுதே ஏற்றுக் கொள்ளாத காரணம் ஸ்ரீராமன் ஏகபத்தினி விரதம்கொண்டவனுயிருந்தது தான்.

54–A Gengu Reddy Road,
Egmore Madras–8.

இப்படிக்கு
அன்புள்ள,
R. Krishnaswamy.

பேருணவாகும் பேரீச்சை

மிட்டாய் தினுசுகள் போன்று எப்போதாவது நம் நாக்கின் ருசியைத் தணிக்கும் இனிப்பான பேரீச்சம்பழம், பாலை நில மக்களுக்குப் பெரும்பாலும் முக்கியமான உணவாகிறதென்ற உண்மை நம் நாட்டு மக்களுக்குப் பொதுவாகத் தெரியாதென்றே கூறலாம்.

இந்த சுவையுள்ள பேரீச்சம்பழம் யூப்ரட்டீஸ் டைகிரீஸ் என்ற இரு நதிகளுக்கு மத்தியிலுள்ள ஈராக் தேசத்தின் ஒரு முக்கிய ஏற்றுமதிப் பொருளாகும். புஷ்டியான உணவின் அம்சங்கள் முழுவதும் இந்தப் பேரீச்சையில் நிறைந்துள்ளது. மிகக் குறைந்த விலையில் இவ்வளவு சத்துக்கள் நிறைந்த பொருள் வேறெங்குமே கிடையாது. ஒரு பவுண்டு எடையுள்ள பேரீச்சையில் சுமார் 1780 காலரி சத்து இருக்கிறதாம். இந்தப் பேரீச்சை பழ தினுசுகள் சுமார் 250 வரை உண்டாம். வருடந்தோறும் இந்தியாவில் 40,000 டன் பேரீச்சம் பழம் இறக்குமதியாகிறது.

வறண்ட உப்புமண் நிலத்திலும், களிமண் நிறைந்த நிலத்திலும் ஈச்சமரங்கள் செழித்து வளருகின்றன.

உலகத்தில் மிகப் பழமையான ஒரு உணவுப் பொருள் இந்தப் பேரீச்சை என்பதை யாவரும் அறிய வேண்டியதாகும்.

—தும்பி.

சபரி

●

சபரி, பம்பைப் பொய்கையின் மேல்கரையில் உள்ள மதங்காச்ரமத்தில் வசித்துக் கொண்டு துறவறம் பூண்ட ஓர் தவப் பெண்ணாய், மதங்கருடைய சிஷ்யர்களுக்குப் பணிவிடைகளைச் செய்து கொண்டு காலங்கழித்து வந்தாள்.

குகனைப்போன்ற ஒரு நிஷாத ராஜனுடைய குமாரத்தியாய் அவதரித்தவள் சபரி. அழகில் ஒப்புயர்வற்றவள். தங்கள் இனத்தார்களுடைய ப்ராணி ஹிம்ஸை முதலிய நடவடிக்கைகள் இளம் பிராயம் முதலே அவளுடைய வெறுப்புக்குக் காரணமாயின. "ஊனைத்தின்றூனைப் பெருக்காமை மிக இனிது," என்பதிலுள்ள உண்மையை இயற்கையிலேயே சபரி தன் மனக் கண்ணால் கண்டறிந்தாள். அவ்வாறிருக்கும் நாளில் அவள் தகப்பனார் தம் அந்தஸ்திற்கு ஏற்ற வேடவாலிபனைத் தேர்ந்தெடுத்து, அவனுக்கும் தன் அருமைப் பெண்ணான சபரிக்கும் மணம் முடிப்பதாகத் தீர்மானித்து, அதைச் சபரிக்கும் அறிவித்தார். "ஐயோ; உயிர் மாய்க்கும் கொடுந்தொழில் புரியும் ஜாதியில் நாம் பிறந்தது போதாதா? அந்த இனத்தில் சேர்ந்த மற்றொருவனுச்கு வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகளைப் பெற்று, அதைப் பெருக்குவதற்கு ஏதுவாகவும் வேண்டுமா? நம்முடைய இல்லமானாலும், அது தீப் பற்றிவிடுமானால் அதைவிட்டு ஓடிப்போவதன்றோ நீதியாகும்? ஆகையால் யாருமறியாமல் எங்கேனும் சென்று தவமே துணையாகக் காலம் கழிப்பதே உசிதமாகும்'' என்ற மனத்துணிவுடன் தன் தந்தையின் அரண்மனையிலிருந்து சபரி யாருமறியாமல் வெளியேறிச் சென்றாள்.

பம்பைப் பொய்கையின் கரையைச் சுற்றி உள்ள காடுகளின் நடுவிலே மேலண்டைப் பாகத்திலே மதங்கர் என்ற மஹரிஷியின் ஆச்ரமம் சமைக்கப் பட்டிருந்தது. அதில் அவரும் அவருடைய சிஷ்யர்களும் தவமியற்றிக் கொண்டிருந்தார்கள். அநுஷ்டானத்திற்குச் செல்லும் பாதைகள் முட்களும் கற்களும் நிறைந்தனவாய் இருந்தன. அவற்றை நாள்தோறும் சுத்தம் செய்து துலக்கி வைப்பதற்கு ஒருவரும் ஏற்பட்டாரில்லை. திடீரென்று ஒரு தினத்தில் காட்டுவழிகள் வெகு நேர்த்தியாகக் கற்கள் முட்கள் இல்லாமல் விளக்கப்பட்டிருந்ததையும், தர்பைகள், விறகுகள் இவை சேகரிக்கப்பட்டு ஆச்ரமத்தின் வாயிலில் ஸித்தமாக வைக்கப் பட்டிருப்பதையும் பார்த்து மதங்கரும், அவருடைய சிஷ்யர்களும் வியப்படைந்தார்கள். அதுமுதல் ஒவ்வொருநாளும் அவ்விதமே காணலாயின. யார் இவ்விதம் செய்து வருகின்றார் என்பதைக் கண்டு பிடித்து அவரைத் தம்மிடம் அழைத்து வரும்படி மதங்கர்

தம் சிஷ்யர்களுக்கு ஆக்கினை அளித்தார். ஒரு தினம், பொழுது விடிவதற்கு ஒரு ஜாமம் இருக்கும்போது மின்னல்கொடி போன்ற பெண் ஒருத்தி சுறுசுறுப்புடன் பாதையை விளக்கு வதை ஒரு சிஷ்யர் கண்டு, இந்த வனத்தின் தேவதைதான் நம் குருவுக்குப் பணிவிடை செய்யப் புகுந்திருக்கின்றாள் என்று சிறிது நேரம் மயக்கங்கொண்டு, நின்ற இடம் விட்டகலாமல் இருந்தார். இவளேதான் சபரி.

தன் வீட்டை விட்டுப் புறப்பட்டு மலைகளையும், காடுகளையும் கடந்து மதங்காச்ரமத்தை வந்ததடைந்து அதில் ஓர் மூலையில் மறைந்து வசித்துக்கொண்டு, மதங்க முனிவருக்கு ரகஸ்யத்தில் பணிவிடை செய்கின்றவளாய் முன்கூறியபடி ஆச்ரமத்தை விளக்கிக் கொண்டு ஸமித்து, விறகு முதலியவைகளையும் சேகரித்து உதவி புரிந்து வந்தாள் சபரி.

இருட்டு வேளையில் சிஷ்யர் இருப்பதை அறியாதவளான சபரி, தன் வேலையைச் சீக்கிரம் முடித்துப் போவதற்காக, வெகு விரைவுடன் அதைச் செய்யலானாள். மதங்கரின் சிஷ்யர் சிறிது மனந்தெளிந்து அவளை உற்று நோக்கினார். மானிடப் பெண்ணே இவள் என்று அறிந்து சபரியைக்கிட்டி "நீ யார்" என்றுவினவினார். அவள் திடுக்கிட்டு, ஒன்றும் கூற முடியாமல் கையும் அலகுமாய் ஸ்தம்பித்து நின்றாள். மனத்தைச் சிறிது தைர்யப்படுத்திக் கொண்டு, "ஸ்வாமி தங்கள் போலுள்ள தவ முனிவரைப் பார்ப் பதற்கு அருக மற்ற வேடப் பெண் நான், என் குற்றத்தை மன்னித்து, என்மீது கிருபை செய்து காப்பற்ற வேண்டும்" என்றாள். இதைக் கேட்ட சிஷ்யர், "எம்முடைய குரு மதங்கரால், உன்னைக் கண்டதும் அழைத்து வரும்படி ஆக்கினையிடப் பெற்றிருப்பவன் நான், வா" என்று கூறவே சபரி உடல் பதைத்து, "அவரை என் கண்களால் எச்சில் படுத்துவது தகுமா?" என்றாள். சிஷ்யர், "அந்த விசாரம் உனக்கு வேண்டாம்; குருவின் ஆணைப் படி அவர் முன் நீ வரத்தான் வேண்டும்" என்று நிர்பந்தப்படுத்தி அவளை ஆச்ரமத்துக்கு அழைத்துச் சென்றார். மதங்கர் அவளைக் கண்டதுமே "இவள் ஈச்வரனுடைய ஜாயமான கடாட்சம் பெற்ற வள்" என்பதைத் தம் தவத்தின் பெருமையால் அறித்தார். [ஜாயமான கடாட்சம்—பிறக்கும்பொழுதே ஈச்வரனுடைய பார் வைக்குப் பாத்திரமாதல்.]

சபரி சிஷ்யரிடத்தில் உரைத்ததுபோல் மதங்கரிடத்திலும் தன் விருத்தாந்தத்தைக் கூறி "பொருத்தருளவேணும்" என்று அவருடைய இரு பாதங்களிலும் விழுந்து நமஸ்கரித்தாள். உடனே மதங்கர் சிஷ்யரைக் கூவி, "இவள் நம் தபோவனத்திலேயே ஓரிடத்தில் இருந்துகொண்டு கைங்கரியங்களைச் செய்து வரட்டும்;

அவளுடைய காலக்ஷேபத்துக்குத் தக்க ஏற்பாட்டை உடனே செய்'' என்றார். அதைக் கேட்ட சபரி, ''தங்கள் தர்சனத்தை அடையும் பாக்கியம் பெற்ற நான் இனி ஒரு க்ஷணமேனும் தங்களுடைய ஸாந்நித்யத்தை விட்டிருப்பேனானால் என் பிராணங்கள் என்னை விட்டு அகன்று விடுவது நிச்சயம். தங்கள் அருகாமையில் இருந்து கொண்டே எல்லா அடிமைகளும் செய்யப்பெறுவேனாகும்படி அனுக்ரஹிக்க வேணும்'' என்று இறைஞ்சினாள். மதங்கரும் ''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்ல மற்ற சிஷ்யர்களுடன் அவளும் அந்த ஆச்ரமத்திலேயே இருந்துகொண்டு எல்லா சுச்ருஷைகளையும் செய்து வரலானாள். ஒரு ஈன ஜாதி ஸ்திரீயை அருகில் வஸித்துக்கொண்டு வரும்படி மதங்கர் அனுமதித்தது அந்தக் காட்டில் அருகாமையில் உள்ள மற்ற முனிவர்களுடைய இகழ்ச்சிக்கும், ஸந்தேஹத்துக்கும் அஸூயைக்கும் இடந்தரலாயிற்று. ''மதங்கருக்கு இந்த வயதில் இம்மாதிரி மோஹம் வதிருப்பது விதியின் விளைவே'' என்று சொல்லி அவரை அவர்கள் பழிகூற ஆரம்பித்தார்கள். அதை மதங்கர் சற்றேனும் பொருட்படுத்தாமல், அவள் செய்து வந்த சுச்ருஷைகளை மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுத் தம் ஆயுளின் முடிவில் அநேக அநுக்கிரஹங்களையும் அவளுக்குச் செய்துவிட்டுப் பொன்னுலகம் போயினர்.

பிறகு சிஷ்யர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு, சபரி தன் வாழ்நாட்களை நியமத்துடன் கழித்து வந்தாள். அவளுடைய தவமும் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வரலாயிற்று

ஒருநாள், அக்காட்டில், மதங்கரையும், பிறகு அவர் சிஷ்யர்களையும் அவதூறு செய்துவந்த முனிவர் ஒருவர் நதியில் நீராடிவிட்டு வந்துகொண்டிருந்தார். தற்செயலாய், சபரி அங்கு வரவே, முனிவருடைய பார்வையிலிருந்து தப்புவதற்காக வேறு வழி செல்லத் திரும்பினாள். அவளுடைய நிழல் அம் முனிவருடைய பாதங்களில் விழலாயிற்று. அவர் தலையில் அடித்துக்கொண்டு, மிகவும் அசுத்தம் ஏற்பட்டு விட்டதாக நினைத்து மறுமுறை முழுகுவதற்காக நதிக்குச் சென்றார். அவர் நீரைத் தொட்டதுதான் தாமதம்! ரத்தமும், மாம்ஸமுமாக அது மாறிப் போய்விட்டது. சபரியை அவர் மந்திரம் கற்ற துஷ்ட அரக்கி என்று ப்ரமித்து, மற்ற முனிவர்களிடம் சென்று, இதைக் கூறவே, யாவரும் பயந்து, அக்காட்டைவிட்டு வேறிடத்துக்கு ஓடிவிட்டனர்.

மதங்கருடைய சிஷ்யர்களோ, சபரியின் ஒழுக்கத்தையும், தவத்தையும், பக்தியையும் பார்த்துத் தம்மைவிட எத்துணையோ அறிவால் விஞ்சியவள் இவள்; ராமரூபியான ஸாக்ஷாத் நாராய

ணன் இவளைத் தேடிவந்து, இவளைக் கரையேற்றப் போகிருன்; என்பதை நன்குணர்ந்து தாங்கள் மேலுலகம் சென்ற பிறகும் அவளை ஆச்ரமத்தில் இருந்து, முன்னமே நாம் கூறியபடி, அவ் வீச்வரனைக்கண்டு தரிசித்து அதிதி ஸத்காரத்தைச் செய்யும்படி சொல்லிப் போனுர்கள். சபரியும் அவ்வாறே அவ்வனத்தில் பம்பைப் பொய்கையின் கரையில் உள்ள கனிகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு அவற்றை ராம லக்ஷ்மணர்களுக்குக் கொடுத்து உபசரிப்பதற்காக, அவர்கள் வரவை நாள்தோறும் எதிர் பார்த்த வளாய் இருந்து வந்தாள்.

ராமர் லக்ஷ்மணருடன் சபரியின் ஆச்ரமத்தை அடைந்ததுமே முன் நிகழ்ந்த ஸீதாபஹாரம் முதலிய தமதானவையான நிகழ்ச்சி களை மறந்து அவளுடைய பக்தியில் முற்றிலுமே ஈடுபாடுடையவ வரானுர். சபரியும், ராமருடைய தர்சனத்தைத் தான் பெற்ற மகிழ்ச்சியில் அவருடைய முன் வரலாற்றைப் பற்றி ஒன்றையுமே அவரை வினவ மறந்தாள். சபரியைப்போல் தவத்தில் சிறந்தவர் களைக் கண்டதும், குசலப் ப்ரச்னம் செய்யவேண்டியது ராமர் போன்ற ராஜகுமாரர்களின் முறையாகையால், அதை அனுஷ்டிக் கும் வ்யாஜ்யமாகச் சபரியின் தவச்சிறப்பை ராமர் அறிமுகப் படுத்தத் தொடங்கினுர்.

''கச்சித்தே நிர்ஜிதா: விக்நா'' [உன்னுடைய இடையூறுகள் என்னுல் ஜயிக்கப்பட்டு விட்டனவா' என்று ராமர் முதலில் விசா ரித்தார். ப்ராணி ஹிம்ஸை என்பதைச் செய்து உயிர் வாழும் கீழான ஜாதியான சபர ஜாதியில் ஜனித்த ஒருத்தி மஹரிஷிகளுக்குப் பணிவிடை செய்யும் பதத்தைப் பெறுவ தென் பது லகுவான காரியமன்று.

''கச்சித்தே வர்ததே தப'' உன்னுடைய தவம் பெருக்கடைந்து வருகின்றதா? என்பது ராமருடைய அடுத்த ப்ரச்நம். மனஸ், வாக், காயம் என்கிற முக்காரணங்களாலும் நாடோறும் செய்யப் பட்டு வந்த சபரியின் தவம் குரு சுச்ரூஷையையே அடிப்படை யாகக் கொண்டிருந்தது. ஸாமான்யமாய் க்ரஹஸ்தாச்ரமத்தில் இருக்கும் மற்ற உத்தமிகளுடைய தவமோ அவரவர்கள் பர்த்தா வைப் பற்றியே ஏற்படுவதாகும். சபரியின் குருக்கள் ஸ்வர்க்கம் சென்று விட்ட பிறகும் மேற் கூறியபடி அவர்கள் செய்துபோன ஆக்ஞை அவளுடைய தவத்திற்கு அஸ்திவார மாகத் திகழ்ந்தது. அந்த ஆஜ்ஞாரூபமான கைங்கர்யம் ஆச்சிர மத்திற்கு எழுந்தருளப்போகும் ராம லக்ஷ்மணர்களுக்கு விருந் திட்டு உபசரிப்பதில் பயன் பெறப்போகின்றதாகையால், அதையே மனத்திலுல் சிந்தித்துக்கொண்டு, எந்தவிடத்தில் மிகவும் ருசியுள்ள கனி கிழங்குகள் அகப்படுமென்பதை வாயினுல் விசாரித்

துக்கொண்டு, அவைகளைக் கையால் சேகரித்துக்கொண்டு சபரி தன் தவத்தை பெருக்கிக்கொண்டு வந்தாள். அந்தத் தவத்தை எண்ணியே மேற் கூறியபடி ராமர் அவளை வினவினர். இங்கே தவம் என்னும் சொல்லுக்கு ப்ரதிபதமாக இருப்பது பக்தி என் பதேயாகும்,

"கச்சித்தே நியத: க்ரோத: ஆஹார: சதேபோதநே" "உன்னுடைய கோபமும், உணவும் கட்டு மட்டில் இருக்கின்றனவா? என்று ராமர் மற்றொரு ப்ரச்நத்தைச் செய்தார். விச்வாமித்திரர் போன்ற மஹர்ஷிகளும் கூட சில ஸந்தப்பங்களில் சினமுடைய வர்களாயும், ஆகார நியமத்திலிருந்து நழுவவேண்டி வந்தவர்களா யும் கேட்கப்படுகின்றார்கள். அந்த விதக் குறைவுபாடுகளி லிருந்து முற்றிலும் நீங்கியவள் சபரி என்பதை உணர்த்தும் பொருட்டே இவ்விதம் ராமர் அவளை வினவலானர்.

"கச்சித்தே மனஸ: ஸுகம்" 'உன் மனம் இன்புற்றிருக் கின்றதா?' என்றனர் ராமர். உலகப்பொருள்களை எத்துணை பெற்றாலும் மேலும் அவற்றைப் பெறுவதற்காக விசாரமடைகின்ற தேயன்றி திருப்தி பெற்று ஒருவர் மனமும் ஸுகம் பெறுவதில்லை. உலக ஸுகங்கள் யாவற்றையும் நீந்தியிருப்பவர்களே ஸந்துஷ்டர் களாய், உள்ளம் குளிர்ந்து வாழ்கின்றார்கள். ஆனல், புருஷர் களும், ஸ்திரீகளும் பொதுவாக சரீர ஸுகத்தை அடைவதற்கு இரவும் பகலும் பாடுபடுகிறார்களே யன்றி, 'ஆத்மா' என்று ஒன்று இருக்கின்றதென்பதே அவர்களுக்குத் தோன்றுவதில்லை. சரீரமேதான் ஆத்மா என்பது அவர் கொண்ட கொள்கையா கின்றது. அவர்கள் பெறுகின்ற க்லேசங்களெல்லாப் அந்த வித உணர்ச்சியையே காரணமாகக் கொள்ளுகின்றன. அவர் களுடைய மனப் பிடிப்பை 'அஸத் க்ருஹம்' என்று இகழ்ந்திருக் கின்றார் சுகர். அதுவே எப்பொழுதும் நீங்கரமலிருக்கும் பயங் களுக்கெல்லாம் மூலாதாரமென்றும் அவர் அருளியிருக்கின்றார். (ஸதா ஸமுத்விக்நதியாம் அஸத்க்ருஹாத்) சபரி போன்ற ஞானிகள் சரீரத்தை ஆத்மசுகம் பெறுவதற்கு ஓர் துணைக் கருவியென்று நினைந்து ஒழுகி ஸித்திபெறுகின்றவர்கள். அவர் போன்றவர் கள் மனக்களிப்பே உண்மையான மனக்களிப்பாகும் என்பது இந்த ப்ரச்நத்திலுள்ள உண்மை.

"கச்சித்தே குரு சுச்ரூஷா ஸபலா சாருபாஷிணி!" அழகாப் பேசுகிறவள் என்ற புகழைப் படைத்த சபரியே! நீ செய்து வந் திருக்கும் குரு சுச்ரூஷை பலிதம் பெற்றதாயிற்றா? இது ராமர் செய்த கடைசி ப்ரச்நம். சபரி தன் உடலை நெருப்பில் தள்ளி விட்டு, அவளுடைய ஆசார்யர்களுடைய திருவடிகளை அடையப்

போவதே அவள் செய்த குரு சுச்ருஷைகளுக்குத் தக்க பயனாய் ஏற்படப்போகின்றது. ஸ்ரீ ராமருடைய வாயால் அதை நீ பெற்று விட்டனையா? என்று இறந்த காலத்தை யிட்டுக்கேட்டது நிச்சயத்தை உணர்த்துவதாகும். அதை அறிந்தே வெகு மகிழ்ச்சியுடனும், பரம பக்தியுடனும் ராமர் செய்த ப்ரச்னங்களுக்குப் பின் வருமாறு சபரி பதிலளிக்கின்றாள்.

தன்னை க்ஷேமம் விசாரித்த ராமரைப் பணிந்து சபரி கூறியதாவது: 'ராமா, உன்னுடைய திவ்ய தர்சனத்தைப் பெற்றிருக்கும் எனக்கு என் தவமெல்லாம் இன்றே பூர்த்தியுடையதாயிற்று. என்னுடைய ஆசார்யர்களும் நன்கு பூஜிக்கப் பட்டவர்களானார்கள். எடுத்த ஜன்மமும் வீணாகாமல் நான் வேண்டினும் வேண்டாவிடினும் ஸ்வர்க்கம் என்னும் உயர்பதம் எனக்குக்கிட்டவே போகின்றது. ஏனெனில் என்னால் வழிபட்ட நீ தேவாதி தேவனன்றோ! புருஷோத்தமனும் அன்றோ. உன்னுடைய திருக்கண் பார்வையினால் பாபபுண்ணியங்கள் இரண்டுமே விடுபட்டு பரிசுத்தையாகிவிட்ட நான் உன்னருளையே காரணமாகக் கொண்டு என்றும் அழியாததான பரமபதம் சென்றடையப் போகின்றேன்.'

நீ சித்திரகூடமலையை வந்தடைந்தபோது, நான் எவருக்குள் சுச்ருஷைகளைச் செய்து வந்தேனோ, அந்த மஹர்ஷிகள் விமானங்களில் ஏறி வானுலகம் போனார்கள். அவர்கள் செல்லு முன் செய்துபோன ஆக்கினைப்படி நான் உம்மையும் லக்ஷ்மணரையும் உபசரிக்கவேண்டி பம்பைக் கரையிலுள்ள சுவையான கனிகளையும் கிழங்குகளையும், மற்றும் காட்டில் கிடைக்கும் உணவுகளையும் சேகரித்து வைத்திருக்கிறேன். அவற்றைக் கிருபை செய்து நீவிர் இருவரும் ஏற்பீராக, இவ்விதம் சபரி கூறியதைக் கேட்ட ராமர் 'ஹே சபரி! இந்த ஆச்ரமத்திலுள்ள விநோதங்களை தனுகபந்தன் வர்ணிக்கக் கேட்டேன். அதை நேரில் பார்ப்பதற்கு மிகவும் ஆவல் கொண்ட எனக்கு நீ விருப்பமிருப்பின் காட்டுவாயாக'' என்றார். சபரியும் வெகு சந்தோஷத்துடன் மதங்காச்ரமத்தை நாலாபக்கமும் சுற்றிக்காட்ட ஆரம்பித்தாள்.

பரிசுத்தாத்மாக்களால் அன்புடனும் பக்தியுடனும் தரப்பட்ட இலையோ, பூவோ, பழமோ அல்லது தண்ணீரோ எதையும் நான் தின்கின்றேன்' என்று பகவான் கூறியுள்ளார். சபரி தந்த கனி கிழங்கு வர்க்கங்களை ராம லக்ஷ்மணர்கள் ஸ்வீகரித்துக்கொண்ட பிறகே ஆச்ரமத்தைச் சுற்றிக்காட்டும்படி சபரியை வேண்டினார்கள். அவள் தந்த கனிகளை அமுதுசெய்து சபரிக்கு மோக்ஷம் அளித்தார் ராமர்.

"தடிப்பான மேகங்கள் சூழ்ந்திருப்பதுபோல் இருண்டதான இக்காட்டுப் பிரதேசம் மதங்கவனமென்று ப்ரஸித்தியுடையது. யோகத்தால் தங்கள் ஆத்ம ஸ்வரூபத்தைக் கண்டவர்களான என் ஆசார்யர்கள் இங்கே மந்த்ரமறிந்தவர்களுடைய மந்த்ரங்களால் பூஜிக்கத் தகுந்த திவ்ய தீர்த்தத்தைக் கூப்பிட்டு வரச்செய்தார்கள். மேலண்டையில் தலமுடையதாயிருக்கும் இந்த மேடையிலேதான் தள்ளாமையால் உதறலை உடைய தங்கள் கைகளால் அவர்கள் புஷ்ப பூஜை செய்வது வழக்கம். வயது முதிர்ச்சியாலும், பட்டினிகளாலும் தளர்ச்சி பெற்ற அவர்கள், ஸமுத்திரங்களில் சென்று ஆடுவதற்கு அசக்தியை அடைந்தவர்களாய் ஏழு ஸமுத்திரங்களையும் இங்கே வரும்படி செய்து அவைகளில் ஸ்நானத்தைச் செய்து கொண்டிருந்தார்கள். இன்றும் அவை இருக்கின்றதைப் பார். அவர்களுடைய மரவுரிகளும், அவர்கள் உபயோகித்த நீலோத்பலம் முதலிய புஷ்பங்களும், இன்றும் உலர்ந்து வாடாமல் இருக்கும் விந்தையைக் காண். இந்த வனத்தில் நீ பார்க்கவேண்டியதும், கேட்க வேண்டியதும் யாதொன்றுண்டோ அதை நான் உனக்குக் காண்பித்துக் கூறியாய்விட்டது. ஆகையால் உன்னிடம் விடைபெற்றுக்கொண்டு என் குருக்கள் சென்றிருக்கும் இடத்திற்கு நான் போவதற்குப் பேராவல் கொள்ளுகிறேன்" என்றாள் சபரி. இதைக்கேட்ட ராமர் என்ன ஆச்சர்யமிது! என்று பெரு மகிழ்ச்சியடைந்தார்.

"ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய ச்ரோதவ்ய:" என்றிருப்பது மறைமொழி. அதன்படி பார்க்கவேண்டியவரும், கேட்கவேண்டியவருமான ப்ரமாத்மஸ்வரூபியே ராமர். அவரை வேடுவச்சி ஒருத்தி நீ பார்க்கவேண்டியதைப் பார்த்தனையா? கேட்கவேண்டியதைக் கேட்டனையா? (இதம் த்ருஷ்டம் ச்ரோதவ்யம் ச சச்ருதம் த்வயா) என்றனள் என்றால் அவளுடைய பக்தியின் ஆர்வத்தை யாதென்று கூறுவது? ராமரே ஆச்சர்யம் என்றாரே யன்றி வேறொன்றும் மொழிவதற்குக் கூடாமல் இருந்தார், தம்முடைய தரிசனத்தைக் காட்டிலும், குருக்களிடம் போய்ச் சேருவதையே அதிகமென்று சபரி எண்ணி யிருப்பதை அறிந்த ராமர் 'அம்மா! சபரி உன்னால் பக்தியுடன் நன்றாக பூஜிக்கப்பட்டவன் ஆனேன். நீ எங்கு செல்லவேண்டுகின்றனையோ அங்கு தடையின்றிப் போகலாம்' என்றார்.

ராமரிடம் அநுஜ்ஞை பெற்ற சபரி உடனே தீயை வளர்த்து அதில் தன் கிழ உடலை எரியச் செய்து, திவ்ய ஸ்வரூபத்துடனும், திவ்ய ஆடை ஆபரணங்களுடனும் மின்னல் கொடியைப்போல்

2

மின்னிக்கொண்டு தன்னுடைய ஆசார்யர்களின் திருவடியைச் சென்றடைந்தாள்.*

சபரி இவ்விதம் பிறவி நீங்கப் பெற்றபின் ராமர் சிறிது நேரம் யோஜனையில் ஆழ்ந்தார். பிறகு லக்ஷ்மணரைப் பார்த்து "சபரியின் தர்சனமும் அவள் காட்டிய தீர்த்தத்தில் நீராடியதும் என்று மில்லாத சாந்தியை என் மனதிற்குத் தருகின்றன. என்னுடைய துக்கங்களெல்லாம் தொலைந்து விட்டன. சுபங்கள் என்னை எதிர்கொண்டழைக்கின்றன. இந்த விதமான மனப் பான்மை எனக்கு உண்டாகியிருப்பது எனக்கு வாப்போகும் ஸந்தோஷத்தை அறிமுகப் படுத்துகின்றது. ஏனெனில், ஒருவருடைய மனமன்றோ மேலுள்ள சுபவிளைவை ஒருவன் முன் அறிவதற்கு உதவி புரிகின்றது?" என்று சொல்லிவிட்டுப் பம்பைக் கரையிலே உள்ள அழகான காட்டின் வழியே சென்று தனக்கு வரப்போகும் கல்யாணங்களே குன்றுருவெடுத்து இருப்பன போல் விளங்கும் ரிச்யமூக மலைத்தொடர்களைப் பார்க்கலானார்.

(ஸாஹித்ய வல்லப ஸாரஸ்வத ஸாரக்ஞ தி. சுந்தராசாரியார், B.A., B.L. இயற்றியுள்ள ஆரண்ய காண்ட விமர்சனத்திலிருந்து)

* இன்றும், பரமபதம் அடைந்தார் என்பதை, ஆசார்யன் திருவடிகளை அடைந்தார் என்று சொல்லுவது வைஷ்ணவர்கள் வழக்கம்.

என் கையில் ரூபாய்,
உன் கையில் ராமர்!

●

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு தினம் மாலையில் என்னுடைய காரியாலயத்தில் வழக்கு தஸ்தாவேஜுகளைப் படித்துக் கொண்டிருந்த சமயம் ஒரு ஸாது என்னிடம் வந்து பத்து ரூபாய்கள் தரும்படி கேட்டார். வழக்கு தஸ்தாவேஜுகளில் ஆழ்ந்திருந்த என்னைத் தொந்திரவு செய்த அந்த ஸாது மீது மிகவும் ஆத்திரமடைந்து அவரை "வெளியே போ என்று சப்தமிட்டேன்.

ஆனால் அந்த ஸாது அசையாமல் அப்படியே நின்றார்.

"குழந்தாய் ஸ்ரீராமர் உன்னிடம் மிக அன்புள்ளவனாக இருக்கிறார் என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் நான் அவரைத் திரும்பவும் "வெளியே போ" என்று சப்தமிட்டேன்.

"உன் கையைப் பார்த்துக் கொள் ஸ்ரீராமருடைய அருளின் தெளிவு உன் கையில் பூரணமாய் நீயே காணலாம். எனக்கு பத்து ரூபாய்கள் கொடு" என்று திரும்பவும் அந்த ஸாது கேட்டார். நான் என்ன செய்கிறேன் என்று அறியாமலேயே என் வலது கையை நோக்கினேன். என் உள்ளங்கையில் தேவநாகரி லிபியில் கருப்பு மையில் "ஸ்ரீராம்" என்று எழுதியிருந்ததைக் கண்டதும் திகைத்தேனென்று சொல்ல வேண்டுமா? நான் உணர்வோடிருக்கிறேனா அல்லது கனவுதான் காண்கிறேனா என்று எனக்கே தூக்கிவாரிபோட்டது. நான் அமர்ந்திருந்த நாற்காலியிலிருந்து எட்டு அடி தூரத்தில் தான் ஸாது நின்றுகொண்டிருந்தார்.

என் அருகில் வரவுமில்லை; என்னைத் தொடவுமில்லை. என் கையில் எழுதவும் மில்லை. வாயைத் திறவாமல் என் பையிலிருந்த பணப்பையை எடுத்து அதிலிருந்த இருபத்தைந்து ரூபாயை ஸாதுவிற்குக் கொடுத்தேன்"? பணத்தைப் பெற்றுக் கொண்டு என்னை ஆசிர்வதித்து விட்டு ஸாது என் அறையை விட்டுப் போனார்.

கையிலிருந்த அக்ஷரங்களைப் பிறகு ஸோப்பிட்டுத்தான் அழிக்கவேண்டி வந்தது.

யோக சாதனைகளுக்கு இது தான் எனக்கு முதன் முதலாகக்

கிடைத்த அனுபவம். ஸாது போனபின்பு சற்று யோசனை செய்து பார்த்ததில் இது ஒரு கண் கட்டி வித்தையென்றே தோன்றிற்று.

என்னிடம் வந்த ஸாதுவிற்கு இதைத் தவிர வேறு சாதனைகள் ஒன்றும் செய்யத் தெரியாமலு மிருக்கலாம். அதெல்லாம் எப்படி யிருப்பினும் யேகஸாதனைகளுக்கு என்னுடைய இந்த அனுபவம் தக்கத் தெளிவாகு மென்பதற்கு ஐயமில்லை. இம் மாதிரி சாதனைகள் இயற்கைக்கு விரோதமானவை அல்ல; ஆனால் இயற்கையில் எந்த நியதிகளுக்குக் கட்டுப்பட்டு இந்த ஸாதனைகள் நிகழ்கின்றன வென்பது தான் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயம்.

—K. M. Munshi

மாலா

கலை, இலக்கிய மாதப் பத்திரிகை.

விலை 6 அணா

பிரதி மாதம் முதல் வாரம் வெளிவருகிறது

சிறந்த கதைகளும், கட்டுரைகளும், சினிமா செய்திகளும், படங்களும் வெளிவருகின்றன

விவரங்களுக்கு :—

மாலா

சதர்ன் அவின்யூ

ஆள்வார்பேட்டை, மதறாஸ்-18

Mercury Chit Funds Ltd.

22-A, Narasingapuram Street
MOUNT ROAD, MADRAS

DIRECTORS :

K. M. Subramaniam
10, Ramanujam Street
T. NAGAR

K. R. Subramania Iyer
22-A, Narasingapuram St.
MOUNT ROAD, MADRAS

K. A. Venkatachalam
10, Ramanujam St., T. Nagar

STARTING ON 7th APRIL 1955
NEW SERIES OF AUCTION CHITS

20	TICKETS	OF	Rs.	250/-	(CAPITAL	Rs.	5,000)
20	,,	,,	,,	50/-	,,	,,	1,000
20	,,	,,	,,	25/-	,,	,,	500/-

Particulars on Application

K. R. SUBRAMANIA IYER
Managing Director.

தீ(ச்) சுவை!

●

வெகுகாலத்திற்கு முன்பு சீனவில் பன்றிகளை அடைத்து வைத்திருந்த ஒரு குடிசையில் தீ பிடித்துக்கொண்டது. அங்கு அகப்பட்டுக்கொண்ட அங்கிருந்த பன்றிகள் வெந்து இறந்தது. தீயை அணைத்தவுடன் அதன் சொந்தக்காரன் பன்றியை வெளியேற்றிக் கொண்டிருந்தபோது பன்றியின் வெந்த உடல் சொந்தக்காரனின் கையைச் சுட்டுவிட்டது. உடனே இவன் கையை தன் வாயில் வைத்துக்கொண்டபோது தற்செயலாக நாக்கு கையில் ஒட்டிக்கொண்டிருந்த பன்றியின் மாமிசத்தை ருசி பார்த்துவிட்டது. அவ்வளவுதான்! அது அவனுக்குப் புதுமாதிரியாகவும் சுவையானதாகவுமிருந்தது. பின்பு பன்றியின் மாமிசத்தை எடுத்து ருசி பார்த்தான். இதைத் தன் தகப்பனுக்கும் கொடுத்தான். இவ்வாருகத் தந்தையும் தனயனுமாக அந்தப் பன்றியின் மாமிசம் முழுவதையும் தின்றுவிட்டார்கள்.

பிறகு அவனது பன்றிக் குடிசை அடிக்கடி தீப்பிடித்துக் கொள்ள ஆரம்பித்தது. இதன் மர்மம் பக்கத்திலிருந்த பலருக்கும் புரியாமலேயிருந்தது.

நாளாவட்டத்தில் பக்கத்திலிருந்த பன்றிக்குடிசைகள் யாவுமே தீப்பிடித்துக்கொள்ளத் தொடங்கின. இவ்வாறே சீனர்கள் பன்றியின் மாமிசத்தை உண்பதற்குத் தெரிந்து கொண்டனர்.

வெளியே பக்தி, உள்ளத்திலே?

●

ஒரு தினம் காலையில் நாங்கள் சென்றுகொண்டிருந்த பஸ் அதிவேகமாகச் சென்றுகொண்டிருந்தது. திடீரென பாதையோரத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவர் கை காட்டியதால் டிரைவர் பஸ்ஸை நிறுத்தினர். ஒரு தள்ளாத முதியவர் பஸ்ஸில் ஏறினர். அவர் தலையில் ஒரு முண்டாசும் கையில் ஒரு பையுமிருந்தது. பஸ்ஸில் முதியவர் அமர்ந்தவுடன் பையிலிருந்து ஒரு படத்தை யெடுத்து அதிலிருந்த வாசகங்களைப் பாராயணஞ் செய்யத் தொடங்கினர். அயலூருக்குச் சென்றுகொண்டிருந்த எங்கள் பஸ் சுங்கச்சாவடியில் சிறிது நேரம் நின்றது. பஸ் பிரயாணிகளின் மூட்டை முடிச்சுகளைச் சோதிப்பதற்காகச் சுங்க அதிகாரி ஒருவர் பஸ்ஸில் ஏறுவதைக் கண்டு முதியவர் முகத்தில் எதிர்பாராத விகாரங்கள் ஏற்பபட்டன. பக்கத்து "ஸீட்டு'களில் அமர்ந்திருந்த பிரயாணிகளை நோக்கி மெல்லிய குரலில் முதியவர் "இம்மாதிரி ஏன் பிரயாணிகளை உபத்திரவம் செய்கிறார்கள் அதிகாரிகள்" என்று முணுமுணுத்தார். இந்த முணுமுணுப்பைக் கேட்ட சுங்க அதிகாரி முதியவரிடமே நேரே பாய்ந்தார்.

"நீ எதைத் தொட்டாலும் என் கையிலிருக்கும் புனிதமான படத்தைத் தொடக்கூடாது பத்திரம்" என்று கூச்சலிட்டார் முதியவர்.

"நான் என் கடமையைத் தான் நிறைவேற்றுகிறேன்" என்று கூறிக்கொண்டே முதியவர் கையிலிருந்த படத்தைப் பிடுங்கிக் கீழே எறிந்தார் அதிகாரி.

இந்த நிகழ்ச்சிகளைத் திகைப்புடன் கவனித்துக்கொண்டிருந்த மற்ற பிரயாணிகள் படத்தின் பின்னல் மிகத் தந்திரமாக ஒளித்து வைத்திருந்த ஒரு அபினிப்பொட்டலம் கீழே விழுந்ததைக் கண்டு திகைத்தனர். படத்தைத் தொடக்கூடாதென்று ஆட்சேபித்த முதியவரான "பக்தர்" போலீஸாரிடம் சிக்கிக்கொண்டார் என்று கூறவேண்டியதில்லையே!

—Almas Razvi *in Caravan.*

அமுத மொழிகள்

முகத்தை மட்டும் மினுக்கி அழகுபடுத்தாதே. அகத்தையும் அழகுபடுத்து. அப்பொழுதுதான் ஆண்டவன் அடிகள் உன் அகத்தில் பதியும்.

★

பொறுமையை ஒழி. அதுவே பூசலை அடக்கும் முதல் வழி.

★

நீ பிறருக்கு தொண்டு புரி. அது ஆண்டவனுக்கு மட்டுமின்றி அடியார்கள் அனைவருக்குமே நீ செய்யும் தொண்டாகும்.

★

இருப்பதை வைத்து நீ பெருமை கொள். இல்லாததை நினைத்து வருந்தாதே.

★

நீயே உன்னைப் புகழ்ந்து கொள்ளாதே. பிறர் உன்னைப் புகழுமாறு நடந்துகொள்.

★

நீ உலகில் தோன்றியது உனக்காகவும் உன் நன்மைக்காகவும் அல்ல. பிறருக்கு பணிசெய்து அதனால் பேரின்பம் அடைவதற்கே.

★

மனச்சோர்வு உடையவனுக்கு வாழ்க்கை பாலைவனமாகத் தோன்றும். மகிழ்ச்சியுடையவனுக்கு அது ராஜபாதையாகத் தோன்றும்.

★

ஊக்கம் உன்னுடலிலுள்ள உயிருக்குச் சமானம். அதை இழந்தால் நீ உயிரற்ற நடைபிணத்துக்குச் சமம்தான்.

★

சுயநலம் என்னும் உனது சொத்தை தூரத்தில் எறிந்துவிட்டு பிறர் நலம் என்னும் பொருளை அடையப் பிரயாசைப் படு.

—தொகுத்தவர்: V. K. சேதுராம்.

தனுஷ்கோடிக்குத் திகில்

இந்தியாவில் சமுத்திரம் நிலப் பகுதிகளை ஆக்கிரமிப்பதைப்பற்றிச் சென்ற இதழில் நீங்கள் படித்தீர்கள். ராமர் ராவணனுக்கெதிரே யுத்தம் செய்வதற்குத் தனது சைன்யங்களை கொண்டு செல்வதற்கு நிலைக்களமாக இருந்த ஸேது இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் சமுத்திரத்திற்கு இரையாகிவிடுமென்று கூறுகிறார்கள் நிபுணர்கள்.

சமுத்திரத்திற்குள் வெகுவேகமாக சென்று கொண்டிருக்கும் ஸேதுவிற்குப் பதிலாக இலங்கை செல்வதற்கு மற்றொரு துறையைக்கண்டுபிடித்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு நிபுணர்கள் எச்சரிக்கையும் செய்துள்ளார்கள். மத்திய சர்க்கார் ரெயில்வே மந்திரி ஸ்தலத்திற்கு நேரடியாக வந்து நிலைமையை அறிந்து கொண்டு விட்டார்.

தனுஷ்கோடியில் சென்ற நாற்பது வருஷங்களில் சமுத்திரம் ஐந்து மைல் வரையில் ஆக்கிரமித்துள்ளது. இந்த ஆக்கிரமிப்பால் நீருக்குள் மூழ்கிவிட்ட கட்டிடங்களில் ஆஸ்பத்திரியுமொன்றாகும். சென்ற இரண்டு வருஷத்தில் சமுத்திரம் ஒரு பர்லாங்கு தூரம் முன்னுக்குவந்துவிட்டது. தனுஷ்கோடி ரெயில்வே ஸ்டேஷன் இப்போது சமுத்திரத்திலிருந்து இரண்டே பர்லாங்கு தூரத்திலிருக்கிறது. இந்த இரண்டு பர்லாங்கு நிலப்பகுதியும் வரும் இரண்டு மூன்று வருஷங்களுக்குள் மறைந்துவிடலாமென்பது நிபுணர்களில் அபிப்பிராயம்.

சென்ற பத்து வருஷங்களில்



ராமநாதேசுரர் வீற்றிருக்கும் ஆலயத்தின் மேற்குக் கோபுர தரிசனம்

சாக்கார் சிப்பந்திகளுக்காகக் கட்டப்பட்டுள்ள பத்து வீடுகள் சமுத்திர ஆக்கிரமிப்பினால் மறைந்து விட்டன. சமுத்திரக் கரை ஓரத்தில் வாழும் செம்படவர்களின் கதி மிகவும் பரிதாபகரமானது. தங்களை விழுங்குவதற்காக முன்வந்து கொண்டேயிருக்கும். சமுத்திரத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிப்பது தான் இவர்களது அன்றாட பிரச்னையாக இருக்கிறது.

தனுஷ்கோடிக்கும் ராமேஸ்வரத்திற்கும் இருபத்துநான்கு மைல் தூரமிருந்தாலும் இவையிரண்டும் ஒரே தீவில் தானிருக்கின்றன. பாரத நாட்டு மக்களனைவரும் ஒருமிக்க போற்றும் புனிதஸ்தலம் ஆகும் ராமேஸ்வரம். ராமேஸ்வர யாத்திரை புரியும் அனைவரும் அராபிக்கடலும் வங்காளக்குடாக் கடலும் சந்திக்குமிடமான தனுஷ்கோடிக்குச் சென்றும் சமுத்திர ஸ்நானம் செய்வது வழக்கம்.

இயற்கையன்னை தனுஷ்கோடியை ஒரு சௌந்தர்ய நகரமாகச்சிருஷ்டித்துள்ளாள். செம்படவர்களையும் சுங்க அதிகாரிகளையும் தவிர புரோகிதர்களும், பிச்சைக்காரர்களும் தான் பெரும்பாலும் தனுஷ்கோடி வாசிகளாவார்கள்.



அக்னி தீர்த்தத்தருகில் தரிசனம் அளிக்கும் கீழ்க்கோபுரம்
வெளியில் தெரிவது வெள்ளி ரதம்

'தனுஷ்கோடி' யென்றால் ஒரு கோடி வில்கள் என்று அர்த்தம். ஒரு கோடி வில் என்ற வார்த்தையின் முக்கிய கருத்து ராமபாணத்தின்மகோன்னத சக்தி ஒரு கோடி வில்களிலிருந்து எய்யப்படும் அம்புகளுக்குச் சமமாகும் என்பதாகும். கோடி என்ற பதத்தின் அநேக வியாக்கியானங்களில் ஒன்று இவ்வாறாகும். ஒரு கோடி புண்ணிய நதிகள் ஒன்றாகச் சேருமிடம் இது. "நீ ஸ்நானம் செய்தால் உன் பாபங்களைக் களைவதற்கு மற்றெந்த நதிகளையும் தேட வேண்டியதில்லை."

வியாக்கியானங்கள் எவ்வாறிருப்பினும்

தனுஷ்கோடி யென்பது ஒரு கவியின் கனவாகும். தியாக ராஜ ஸ்வாமிகள் போன்ற மகான்கள் அனைவரும் தனுஷ் கோடியைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்துள்ளார்கள்.

சமுத்திரம் இவ்வளவு வேகமாக முன்னுக்கு வந்து கொண்டிருந்தாலும் ராமேஸ்வரத்திலுள்ள புனிதமான ஸ்ரீராமரின் ஆலயத்தைப் பற்றி எவரும் கவலைப்படுகிறதில்லை. ஏனென்றால் ராமேஸ்வரத்தில் குடி கொண்டுள்ள ஸ்ரீ ராமனுதர் உள்ள வரையிலும் சமுத்திரம் சற்று பணிவுடன் ஒதுங்கியே தானிருக்கு மென்பதே பொது மக்களின் நம்பிக்கை.



ஸ்ரீ பர்வத வர்த்தினி சமேதராய் வீற்றிருக்கும்
ஸ்ரீ ராமநாதேசுரர் சந்நிதான விமானத் தோற்றம்

விலங்கிட்டும் வேலைத்தனம்!

மத்தியப்பிரதேச மாகாணத்தில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு இரு கைதிகளைக் கைகளில் விலங்கிட்டு ஜவான்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்வதற்காக பஸ்ஸில் அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள். ஜவான்களின் கட்டுக்காவலிலிருந்தும், கைகளில் விலங்குகளிட்டிருந்தும் அந்த பஸ்ஸில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த பிரயாணிகளின் பைகளை மிக சாமர்த்தியமாக ஜேபடி செய்தார்கள் இந்தக் கைதிகள்!

சிருஷ்டி — ஒரு கண்ணாடி

உண்மையில் உலகத்தில் துஷ்டன் இருக்கிறான் அல்லது இல்லை என்பதைத் தீர்மானிப்பது யார்? உண்மையான துஷ்டன் உன் எதிரில் தோன்றினாலும் இவன் ஆண்டவனே என்று பாவித்துக்கொள். அவன் துஷ்டனாயிருந்தபோதிலும் மகாத்மாவாய் மாறிவிடுவான். அப்படியானால் பொய்யாகவே இவ்வாறு பாவிப்பதா? அவன் துஷ்டனே என்று யாருக்குத் தெரியுமென்று நான் கேட்கிறேன். சிலர், "நல்லவர்கள் தாம் நல்லவர்களாயிருப்பதால் அவர்களுக்கும் எல்லாம் நல்லதாய்த் தோன்றுகிறது" என்கிறார்கள். ஆனால் உண்மையில் இவ்வாறு ஒன்றும் நடப்பதில்லை. அப்படியானால் உனக்கு எது தோன்றுகிறதோ அதையும் உண்மை என்று எப்படிக்கொள்வது? துஷ்டர்களிடம் மட்டுமே சிருஷ்டியைப் பற்றிப் பூரணமாய் அறிந்து கொள்வதற்கு வேண்டிய சாதனங்கள் உள்ளன போலும்! சிருஷ்டி நல்லது தான்; ஆனால் நீ துஷ்டனாயிருப்பதால் அது உனக்குத் தீயதாய்த் தோன்றுகிறது என்று ஏன் சொல்லக்கூடாது? சிருஷ்டி என்னவென்பதைப் பார். அது ஒரு கண்ணாடி. நீ எப்படியிருக்கிறாயோ அப்படியேதான் உனது பிரதி பிம்பம் எதிரிலுள்ள சிருஷ்டியில் உனக்குத் தோன்றும். நமது கண் எப்படியிருக்கிறதோ அப்படியே தான் சிருஷ்டியின் உருவும் காணப்படும். ஆகையால் இந்த சிருஷ்டி நல்லது, புனிதமானதென்று எண்ணிக்கொள். உன் சாதாரணக் காரியங்களிலும் இத்தகைய பாவனை இருக்கும்படி செய். பிறகு எத்தகைய அற்புதம் நிகழ்கிறதென்று பார்! பகவான் இதே விஷயத்தை அறிவுறுத்த விரும்புகிறார் :

> "எதை உண்டாலும் செய்தாலும், ஓமம் செய்தாலும்
> தவம் புரிந்தாலும்
>
> தானம் முதலியன செய்தாலும் அனைத்தையும்
> எனக்கே அர்ப்பணமாகச் செய்"

நீ எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் அப்படியே பகவானிடம் சமர்ப்பித்துவிடு.

என்தாய், என் பிள்ளைப் பிராயத்தில் ஒரு கதை சொல்வது வழக்கம். விஷயம் வேடிக்கையானது தான், ஆனால் அதில் அடங்கி யுள்ள கருத்து மிகவும் முக்கியமானது. ஒரு பெண் இருந்தாள். அவள் தான் எதைச் செய்தாலும் கிருஷ்ணார்ப்பணமாகச் செய்வ தென்று உறுதி கொண்டிருந்தாள். அவள் செய்து வந்ததென்ன? அடுப்பை மெழுகிவிட்டு எஞ்சும் சாணத்தை உருண்டையாய் உருட்டி வாயிலில் எறியும்பொழுது கிருஷ்ணார்ப்பணம் என்று சொல்லுவாள். இதனால் நடந்தது என்னவென்றால், அந்தச் சாண உருண்டை அங்கிருந்து எழும்பிக் கோயிலிலுள்ள கிருஷ்ண விக்கிரகத்தின் முகத்தில் போய் ஒட்டிக்கொள்ளும். அர்ச்சகர் பாவம், விக்கிரகத்தை தினமும் கழுவிக் கழுவிக் கை சளைத்துப் போய்விட்டார். அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இறுதியில் இது அந்தப் பெண்ணின் வேலை என்று தெரியவந்தது. அந்தப் பெண் உயிரோடிருக்கும் வரையில் விக்கிரகம் துப்புரவாய் இருப்பது சாத்தியமில்லை. ஒரு நாள் அந்தப் பெண் நோயுற்றாள். சாகுந்தருணம் நெருங்கிவிட்டது. அவள் சாவையும் கிருஷ்ணார்ப் பணம் ஆக்கிவிடவே கோயிலிலிருந்த விக்கிரகம் வெடித்து விழுந்து விட்டது. பெண்ணை அழைத்துப் போவதற்காக ஆகாயத் தில் விமானம் வந்து நின்றது. அவள் விமானத்தையும் கிருஷ்ண னுக்கு அர்ப்பணம் செய்து விட்டாள். வந்த விமானம் கோயிலில் போய் மோதி சுக்குநூறாகிவிட்டது. சுவர்க்கமும் ஸ்ரீ கிருஷ்ணனின் நினைவின் முன் வீணே.

இதன் கருத்தென்னவென்றால், நாம் நல்லதோ தீதோ எந்தக் காரியம் செய்தபோதிலும் எல்லாவற்றையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்து விடுவதனால் அவைகளில் ஒரு புதிய சக்தி தோன்றிவிடுகிறது. மக்காச் சோளம் சிறிது மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறமுள்ளது. ஆனால் அதையே மணலில் இட்டுப் பொரிக்கும் பொழுது எவ்வளவு நல்ல பொரியாகி விடுகிறது! நல்ல வெண்மை யும் தும்பைப் பூவைப் போன்ற மென்மையும் உள்ள அந்தப் பொரியை அந்தச் சோளத்தின் பக்கத்தில் வைத்துப் பார்த்தால் இரண்டிற்கும் எவ்வளவு வேற்றுமை! ஆனால் அந்தப் பொரி இந்தச் சோளத்திலிருந்தே ஆனது என்பதில் ஐயமில்லை. இந்த வேறுபாடு வெறும் தீயினால் ஏற்பட்டது. இவ்வாறே அந்த

கெட்டியான சோளத்தை இயந்திரத்திலிட்டு அரைப்பாயானல் அது மிருதுவான மாவாய்விடும். தீயின் சேர்க்கையினல் பொரியானது போல் இயந்திரத்திலிட்டு அரைத்ததனல் மிருதுவான மாவாய்விட்டது. இவ்வாறே நமது எந்தச் சிறிய காரியத்திலும் ஆண்டவன் நினைவைச் செலுத்தும்பொழுது அதன் உருவே மாறி விடும். பாவனையினல் மதிப்பு உயர்ந்து விடுகிறது. அந்தச் சாதாரணக் கொன்றைப் பூவையும் வில்வ இலைகளையும் துளசிக் கொழுந்தையும் அருகம்புல்லையும் இழிந்தவையென்று நினையாதே.

"ராம நாமக் கலப்பினல் இனிப்பாய்விட்டது"*

ஒவ்வொரு விஷயத்திலும் பகவானை இணைத்துப்பின் அது எப்படியிருக்கிறதென்று பார். இந்த இராமன் என்ற கலவையைப் போன்றதொன்று உண்டா? இந்தத் தெய்வீகக் கலவையை விடச் சிறந்ததொன்றை நீ எங்கிருந்து கொணர்வாய்? ஆண்டவனென்ற இந்தக் கலவையை உனது ஒவ்வொரு காரியத்திலும் கலந்துவிடு. பிறகு எல்லாம் அழகும் இனிமையும் பெறும்.

இரவு எட்டு மணிக்கு கோயிலில் தீபாராதனை நடக்கும் பொழுது, சாம்பிராணி மணம் பரவிக்கொண்டிருக்கும் பொழுது, விளக்கொளி செய்யப்படும்பொழுது, கற்பூர ஆரத்தி நடைபெறும் பொழுது நாம் உண்மையில் ஆண்டவனை நம்முன் காண்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. பகவான் பகல் முழுவதும் விழித்திருந்தார். இப்பொழுது அவர் உறங்கவேண்டிய சமயமாய் விட்டது. பக்தர்.

"இனிது கண் வளர ஏகுவாய், கண்ணு!" *

என்று பாடுகிறர்.

ஒரு சந்தேகாத்மா, "போ ஐயா, ஆண்டவன் எங்கேயாவது தூங்குவதுண்டா?" என்று கேட்கிறர்.

பகவான் என்னதான் செய்யமாட்டார்? முட்டாளே, பகவான் தூங்குவதில்லை, விழிப்பதில்லை என்றால் இந்தக் கல்

---

* " तुका म्हणे चवी आलें। जें का मिश्रित विठ्ठलें "

* " आतां स्वामी सुखें निद्रा करा गोविंदा "

தூங்கவும் விழிக்கவும் செய்யுமா? தம்பி, பகவான் தான் தூங்குகிருர், பகவான்தான் விழிக்கிருர், பகவான்தான் உண்டு உடுத்துகிருர். துளசிதாஸர் பொழுது புலர்ந்ததும் பகவானை எழுப்புகிருர், எழுமாறு வேண்டுகிருர்—

"ரகுநாத குமாரா, விழித்தெழுவீர்!
பக்ஷிகள் வனத்தில் பேசின"

தம் சகோதர சகோதரிகளை, ஆண் பெண் அனைவரையும் இராமசந்திரனென்றே கொண்டு அவர் "என் இராமர்களே, எழுவீர்" என்கிருர். எவ்வளவு அழகிய கருத்து! இல்லையேல் ஒரு உணவு விடுதியை எடுத்துக்கொள்ளுங்கள். அங்குள்ள பிள்ளைகளை எழுப்பும்பொழுது, "எழுகிறீர்களா இல்லையா?" என்று அதட்டுகிருர்கள். மங்களமான காலை நேரத்தில் இத்தகைய கடூரமான குரல் நன்ருயிருக்கிறதா? விச்வாமித்திரருடைய ஆசிரமத்தில் இராமசந்திரர் தூங்கிக்கொண்டிருக்கிருர். விச்வாமித்திரர் அவரை எழுப்புகிருர். வால்மீகி ராமாயணத்தில் அது இவ்வாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது:—

"रामेति मधुरां वाणी विश्वामित्रोऽभ्यभाषत।
उत्तिष्ठ नरशार्दूल पूर्वा सन्ध्या प्रवर्तते॥"

(ராமேதி மதுராம் வாணீ விஸ்வாமித்ரோப்ய ப்ரஷத |
உத்திஷ்ட நரசார்தூல பூர்வாஸந்தயா ப்ரவர்த்ததே ||)

'குழந்தாய் ராமா, எழு!'— இவ்வாறு இனிய குரலில் விச்வாமித்திரர் அவரை எழுப்புகிருர். இந்த முறை எவ்வளவு இனிதாயிருக்கிறது! உணவு விடுதியில் எழுப்பும் அந்த முறை எவ்வளவு கடூரமாயிருக்கிறது! பாவம், உறங்கும் பிள்ளைகளுக்கு தங்கள் ஜன்ம விரோதி ஒருவன் வந்து எழுப்புவதாகவே தோன்றும்! முதலில் மெல்லக் கூப்பிடு, பிறகு சிறிது உரக்கக் கூப்பிடு. ஆனல் கடூரம், கடுமை சிறிதும் கூடாது. எழாவிடில் பத்து நிமிஷம் தாழ்த்தி மீண்டும் சென்று எழுப்பு. இன்று இல்லையேல் நாளை கட்டாயம் எழுந்து விடுவானென்று நம்பு. அவனை எழுப்ப இனிய கீதங்களை, பள்ளி எழுச்சிப் பாடல்களை ஸ்தோத்திரம் முதலியவற்றைச் சொல்லு. தூங்குபவனை எழுப்புதல் என்பது ஒரு சாதாரணக் காரியம். ஆனல் நாம் அதையும் எவ்வளவு காவியமயமாய், உள்ளம் கலந்ததாய், அழகாய்ச் செய்ய

லாம்! பகவானையே எழுப்புவது போல் ஆக்கிவிடலாமே! ஆண்டவனுடைய மூர்த்தியை மெதுவாகவே எழுப்பவேண்டும். தூக்கத்திலிருப்பவனை எழுப்புவதும் ஒரு சாஸ்திரமே.

தன் காரியங்கள் அனைத்திலும் இந்தக் கருத்தைப் புகுத்து. போதனை 'சாஸ்திரத்திலோ இந்தக் கற்பனை மிகவும் தேவை, பிள்ளைகள் யார்? ஆண்டவனுடைய உருவங்களே. நான் இந்த தேவதைகளுக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கிறேன். என்ற பாவனையே ஆசிரியருக்கு இருக்கவேண்டும். அப்பொழுது அவர் பிள்ளைகளிடம், "போ வீட்டிற்கு. இந்த மணி முழுமையும் நில், நீட்டு கையை, சட்டை துணியெல்லாம் எவ்வளவு அழுக்கு! கை, மூக்கு எல்லாம் என்ன ஆபாசம்!" என்றெல்லாம் அதட்டமாட்டார். அதற்கு மாறாக மெதுவாய் மூக்கைத் துடைத்து விடுவார்; அழுக்குத் துணியைத் துவைத்துக் கொடுப்பார்; கிழிந்த துணியை தைத்துக் கொடுப்பார். ஆசிரியர் இவ்வாறெல்லாம் செய்தால் அதற்கு நல்ல விளைவு உண்டாகும். அடியினாலும் கண்டிப்பினாலும் எங்கேனும் நன்மை விளைந்ததுண்டா? பிள்ளைகளும் இதே தெய்வீக பாவனையுடன் ஆசிரியரிடம் நடந்துகொள்ளவேண்டும். ஆசிரியர், சீடர்களை கடவுள் என்றும் சீடர்கள் ஆசிரியரைக் கடவுளென்றும் கொள்ளவேண்டும். இத்தகைய பாவனை பரஸ்பரம் இருந்து வருமானால் கல்வி எவ்வளவு சிறந்ததாய் அமையும்! பிள்ளைகளும் பகவான், ஆசிரியரும் பகவான்! பிள்ளைகள், 'இவர் நம் ஆசிரியர் அல்ல பகவான் சங்கரரே; நாம் அவருடைய போதனை என்ற அமுதைப் பருகி வருகிறோம், அவருக்குப் பணி புரிந்து அறிவு விளக்கப் பெறுகிறோம்' என்று எண்ணுவார்களானால் அவர்கள் அவரிடம் எப்படி நடந்துகொள்வார்களென்று நீங்களே சொல்லுங்கள்.

[மூலம்: ஆச்சார்ய விநோபாஜியின் கீதைப் பேருரைகள் சர்வோதயப் பிரசுரம்.]

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்
அசோகா உற்சாகம் தரும்

தந்தை சொல்லிய மந்திரம்

கார்த்திகைத் திருநாள். விஷ்ணு ஆலயத்தில் உற்சவம், ஸ்வாமி புறப்பாடு கழிந்து கோவிலுக்குத் திரும்பியாயிற்று. அன்று முழுவதும் நச நச வென்று மழை பெய்துகொண்டே இருந்தது. நல்லவேளையாகச் சிறிது நேரம் மழை நின்றிருந்த போது சுவாமியின் ஊர்வலம் நடந்தேறியது.

ஸ்வாமி கோவிலின் முன் வந்ததும் வழக்கப்படியுள்ள ஆரத்தி வைபவங்கள் கழிந்தன. கோவில் சிப்பந்திகள் வலம் வந்து மரியாதைகளைப் பெற்றனர். மேளக்காரரும் வலம் வந்தாயிற்று. "சொக்கப்பனை" கொளுத்த வேண்டியதுதான் பாக்கி.

ஸ்வாமியை நிறுத்தி இருந்தவிடத்திற்குச் சுமார் நூறு கஜ தூரத்தில் தென்னங்கீத்துக்களாலும் பனையோலைகளாலும் கட்டப்பட்ட ஒரு பெரிய கூடு. தேரின் கூடுபோல் வேயப்பட்டிருந்தது. ஸ்வாமிக்குக் கடைசியாக கற்பூரத்தீயால் திருஷ்டி கழித்து அக் கற்பூரத்தை எடுத்துச் சென்று "சொக்கப்பனை"யில் இட்டார் பட்டாச்சாரியார்.

சொக்கப்பனை தீ பிடித்துக்கொண்டது. எல்லோரும் ஒதுங்கி நின்றனர். ஒரு கணப்பொழுதில் தீ மள மளவென்று பரவியது. நூறு கஜத்திற் கப்பாலிருப்பவருக்கும் தீயின் உஷ்ணம் தாங்க முடியவில்லை. பரவிக்கொண்டே போன தீப் பிழம்பு வானத்தையே தொட்டது. நிலவு இருப்பதாகவே தெரியவில்லை இச்

சொக்கப்பனையின் ஒளியில். எல்லாம் ஒரு நிமிஷந்தான். தேர் போல் கட்டப்பட்டிருந்த சொக்கப்பனை சிதைந்து விழுந்தது—எரிந்து சாம்பலாயிற்று. வெளிச்சத்தைக் கண்டவருக்கெல்லாம் கண் இருண்டுவிட்டது. தீவட்டி வெளிச்சத்திற்கு பொருத்தம் பெற 5 நிமிஷங்களாயிற்று. பிறகு சுவாமி கோவிலுக்குள் எழுந்தருளினர். தந்தையும் மகனும் நின்றவிடத்தை விட்டு நகரவேயில்லை. எல்லோரும் கோவிலுக்குள் சென்ற பிறகு தந்தை சொன்னர்.

"மகனே! பார்த்தாயா? இவ்வளவு படாடோபமாக எரிந்த சொக்கப்பனை என்னவாயிற்று? சுமார் பத்து வண்டி ஓலையும் கீற்றும் எரிந்துவிட்டதே, இதிலிருந்து ஒரு பலம் சாம்பலாவது, கரியாவது கிடைக்குமா? பாரப்பா பார். வானளவு எட்டிய தீ! கண்ணைப் பறித்த வெளிச்சம்! நூறு கஜத்திற்கப்பாலும் தாங்கமுடியாத வெப்பம். அப்பப்ப! என்ன பிரமாதம்! ஆனல் இவ்வளவும் ஒரே நிமிஷம். பிறகு அந்த பத்து வண்டி சாமானும் இல்லை. அதிலிருந்து ஒரு பிடி சாம்பலும் இல்லை. ஆடம்பரத்தை இது ஒக்குமல்லவா? அற்ப புத்தியால் வீணை ஆடம்பர வாழ்க்கை நடத்தும் மனிதன் இந்தச் சொக்கப்பனையிலிருந்து ஏன் ஒரு நற்படிப்பினையைக் காணக்கூடாது? மகனே உன் காலத்தில் நீ எவ்வளவு உன்னத நிலைக்கு வந்தாலும் இந்தப் படிப்பினையை அறிந்து சிறிதும் ஆடம்பரமில்லாத வாழ்க்கையை நடத்து. அது நீடித்து நிற்கும்."

—V. R.

★ மூலகாரணம் ★

மனிதன் வறுமையினல் வெட்கமுறுகிறன்; வெட்கத்தால் பீடிக்கப்பட்டவன் மகிமை குன்றி வீழ்கிறன்; மகிமை குன்றியவன் அவமதிக்கப்படுகிறன்; அவமதிப்பினல் உற்சாகமிழக்கிறன்; உற்சாகமிழந்தவன் துக்கத்தை அடைகிறன்; துக்கத்தால் மூழ்கியவன் புத்தியை இழக்கிறன்; புத்தியையிழந்தவன் நாசத்தை அடைகிறன்; அந்தோ! வறுமைதானே ஆபத்திற்கெல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிறது.

—மிருச்சகடிகம்

அசோகர் கற்பித்த பாடம்

அசோக சக்கரவர்த்தி கலிங்க தேசத்தைக் கைப்பற்றுவதற்காக நடத்திய கோர யுத்தம் மூலம் நிகழ்ந்த மக்கள் சேதத்தினால் மிகத் துயரமடைந்து, இனிமேல் யுத்தமே புரிவதில்லையெனப் பிரதிக்ஞை யெடுத்துக் கொண்டார். அதுமட்டுமல்ல; ஆயுள் முழுவதும் உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தவே தான் உழைப்பதாகவும் உறுதி கொண்டார்.

ராஜ்யத்தைத் துறந்து உண்மையிலேயே ஏழையாகப் பிறந்து வீடுவாசலின்றி அலைந்து திரியும் பண்டாரத்தைப் போல் ஊர் ஊராகச் சுற்றத் தொடங்கினார். இவ்வாறு அலைந்துகொண்டிருக்கும் போது ஒரு பிச்சைக்காரனைச் சந்தித்தார். அந்தப் பிச்சைக்காரன் இவரிடம் பிச்சை கேட்டான். அசோகர் தன்னிடமிருந்த ஒரு நெல்லிக்காயை இரண்டாக்கி பிச்சைக்காரனிடம் ஒரு பாதியைக் கொடுத்தார். பசியால் வாடும் ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு துண்டு நெல்லிக்காயைக் கொடுப்பது அவ்வளவு கேலி செய்யக்கூடிய ஒரு காரியமல்ல. நெல்லிக் காயைக் கொடுப்பதென்பதற்கு அர்த்தம் ஒருவர் தன்னிடமிருக்கும் விலை மதிப்பற்ற ஒரு பொக்கிஷத்தை தானம் செய்கிறார் என்பதே. ஞானத்தை ஒருவர் மற்றொருவருக்களிக்கும் போதெல்லாம் இம்மாதிரியான ஒரு உயர்வான தானம் நடைபெறுகிறது. இதுதான் அசோகர் உலக மக்களுக்குக் கற்பித்த மகத்தான பாடம். புத்த மதத்தைப் பின்பற்றுவராயிருந்தும், புத்த மதத்தை உலக மெங்கும் பரப்புவதற்கு நிரந்தரமாக உழைப்பவராக இருந்து, தன் ராஜ்ய மக்களுக்குப் பூரண மத சுதந்திரத்தை அளித்ததும் அசோகன் உலக மக்களுக்களித்த மற்றொரு படிப்பினையாகும்.

பரீக்ஷை செய்த பின்னரே எதையும் நம்பவேண்டுமென்ற கொள்கையை உலகத்துக்கு கற்றுக் கொடுத்தவர்கள் மேல் நாட்டவரே. மின்சாரத்தை கண்டுபிடித்தல்போன்ற அற்புத சாதனைகளைவிட ஒரு மாபெரும் சாதனையாகும். இக்கொள்கைகளை உலகத்திற்குக் கற்றுக் கொடுத்து சோதித்த பின்னரே எதையும் நம்புவது என்பதே மேல்நாடுகள் கீழ் நாடுகளுக்கு அளித்த ஞான தானமாகும். இந்த தானத்தினால் கீழ்நாட்டு

மக்களின் மனப்பான்மையில் ஏற்பட்ட மாறுதலுக்குச் சரித்திரத்திலேயே இணை கிடையாது.

மேல்நாடுகள் கீழ்நாடுகளுக்களித்துள்ள விஞ்ஞான முறைகள் தோன்றி சில நூற்றாண்டுகள் தான் கழிந்துள்ளது. ஆனால் இந்தியா மேல்நாடுகளுக்குப் புகட்டியுள்ள நீதி மிகப் பழமையானது. விஞ்ஞானமும் விஞ்ஞான முறைகளும் க்ஷணத்தில் மாறுதலடையலாம். சன்மார்க்கமென்பதற்கு மாறுதலேது? மேல் நாடு பாரதத்திற்கு விஞ்ஞானமும் நாகரிகமும் அளித்தது என்று கருதுவோர்கள் பாரதம் மேல்நாடுகளுக்களித்த விலைமதிப்பற்ற சன்மார்க்க தீபத்தை மறைக்கவோ மறக்கவோ முடியாது!

—*UNESCO*

மணமும் மரணமும் அளிக்கும் தார்

எதிரிகளை அவமதிக்க விரும்புவோருக்கு உபயோகமாகும் ஒரு பொருள் என்பது மட்டும்தான் பெரும்பாலோரும் தாரைப் பற்றி அறிந்துள்ளது. பட்டணவாசிகளுக்குச் சாலைகளை சீர்படுத்துவதற்கு உபயோகப்படும் பொருள் இது என்பதும் தெரிந்திருக்கலாம். ஆனால் தாரிலிருந்து விஞ்ஞானம் மூலம் நாம் பெறும் பலன்களுக்கு அளவேயில்லை.

தாரிலிருந்து வர்ணப் பொருள்கள், மருந்துகள், வாசனைத் திரவியங்கள், மை தினுசுகள், விஞ்ஞானத்துறைக்கு பயனாகும் பல ரஸாயனப் பொருள்கள், முதலியவை தயாராகின்றன. ஆப்பிரிக்கா தேசத்தில் பலபாகங்களில் பரவியுள்ள 'மஞ்சள் ஜுரத்'திற்குக் கைகண்ட மருந்துகள் தாரிலிருந்தே தயாராகின்றன. 'மஞ்சள் ஜுரம்'கண்ட நோயாளிகளுக்கு இவ்விரு மருந்துகளால் ஏற்படும் தீங்குகளைத் தீர்ப்பதற்கும் மாற்று மருந்துகளும் தாரிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன!

சஸ்திர சிகிச்சை பெருகிற நோயாளிகளுக்கு வலி தெரியாமலிருப்பதற்குப் பிரயோகஞ் செய்யப்படும் சில மருந்துகளுக்கு மூலமும் தாரே ஆகும்.

தார் தரும் வாசனைப் பொருள்களின் மணம், மலர் அளிக்கும் மணத்தைவிட மதிப்பு மிகப் பெற்றதென்றே கூறலாம். இயற்கை மலர்ப் பிரபஞ்சம் மூலம் அளிக்கும் பல்வேறு சுகந்த ரகங்களையும் தார் தருகிறது. மனிதனுக்கு இவ்வாறு ஆரோக்கியத்தையும் இன்பத்தையுமளிக்கும் தாரிலிருந்தே மனிதனையே அழிக்கும் வெடிமருந்துப் பொருள்களும் தயாரிக்கின்றனர்.

மிகப் பெரிய உற்பத்தி

இந்திய மாதர்கள் கழுத்திலும் கையிலுமாக நூற்றைம்பது கோடி விலைமதிப்புள்ள ஆபரணங்களிருக்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

★

வருஷந்தோறும் நம் நாட்டில் நடைபெறும் இருபது லக்ஷம் விவாகங்களுக்காக ஒரு மணமகளுக்கு தலைக்கு நூறு ரூபாய்கள் வீதம் வைத்துக்கொண்டாலுங்கூட இருபது கோடி ரூபாய் விலைமதிப்புள்ள பொன் ஆபரணங்கள் தயாராகின்றன.

★

மணமாகாத பெண்களை அலங்கரிக்க வருஷந்தோறும் நூற்றிருப்பத்தைந்து கோடி போய் விலைமதிப்புள்ள பொன் ஆபரணங்கள் தேவையாயிருக்கின்றன.

★

பிரத்தியேகமாக விவாகங்களுக்கென்றில்லாமல் பொதுவாக மாதர்களுக்காகத் தயாராகும் ஆபரணங்களின் விலைமதிப்பு நானூற்றைம்பதுகோடி ரூபாய்.

★

இந்த அறுநூறு கோடி ரூபாய் ஆபரணங்களைத் தயாரிக்கும் தொழில் மூலம் இரண்டு லக்ஷம் பொற்கொல்லர் குடும்பங்கள் ஜீவிக்கின்றன.

★

இந்தியாவில் வருஷந்தோஷம் நூறு கோடி ரூபாய் விலை மதிப்புள்ள பருத்தி உற்பத்தியாகிறது: வருஷந்தோறும் உற்பத்தியாகும் எண்ணெய் வித்துக்களின் விலை மதிப்பும் நூறு கோடி ரூபாய்தான். வருஷந்தோறும் உற்பத்தியாகும் தானியங்களின் விலைமதிப்பு முன்னூறு கோடி ரூபாய் மேற்கூறியதிலிருந்து பொன் ஆபரணங்களின் உற்பத்தித் தொழில் தானே இவையெல்லாவற்றையும் விட மிகப் பெரியது!

ASOKA SCENTED BETELNUT POWDER

உள்ளம் தெளிந்தது

நடுக்கூடத்தில் கோலமிட்டு மணையைப் போட்டு புதுப் புடவை. ரவிக்கை, புஷ்பம், தாம்பூலம், மஞ்சள், குங்குமம் இருந்த தட்டைக் கொண்டுவந்து வைத்துவிட்டு, பூஜை அலமாரியைத் திறந்து சுவாமி விளக்கை ஏற்றியபடி "மாலதி, என்ன பண்ணிண்டு இருக்கே இன்னும்; நாழியாச்சு வா," என்று மகளை அழைத்தாள் சாவித்திரி அம்மாள்.

"வந்துட்டேன் அம்மா," என்று அறையிலிருந்து வெளிப்பட்டாள் மாலதி.

அவளை அழைத்து மணையில் உட்கார்த்தி, நெற்றியில் குங்குமமிட்டு புடவை யிருந்த தட்டையெடுத்து அவள் கையில் கொடுத்து "புடவையை உடுத்திண்டு வந்து சுவாமிக்கு நமஸ்காரம் பண்ணு" என்றாள் தாயார்.

தட்டிலிருந்த புடவையை எடுத்துக்கொண்டு மாலதி உள்ளே சென்றதும் முன் தாழ்வாரத்திலிருந்த சாய்மானத்தில் அமர்ந்திருந்த பஞ்சநத சர்மா "ஏண்டி, புடவை குழந்தைக்குப் பிடிச்சிருக்காமா?" என்று மனைவியை வினவினார்.

"பிடிக்காதே என்ன? என்னமோ, "வெளுத்ததெல்லாம் பால்'னு இருக்கிற அப்பாவிக் குழந்தை அவள்..." என்று கண்ணீரால் நெஞ்சடைக்கக் கூறினாள் சாவித்திரி அம்மாள். கண்கள் பொலபொலவென்று நீரைக்கொட்டின.

சர்மாவுக்கும் கண்ணில் ஜலம் வந்துவிட்டது அதைத் துடைத்துக்கொண்டு "மலைபோல வருகிற கஷ்டங்களையெல்லாம் பனி போல விலக்கிவிடும் அந்தப் பழனியாண்டவன் கிருபைதான் அவர் மனசை..."

வாய்மேலே கை வைத்துக் காட்டித் தன் கணவரை மேலே பேசாதிருக்கும்படியும், மாப்பிள்ளை காமரா உள்ளில் இருப்பதையும் ஜாடை செய்து காண்பித்தாள் சாவித்திரி அம்மாள்.

"குழந்தைக்கு வேண்டியதையெல்லாம் நெனவா எடுத்து வச்சயா சாவித்திரி?"

"எல்லாம் பாக் பண்ணி இருக்கேன். 'ஏதாவது வேண்டியிருந்தால் எழுது'ன்னு சொல்லி இருக்கேன். மணி மூணே காலாயிடுத்து: வண்டியைப் பாருங்கோ. எப்பவும், சீக்கிரமுந்தியே புறப்படறது தான் நல்லது" என்றாள் சாவித்திரி அம்மாள்.

புடவை உடுத்திக்கொண்டு கூடத்திற்கு வந்த மாலதி சுவாமிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு தன் தாயாரை நமஸ்கரித்தாள். "பெத்த வயிறு குளிரக்குளிர, மகராஜியா, பெத்துப் பெருகி, பெருவாழ்வு வாழ்ந்துண்டு

நன்னு இருக்கணும். இந்த மட்டிலே ஈசுவரன் கண்ணைத் திறந்து பார்த்தானே...'' என்று பெருகிவந்த கண்ணீரை வழித்து விட்டாள் சாவித்திரி அம்மாள்.

மாலதியும் அழுகை பொங்க, ''அம்மா, அப்பாவும், நீயும் கட்டாயமா ஆடி மாஸம் புறப்பட்டு வரணும். வராதே இருந்துடாதே...'' என்று தேம்பினள்.

''கண்ணைத் தொடச்சுக்கோடி அசுடு, துளிக்கூட தைரியமேஇல்லாதே இப்படி ஒரு பொண் இருப்பையாடீ? பேசாதிரு. சமத்தா, மாமியார் சொன்னதைக் கேட்டுண்டு நல்ல பொண்ணுன்னு பேர் எடுக்கணும். நான் சொன்ன புத்திகளையெல்லாம் கெட்டியாத் தலைப்பிலே முடிஞ்சுக்கோ. இங்கே ஏழு மணிக்கு எழுந்திருக்கிறயே அது மாதிரி அங்கேயும் செய்யாதே, சீக்கிரம் எழுந்திருக்கணும்...'' என்று சாவித்திரியம்மாள் கூறிக்கொண்டிருக்கும் போதே வாசலில் வண்டி வந்து நின்றது.

சர்மா வண்டியிலிருந்து இறங்கி உள்ளே வந்து ''புறப்பட்டால் சரியா இருக்கும்.'' என்று கூறி ''மாப்பிள்ளே'' என்று உரக்க அழைத்தார்.

உள்ளே படித்துக்கொண்டிருந்த கோபாலன் புஸ்தகத்தை மூடிவைத்துவிட்டு எழுந்து வெளியே வந்தான்.

கூடத்திலிருந்த சாமான்கள் பெட்டி, படுக்கை வண்டியில் ஏற்றப்பட்டன. ''சாமா எங்கே காணோம்?'' என்று கேட்டான் கோபாலன்.

''பாத்திரப் பெட்டிகளையெல்லாம் புக் பண்ணச் சொல்லி அவனை முன்னடி அனுப்பிச்சேன். ஸ்டேஷனிலே இருப்பன்...வந்து...உங்க உடமையை உங்ககிட்ட ஒப்பிச்சுட்டேன். என் கவலை விட்டது. தெரியாத்தனமாக ஏதாவது ஏறத்தாழ நடந்துண்டாலும்...'' மேலே சொல்லவேண்டிய வார்த்தைகள் நெஞ்சுக்குழியில் நின்று தவிக்க தத்தளித்தார் சர்மா.

கோபாலன் தரையைப் பார்த்தபடி, ''இப்பொழுது நான் என்னசமாதானம் சொன்னலும், உங்கள் பெண் எழுதும் கடிதம் கண்டபின் தான் உங்கள் மனசில் நிம்மதி உண்டாகும், இல்லையா மாலதி?'' என்று மனைவியின் முகத்தைப் பார்த்தான் கோபாலன்.

மாலதியின் முகமும், கண்களும் சந்தோஷத்தைத் தெரிவித்தன!

''புறப்படலாமே'' என்றார் சர்மா.

சாவித்திரி யம்மாள் விபூதியை எடுத்து வந்து மாலதியின் நெற்றியில் இட்டு ''பழனியாண்டவா, உன் கிருபை தான் எல்லாம். காப்பாத்துடா அப்பனே'' என்று கூறி, ''அப்பா

வுக்கு நமஸ்காரம் பண்ணிட்டுப் புறப்படு" என்ருள்.

புதுப் புடவையும், புஷ்பமும் பொலிய நகை முகத்துடன் தன் பெண் வந்து நமஸ்காரம் செய்ததும் சர்மாவின் மனத்தில் வாஞ்சை சுடர்விட்டது. மனத்துள் ஆசீர்வதித்து, "நல்லபேர் எடுத்துண்டு சமர்த்தா இருக்கணம்" என்ருர். அவர் கண்கள் ஆனந்தபாஷ்பம் சிந்தின!

"ஸ்டேஷனுக்கு வரேளோல்லியோ அப்பா?" என்று வினவினுள் மாலதி.

அப்பாவுக்கு மகள்மீது உயிர். மகளுக்கு தகப்பனர் மீது பிராணப்பிரியம்.

மகளுடைய கேள்வி சர்மாவைக் கண்கலங்கச் செய்தது. "பைத்தியம் ஸ்டேஷன் வரையில் வந்துவிட்டால் நிறைந்து போய்விடுமா என்று தம்முள் நினைத்துச் சிரித்துக்கொண்டு "வரணும்னுல் வரேன்!" என்று ஹாஸ்யமாகச் சொன்னர்.

மாலதி வந்து வண்டியில் ஏறியதும் சாவித்திரியம்மாள் கூஜாவைக் கையிலெடுத்துக்கொண்டு வந்து அவள் கையில் கொடுத்துவிட்டு, "பாத்திரமோ, பண்டமோ, எது வேணுமோ கடிதாசு எழுது, அனுப்பறேன். அப்பப்போ கடிதாசு எழுதணும் தெரியுமோ, மாமியாரைக் கவனிச்சுப் பார்த்துக்கோ. வண்டியைவிட்டு இறங்கறப்போ சாமான்கள் பத்திரம்..." என்று கூறி வண்டியின் கம்பியை மாட்டினுள் சாவித்திரி அம்மாள்.

மௌனமாகத் தலைகுனிந்தாள் மாலதி. கோபாலனும், சர்மாவும் ஏறிக்கொண்டதும் வண்டி புறப்பட்டது.

தாயும், குழந்தையும் பிரியும் தத்தளிப்பில் அவர்கள் முகங்கள் கண்ணீரால் நனைந்தன. இன்பமும், துன்பமுமான ஒரு உணர்ச்சி பரவி மனதைக் கலக்கியது!

வழிநெடுகிலும் மூவரும் மௌனமாக இருந்தார்கள். ஒவ்வொருவர் மனத்திலும் ஒவ்வொருவித நினைவுகள் படம் விரித்தன. சர்மாவின் மனக்கண்முன் ஏழு வருஷங்களுக்கு முன்பு கோபாலன் எழுதிய கடிதம் அதன் வாசகம் அப்படியே நின்றது! அந்த கோபாலன் இன்று இவ்வளவு சுமுகமாகத் தன் மனைவியை அழைத்துச் செல்ல வந்திருக்கிருன்? காலகதியுடன் போட்டியிட்டுக் கொண்டு மனித மனமும் மாறுதலடைந்துவிடும் விசித்திரத்தை எண்ணி மலைத்தார் சர்மா. வண்டி ஸ்டேஷனருகில் வந்து நின்றதும் சிந்தனையிலிருந்து மீண்டு வண்டியிலிருந்து இறங்கினுர். சமான்கள் இறக்கப்பட்டன. சர்மாவின் பிள்ளை சாமா. டிக்கெட்டுகளையும் ரயில்வே ரசீதையும் கொண்டுவந்து கோபாலனிடம் கொடுத்தான்.

மணியடித்து பிளாட்பாரத்திற்குச் சென்று வண்டி வரு

வதை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார்கள் பிரயாணிகள்.

மாலதி தகப்பனாரை அழைத்து மறுபடியும் ஆடி மாதம் பிறந்ததும் அம்மாவுடன் புறப்பட்டு வரும்படி வற்புறுத்தினாள்.

அவ்வளவு நேரமாக யோசித்த யோசனையின் முடிவாக நிதானமான குரலில் பேசத் தொடங்கினான் கோபாலன். "நாம் இரண்டுபேருமே நடந்துபோனதைப் பற்றி நினைப்பதை..."

"அதைப் பற்றி ஒண்ணுமேயில்லை மாப்பிள்ளை! நானே புகழ்ந்துகொள்றது நன்றாக இராது. மாலதியின் குணத்திற்கு ஒருநாளும் பகவான் அருளால் அவளுக்கு ஒரு குறைவும் வராது. என்பது எனக்குத் தெரியும். போனது பற்றி நினைவே வேண்டியதில்லை. இனிமேல் ஒரு குறைவுமில்லாமல் ஈசுவரன் காப்பாத்தணும். அவன் அருளில் எனக்கு என்றுமே தீவிர நம்பிக்கை..." என்றார் சர்மா.

"பிரமாதமான ஆர்ப்பாட்டத்துடன் "எக்ஸ்பிரஸ்" வந்து நின்றது. மாலதியையும், கோபாலனையும் வண்டியில் சௌகரியமான இடம் பார்த்து உட்கார வைத்தார் சர்மா. "மாலதி, இவ்வளவு நாளாக உன் மாமியாருக்கு செய்திருக்க வேண்டியதையெல்லாம்சேர்த்து இப்போ போய், காலாகாலத்தில் மருந்து, ஆகாரம் கொடுத்து கவனமாகப் பார்த்துக்கோ. உங்களுக்கும் தான் சொல்றேன் மாப்பிள்ளை; ஆத்துக்குப் பெரியவாளா அவா இருக்கறது... பெரிய காவல்..." என்று நிறுத்தினார் சர்மா.

கோபாலன் சிரித்துக்கொண்டே "உங்கப்பா, எவ்வளவு நாசூக்காக கேலிபண்றார் பார்த்தியா மாலதி?" என்று கேட்டான்.

"கேலி என்ன? நிஜமாகவே தான் சொல்றார்! 'கலப் பணம் கொட்டினாலும்—ஒரு கிழ...... கிடைக்காது" என்று சொல்லுவாளே..." என்று தகப்பனாருடைய வார்த்தைக்கு ஆதரவு அளித்தாள் மாலதி.

மணி அடித்ததும் ஊதிவிட்டுப் புறப்பட்டது ரெயில். அவசர அவசரமாக மாலதி ஜன்னலருகில் வந்து, "அப்பா, அடுத்தாத்து அம்புவுக்கு மூணு ரூபாய் பணம் கொடுத்திருக்கேன். அம்மாகிட்டே சொல்ல மறந்து போயிட்டேன். சாமா, போயிட்டு வரேண்டா, அப்பா போயிட்டு வறேன்" என்றாள்.

"அதெல்லாம் எங்கேபோறது அம்மா. போயிட்டு வாம்மா. புத்தியா இரு. மாப்பிள்ளை, போனதும் அம்மா உடம்பு இருக்கிறதுக்கு உடனே எழுதுங்கோ" என்றார் சர்மா.

"கட்டாயம் எழுதுகிறேன். வரட்டுமா? சாமா போய் வரேன்" என்றான் கோபாலன். இருவரும் தலையை ஆட்டினார்கள்.

வண்டி பிளாட்பாரத்தை விட்டு நகர்ந்து, பிறகு வேகமாக சென்று மறைந்தும் விட்டது!

பெருமூச்சு விட்டுக்கொண்டு திரும்பினர் சர்மா. "எல்லாம் ஈசுவரயத்தனம்; போன புதன் கிழமை யன்னிக்கி மாப்பிள்ளை வந்து மாலதியை அழைச்சிண்டு போகப்போருன்னு யார் கண்டா?" என்ருர்.

"பாவம், கொஞ்சமாகவா சுத்தினுள் பிள்ளையார் கோவிலே? அவள் பிரார்த்தனை நிவைவேறிப் போச்சு! அம்மா முகத்திலே இனிமேல் களை இருக்கும்!" என்ருன் சாமா நடந்துகொண்டே.

2

சிறிது தூரம் வரையில் மாலதியின் முகத்தையே கவனித்துக்கொண்டு பேசாமல் இருந்தான் கோபாலன்.

வெளிப்புறம் பார்த்துக் கொண்டிருந்த மாலதி கோபாலன் பக்கம் திரும்பி "எத்தனை மணிக்கு பெங்களூருக்குப் போகும்?" என்று கேட்டாள்.

"காலை ஆறுமணிக்கு, ஏன்?"

"வெறுமனே தான் கேட்டேன். நாம் போறவரைக்கும் ஸரஸு அக்கா இருப்பாரோ இல்லையோ?"

"யார் கண்டா? இருக்காளோ—புறப்பட்டுப் போயிட்டாளோ" என்று அசுவாரஸ்யமாகப் பதில் சொன்னன் கோபாலன். அவன் மனத்தில் ஏதோ வேதனை குடிகொண்டிருந்ததை அவன் முகம் காண்பித்தது. மாலதி கவலையுடன் "ஏன் ஒரு மாதிரியா இருக்கேள்" என்று வினவினுள். அவள் அந்தக் கேள்வியைக் கேட்டதுதான் தாமதம். "மாலதி கடந்த ஏழு வருஷங்களில், நாலு நாட்களாக என் மாமனர் வீட்டில் கண்டது தான் கலகலப்பு! மற்ற நாளெல்லாம்..."

மாலதி வியப்புடன் கோபாலனை நோக்கினுள். அவன் சொல்வதொன்றும் அவளுக்குப் புலனுகவில்லை. இருந்தாலும் சாதுரியமாக, "இனிமேல் அந்த நினைவே வேண்டாம்! இப்பொழுதுதான் கல்யாணமாச்சு என்று நினைச்சுண்டால் போச்சு!" என்று கூறி சிரித்தாள் மாலதி.

"கோபாலன் இரண்டு நிமிஷம் மௌனமாக இருந்து விட்டு "மாலதி நிரபராதி நிம்மதி யடைந்துவிடலாம்..."

"அதெல்லாம் ஒன்றும் சொல்லாதேங்கோ. என் மனசில் துளி கூட சென்ற காலத்தைப் பற்றிய நினைவே இல்லை. நீங்களும் நினைக்கப்படாது. ஆமாம் நாலு நாளாகத்தான், 'என்னை ஒரு விஷயமும் கேட்காதே நிம்மதியாக இருக்கவிடு' என்றேள்; நான் விட்டுட்டேன்... அம்மாவுக்கு என்ன உடம்பு; அவா அழைச்சுண்டு வரச்சொன்னரா......இல்லே......உங்கள் மனசே..."

"மாலதி, சுருக்கமாச் சொன்னால்—அவள் வயிற்றிலே பிறந்துட்டேன். அவள் இருக்குமட்டும் வைத்து ரட்சிச்சு ஆகணும். அதற்கு மேலே... பேசவே பிடிக்கவில்லை எனக்கு. சுவர்ண விக்ரஹம்போல இருக்கிற உன்னைப் பார்த்து—உனக்குப் பெருவியாதி என்று கூறி என்னை நம்பவைத்ததற்கு—"

அவன் முகம் விகாரமாக மாறியது.

மாலதி அப்படியே அயர்ந்து போனாள். தொண்டை வரள பீதி நிரம்பிய குரலில் "நிஜமாகமா?" என்றாள்.

"பின்னே தலை தீபாவளிக்கு வைர மோதிரம் போடவில்லை என்பதற்காக எந்த முட்டாளாவது தள்ளிவைப்பானா பெண்டாட்டியை?"

மாலதியின் மனத்தில் விவரிக்க இயலாத பீதி பிறந்தது. மருளவிழித்துக்கொண்டு துடித்தாள். அதைக் கண்ட கோபாலன் "கவலைப்படாதே மாலதி. இந்த உண்மையை ஒப்புக்கொள்ளவேணும் என்றுதானோ என்னவோ—அவளைப் படுக்கையில் கிடத்திவிட்டார் ஈசுவரன். தாகத்திற்குத் தண்ணீ யெடுத்துக் குடிக்கக் கை சுவாதினமில்லை—"

மாலதியின் மனது நிதானமடைந்து விட்டது. தெளிந்த குரலில், "அப்படியெல்லாம் சொல்லப்படாது—பெரியவாளைப் பார்த்து. ஏரோ, நமக்கு இவ்வளவு காலம் பிரிஞ்சு இருக்கணும்னு இருந்திருக்கு. அதுக்கு அவர் ஒரு காரணம். அவ்வளவுதான்!" என்றாள்.

"இந்த வேதாந்தம் தெரியாவிட்டால் நீ போகிற வழி?" என்று சிரித்தான் கோபாலன்.

மாலதியும் சிரித்துவிட்டு பிளாஸ்க்கில் இருந்த காபியை எடுத்து டம்ளரில் விட்டுக் கொடுத்தாள். மாலை நேரத்து மஞ்சள் வெயில் படிந்து மாலதியின் காதிலும், மூக்கிலும், இருந்த வைர அணிகள் ஜிலுஜிலுத்தன! வேதனைப்பட்டு, விசாரப்பட்டு, துக்கப்பட்டு, இந்த ஏழு வருஷங்களில் அல்லலுறும் மனசை சமனப்படுத்தும் வழிகளை நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தாள் மாலதி.

வேதனையில் சிக்கி உழலும் தன் கணவனுடைய மனசை மாற்ற நினைத்து, பெட்டியைத் திறந்து ஒரு புஸ்தகத்தை எடுத்து கோபாலன் கையில் கொடுத்து, "இதைப் படியுங்கோ. பொழுது போவது தெரியாமல் போய் விடும்" என்றாள்.

பிரித்துப் பார்த்தான் கோபாலன். அது மாதவையா அவர்கள் எழுதிய "பத்மாவதி சரித்திரம்" மூன்றும் பாகம்!

"இது எங்கிருந்து கிடைத்தது மாலதி உனக்கு?" அவன் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன!

''வீட்டில் இருந்தது. இந்த மாதிரி புஸ்தகங்கள் தான் எனக்கு ரொம்ப இஷ்டம் எடுத்துக்கொண்டு வந்தேன்'' என்ருள்.

புஸ்தகத்தில் ஆழ்ந்துபோனன் கோபாலன்.

3

பன்னிரெண்டு மணி வேளே. தபால்காரன் கொடுத்துவிட்டுப் போன கடிதத்தைப் பிரித்துப் படித்துக்கொண்டிருந்தாள் மாலதி.

''அடியம்மா, பொறுக்கப்படலேயே பகவானே—'' என்று முனகினள் கூடத்தில் படுத்திருந்த ஈசுவரி அம்மாள்.

பாதி படித்த கடிதத்தை அப்படியே வைத்துவிட்டு ஓடிவந்து, ''ஏனம்மா, வலி யெடுத்துவிட்டதா. தைலம் தடவட்டுமா?'' என்று அருகில் வந்து மாமியாரின் உடம்பை வருடிக்கொடுத்தாள் மாலதி.

ஒன்றும் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்த ஈசுவரி அம்மாள் திடீரென்று விம்மியழத் தொடங்கி, ''அம்மாடி, வேண்டாம்டியம்மா, ஆறு மாசமா என்னேடே படாத பாடுபடறே; 'சிடுக்கு வெடுக்கின்றிடாமல் ராப்பகலாகக் கண்முழிச்சு கஷ்டப்படறே, உத்தமி பெத்த பெண் நீ—உன்னே அநியாயமா... இத்தனே நாளும் — அழைக்காதே வச்சேனே... அந்தப் பாவத்துக்குத் தாண்டீ...''

சட்டென்று மாமியாரின் வாயைப்பொத்தி, ''என்னம்மா, பேத்தஆரம்பிச்சுட்டேள்? தூக்க மருந்து தரேன்; தூங்குங்கோ ஹாய்ய—''

''வேண்டாண்டி—என் தங்கமே, வேண்டாம். செய்த பாவத்தைச் சொல்லித்தீரணும். தலே தீபாவளிக்கி வைரமோதிரம் வாங்கிப்போட்டால் தான் ஆச்சுன்னு ஏன் கேட்டேன்ன—ஸரஸ்ர ஆம்படையான்—வைரமோதிரம் வேணும்னு முறைச்சுண்டு இந்தாத்து வாசப்படி ஏருமலிருந்தான் — கோபாலன் —'எனக்கு மாமனர் செய்து போட்டால் அதைப் போட்டுடலாம் அவனுக்கு' என்ருன். சரியென்றேன் நான். என் பேச்சைக் கேட்டு எங்கண்ணு பெண்ணே அவன் வேண்டாம்னுட்டு, உன்னேத் தேடிப் பண்ணீண்ட கொடுமையைப் பொறுக்காமல், உன்னேத் தள்ளிவச்சுட்டு, அவளேயே பண்ணீக்கணும்னு, இந்தப் பாவி நெஞ்சிலே துராங்காரம் பிறந்தது. ''அப்பா, நீ தேடிண்ட அழகுப் பொண்டாட்டிக்கு—வியாதி இல்லாட்டா அத்தனே பெரிய பணக்காரா நம்மைத் தேடிண்டு வண்டா வரா?'' என்றேன். பெத்தவள் பொய்சொல்லுவளாவென்று நம்பிவிட்டான் குழந்தை. மகாபாவி—அவனே, அவன் சந்தோஷத்தைக் கெடுத்தேன். 'என் மருமாளேப் பண்

ணீக்கோடா'ன்னு கெஞ்சினேன். ஊஹூம்—என்ஜபம் சாயல்லே—கடைசிலே — தெய்வத்துக்கே பொறுக்கல்லே—ஏன், என் மனசுக்கே நான் பண்ணின அக்கிரமம் பொறுக்கல்லே. என் கையைக் காலை முடக்கிக் கீழே தள்ளிப்பிட்டான் பகவான். தாயார் நன்னாயிருந்து உக்காத்திவச்சு சீராட்டி சீரும், செல்வமும் கொடுத்தால் பொண்களை நமக்குச் செய்ய அனுப்புவா மாப்பிள்ளைகள். கையில்லே-காலில்லே - பொண்கள் வந்தா—பார்த்தா—பார்த்துட்டுப் போயிட்டா! அவாவா குடித்தனம் அவாவாளுக்கு என்னை யாருடீ கவனிப்பா—எனக்கு யாருடீ சேவா?'' ஆனைபோல ஆயிரம் பெண்கள் இருந்தாலும் பூனைபோல ஒருநாட்டுப் பெண் வேணும் என்பா—''

''அழாதேங்கோ அம்மா, நான் தான் வந்துட்டேனே செய்ய'' என்று மாமியாரின் கண்ணீரைத் துடைத்தாள் மாலதி. அவள் கண்களும் கலங்கின.

''வந்துட்டேடியம்மா, கொலைகாரன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறமாதிரி கை, கால் வழங்காதே போனபிறகு, நான்செய்த பாவத்தை என் குழந்தையிடம் சொல்லிக் கதறினேன்—''

''போறது போங்கோ. நம்மப் பிடிச்ச கிரகசாரம் விட்டுடுத்து. இதெல்லாம் எங்களுக்கு என்ன தெரியும்? ''தீவாளிக்கி வைர மோதிரம் போடறேன்னுசொல்லிப்போடலை. அதுதான் மாப்பிள்ளைக்கிக் கோபம்''னு சுந்தர சாஸ்த்ரிகள் வந்து சொன்னார்—அப்பாவுக்கு அழ மாட்டாத குறை—''

''பின்னே என்ன பொய் சொல்றதுடி நான். வியாதின்னு வந்துடமாட்டாரா உங்கப்பா உன்னை அழைச்சிண்டு? என் மானம் போயிடும்—மருமாள் நாட்டுப் பெண்ணா வரணும்ங்கற ஆசை, வேறே—நான் பண்ணின பாவத்துக்கு ஏத்த தண்டனைதான் இது—''

''ஒண்ணுமில்லை. இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே உங்களுக்கு உடம்பு சொஸ்தமாயிடும் என்கிறார் டாக்டர்'' என்று தேற்றினாள் மாலதி.

''ஸேது''

அசோகா சுகந்த பாக்குத்தூள்

அழிவிலே சிலை

காலத்தொளி வராமூலையிலே
காற்றுச்சிறைப்பட்ட கூடத்திலே
ஞாலக்கண் பாராது போனதினால்
நாசமடைந்திடுங் கோயிலிலே
கோலச்சிலையொன்று நெஞ்சக்கனவின்
கோடிக்கும் எட்டா அழகுருவில்
நூலிழைபோட்டு சிலந்தி மறைத்த
நிலவுக்குமப்பாலே நிற்குதடா!
சிந்தைக்கருவிலே வளர்ந்த உருவினை
சிற்றுளியாலே கரும் பாறையிலே
விந்தைச் சிலையாக்கி விட்டுவிட்டே
வித்தகச்சிற்பி சென்றுவிட்டான்
முந்தைகலைகளை ஒரு மூச்சினிலே
முடித்திடும் காலன் தன்பசிக்கே
இந்த உயிர்ச்சிலை ஆகிடுமோ
இடியும் மண்டபம் காட்டுவதேன்?
சொல்லில்வரையொணா சித்திரத்தை
சிதைவிலும்மாறிடாக் கற்பனையை
கல்லிலே, அதன் கருவண்ணத்திலே
கையுளிகொண்டு செதுக்கியவன்
நில்லாது போயினன் கற்சிலையோ
நிற்குது காலப் படுகளத்தில்
செல்லாப்பழங்காசு தேடிச் சரித்திர
செல்வங்கள் என்போரே பாரீரோ!

—உதயன்.

அராபிக்கடலின்
அழகான 'பால்கனி'

1948-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தேதி யன்று சௌராஷ்டிரம் என்ற புதிய மாகாணம் ஒன்று இந்தியாவில் தோன்றிற்று. 860 தனித்தனிக் குட்டி ராஜ்யங்களாக இருந்தவையெல்லாம் ஒன்ருகச் சேர்ந்தது தான் இந்த சௌராஷ்டிரம். தொண்ணூற்று ஐந்து சதுர மைலிலிருந்து அநேக சதுர மைல் விஸ்தீரணம், 186 பேர்களே கொண்ட ஜனத்தொகை, இம்மாதிரி அநேக ராஜ்யங்கள் கத்தியவாரில் முன் காலத்திலிருந்தன.

இம்மாதிரிக் குட்டி ராஜ்யங்களும் அவற்றிற்கு பல ரகமான தலைவர்களுமிருந்ததனுல் அந்த வட்டாரங்களில் அமைதி என்பதே இல்லாமலிருந்தது. இந்த நிலைமையை மாற்றுவதற்காகத்தான் சர்தார் பட்டேல் இக்குட்டி ராஜ்யங்களெல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து சௌராஷ்டிரம் என்ற ஒரு புது மாகாணத்தை அமைத்தார். இன்று நவீன சௌராஷ்டிரம் வீசும் கலாச்சார பண்பாட்டின் மணம் முன்பு குட்டிச் சுவர்களாயிருந்த குட்டி ராஜ்யங்களின் ஞாபகத்தை மறக்கடித்துவிட்டது.

சௌராஷ்டிரம் என்ருல் 'சுராஷ்டிரம்' அதாவது அழகான தேசம் என்பதாகும். அரபிக்கடலை நோக்கியுள்ள ஒரு 'பால்கனி' என்று கத்தியவாரைப் பற்றி ஒரு கவி வர்ணித்துள்ளார்.

சௌராஷ்டிரம் என்று நாம் இப்போது அழைக்கும் தேசம் ஒரு காலத்தில் கடலுக்கு நடுவேயுள்ள ஒரு தீவாக இருந்ததென்பதற்குச் சான்றுகள் உள்ளன.

புராணங்களில் சௌராஷ்டிரத்தைப் பற்றி பல தகவல்கள் உண்டு. ஏழாவது மனுவான வைவஸ்வதனின் மகன் அனர்த்த ராஷ்டிரா என்ற ஒரு ராஜ்யத்தை இந்த இடத்தில் ஸ்தாபித்தாணம். அனர்த்தராஷ்டிரத்தில் சௌராஷ்டிரா, அனூபா என்ற பெயர்கொண்ட இரு மாகாணங்களிருந்ததாகவும், ஒரு மிகப் பெரிய பர்வதத்தினருகேயுள்ள கிரிப்பூர் என்ற நகரம் அனர்த்த ராஷ்டிரத்திற்குத் தலைநகராயிருந்ததாகவும் ஹரிவம்ச புராணத்தில்

கூறப்பட்டுள்ளது. அனர்த்தராஷ்டிரத்தின் தலைநகரம் ஜுனகாடிலோ அல்லது அதன் அருகிலோ தான் இருந்ததாக யூகிக்கப்படுகிறது.

கிருஷ்ணபரமாத்மாவின் வம்சமான யாதவகுலத்தோர் துவாரகையைத் தலைநகராகக்கொண்டு சௌராஷ்டிரத்தில் குடியேறி யிருந்தார்கள்.

இப்படிப் புராணங்களில் சௌராஷ்டிரத்தைப் பற்றிப் பல தகவல்களிருந்தாலும் கி. மு. 326 வரையிலும் சரித்திரத்தில் சௌராஷ்டிரத்தைப் பற்றி எத்தகைய குறிப்புகளும் காணோம். கி. மு. 326-லிருந்து சுமார் இருநூற்றாண்டுகளுக்கு மௌரிய ராஜ்யத்தில் ஒரு மாகாணமாக விளங்கியது சௌராஷ்டிரம். அசோகரில் சன்மார்க்கப் போதனைகளைக் கொண்ட ஸ்தூபங்கள் பலவற்றை சௌராஷ்டிரத்தில் இன்றும் காணலாம். இவற்றிலிருந்து நேர்மையான வாழ்க்கைக்கு அக்காலத்திலேயே அரசாங்கம் எவ்வளவு முக்கியத்துவமளித்திருந்ததென்று நன்கு விளங்குகிறது. குறிப்பாக ஜுனகாடிலுள்ள ஸ்தூபங்களை பார்வையிடாத சுற்றுப் பிராணிகளே கிடையாதென்று கூறலாம்.

எட்டாம் நூற்றாண்டிலிருந்து தான் ராஜபுத்திரர்களிடையேயுள்ள பல வகுப்பினர்கள் 1948-ம் ஆண்டு வரையிலுமிருந்த குட்டி ராஜ்யங்களையெல்லாம் அமைக்கத் தொடங்கினார்கள்.

குட்டி ராஜ்யங்கள் தோன்றியதிலிருந்து முடிவில்லாமல் போர்கள் துவங்கின; போர் வீரர்களும் தோன்றத்தொடங்கினர். 1304-ம் ஆண்டில் டில்லி அரசர்களின் பார்வை சௌராஷ்டிரத்தின் மீது விழுந்தது. அக்பர் சக்கரவர்த்தி, குஜராத்தை தன் ராஜ்யத்துடன் இணைத்துக்கொண்டுவிட்டார். முகலாயர்களின் மறைவுக்குப் பின்னர் மாராடியர்களின் ஆட்சி வந்தது; சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக பிரிட்டிஷார் ஆட்சி புரிந்துவந்தனர்.

குஜராத் தேசத்தைச் சேர்ந்தவராவர் நரசிம்ம மேதா என்ற பிரபல கவி. இவர் ஒரு சமூக சீர்திருத்தவாதி. ஏழை மக்களின் துயரங்களை உணர்ந்தவருங்கூட. அதனால் சமூகத்தில் உயர்ந்த ஜாதியார்களிடையே இவருக்கு செல்வாக்கு கிடையாது. ஹரிஜனங்களோ இவரை மிக அன்புடன் போற்றுகிறார்கள். இவர்

தான் காந்திஜி பாரதமெங்கும் பரப்பிய "வைஷ்ணவ ஜனதோ" என்ற பிரார்த்தனை கீதத்தை இயற்றியவர்.

சுவாமி தயானந்தரும் சௌராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்தான். உலகத்திலேயே தலைசிறந்த இந்தியரென்று மதிக்கப்பட்ட ஒருவரான காந்திஜீயும் சௌராஷ்டிரத்தைச் சேர்ந்தவரே. இவர் போர்பந்தர் ராஜ்யத்தின் திவான் குடும்பத்தைச் சேர்ந்தவர். போர்பந்தரில் இவர் பிறந்த அறை 'கீர்த்தி மந்திர்' என்ற ஸ்தாபனத்தாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

—*South Rail News.*

★ உண்மை ஹிந்து ★

ஹிந்து என்ற பதம் ஒரு குறிப்பிட்ட வகுப்பைக் குறிக்கிறதென்று கருதாதீர்கள். சன்மார்க்கத்தை மதிக்கும் பெருந்தன்மையுடையவன், தன்னடக்கமுடையவன், தன்னுள்ளிருக்கும் மிருகத்தன்மையை யொழித்துக்கட்டி தன் சிந்தனைகளையும் செயல்களையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்தவன்—இவனே உண்மை ஹிந்து ஆவான்.

எந்த மதத்தைப் பின்பற்றுபவரானாலும் எந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவரானாலும் இத்தகைய மனிதர்களே ஹிந்துக்களாவார்கள்.

சுவாமி சின்மயானந்தா



காளை சாஸ்திரம்

சிறிய முகமும் முறுக்கிய காதுகளும் தான் நல்ல எருதின் லக்ஷணம்.

நீண்ட வாலுள்ள எருதைத் தயக்கமின்றி வாங்கலாம். வாலில் நிறைய முடியும் சிறிய காதுகளும் கொண்ட எருது வயலில் நன்றாக உழைக்கும். மென்மையான கொண்டைக் கால் தசைகளும் உறுதியான தொடை தசைகளும் நிலத்தைத் தொடும் வாலும்கொண்ட எருதின் உரிமையாளனே மிகவும் பாக்கியசாலி யாவான்.

வளைந்த கொம்புகளும், உயர்ந்த நெற்றியும், வட்ட முகமும், உடல் முழுவதும் மிருதுவான ரோமமும், கூர்மையான காதுகளும் கொண்ட எருது நிலத்தை அதி துரிதமாகவும் செம்மையாகவும் உழுவதற்கு ஏற்றது.

கடன் வாங்கின பணத்தை வீணாக்குவது போலாகும் ஒரே ஏரில் ஒரு காளையும், ஒரு எருமையும் சேர்த்துக்கட்டி உழுவது. இந்த இரண்டு பிராணிகளும் ஒருபோதும் ஒன்று சேராது. காளை ஒரு பக்கம் போகும்; எருமை மற்றொரு பக்கம் இழுக்கும்; வெயிலிலிருந்து நிழலைப் பார்த்து ஓடுவதிலேயே எருமைக்கு நாட்டம். மழைக்காலத்தில் எருமை நீர் நிரம்பியுள்ள நிலத்தை நோக்கி ஓடும். ஆனால் காளையோ நீரில்லா வறண்ட நிலத்தையே நாடும்.

—P. L. J. in *Indian Farming*.

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

[மேற்கண்ட கட்டுரை தஞ்சாவூர் சர்வோதயப் பிரசுரத்தார் வெளியிட்டுள்ள வினோபாஜியின் வாழ்க்கை என்ற சிறிய புத்தகத்திலுள்ள ஒரு பகுதியாகும். வினோபாஜி புரியும் பெரும் தொண்டான பூதான இயக்கத்தைப் பற்றி யாவரும் கேட்டிருப்பார்கள். ஆனால் அந்த இயக்கத்தின் பிதாவான மகானைப்பற்றி அநேகருக்கு அவ்வளவாகத் தெரியாது. இதைத் தீர்ப்பதற்கு இந்த வெளியீடு மிகவும் பயனளிக்கும். 24 பக்கள் கொண்ட இச் சிறு புத்தகத்தின் விலை இரண்டே அணுதான்.]

விநாயக் நரஹரிபாவே

கோபால் ராவ் காளே

★

எனக்கு வினோபாஜியிடம் முதன் முதலில் பழக்கமேற்பட்டது 1910–ல் ஆகும். அதற்கு முன் நான் அவரை ஒரு மிகவும் கூறிய அறிவும், சிறந்த நடத்தையும், புரட்சிகரமான சுபாவமும் கொண்டு, தன் தாய்க்கு தினம் தவருமல் "கேசரி" பத்திரிகையைப் படித்துச் சொல்லும் விசித்திர சுபாவமுள்ள பையனென்று மட்டுமே எண்ணியிருந்தேன். பரோடாவில் என் தந்தையின் மாமனுடைய வீட்டில் வினோபாஜியின் தந்தையின் நண்பரான டாக்டர் ஜொகளேகர் குடியிருந்தார். அவர் வீட்டிற்கு வினோபாஜி வருவதுண்டு. புரோஹித் என்ற வினோபாஜியின் நண்பர் ஒருவரும் கலா பவனத்திற்கும் இந்த வீட்டிற்கும் வந்துபோவதுண்டு. அவரைக்காணும் பொருட்டும் வினோபாஜி சில சமயம் அங்கே வருவார்; அப்பொழுது நான் அவரைப் பார்த்ததுண்டு.

திடீர் சந்திப்பு

ஆனால் இதெல்லாம் நெருங்கிய பழக்கமல்ல. எங்களிடையே நெருங்கிய பழக்கமேற்பட்டது நாங்கள் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் நாலாவது வகுப்பில் படித்துவந்தபொழுதே, வினோபாஜி எங்கள் தெருவுக்குப் பக்கத்திலிருந்த சந்தில் வந்து வசிக்கலானார். ஒரு நாள் அவர் ஊர் சுற்றக் கிளம்பியபொழுது நான் அவரைத் தற்செயலாகக் கண்டேன். அவர் என்னை 'சுற்ற வருகிருயா?' என்று கேட்க, நானும் அவருடன் சேர்ந்து போகலானேன்; அவ்வளவு தான், அன்றிலிருந்து எங்களிடையே இணைபிரியாத நட்பு ஏற்

600 008

பட்டுவிட்டது. எங்கள் வீட்டிற்கும் அவர் அடிக்கடி வரலானார்.

வாக்குவாதத்தில் பிடித்தம்

வினோபாஜிக்கு ஊர் சுற்றுவதென்றால் மிகவும் பிடிக்கும். 5, 6-மைல் நடப்பதென்பது அவருக்கு வெகு சாதாரணம். நாங்கள் ஒவ்வொரு நாளும் குறைந்தது 15 மைல் நடப்பதுண்டு. சில சமயங்களில் மண்டை வெடிக்கும் உச்சி வெயிலில் அவருக்கு ஊர் சுற்றவேண்டுமென்ற எண்ணம் தோன்றிவிடும். அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் என்னைப்போன்றவர்களின் பாடு ஆபத்துத்தான்! ஆனால் சுற்றக் கிளம்பிவிட்டால் எங்களுக்குப் பொழுதுபோவதே தெரியாது. வினோபாஜி நடந்துகொண்டே தர்க்கம் செய்துகொண்டும், பேசிக்கொண்டும் இருப்பார். எங்களுக்கு வீட்டு நினைவே இராது. சில சமயங்களில் பேச்சின் சுவாரஸ்யத்தில், எங்கள் தெருவையடைந்தும், நாற்சந்தியில் மணிக்கணக்காக வாதவிவாதம் செய்துகொண்டேயிருப்போம். எங்களைச் சுற்றிலும் பெருத்த கூட்டம் கூடியிருந்தபோதிலும் நாங்கள் அதைப் பொருட்படுத்தமாட்டோம். வீட்டில் உள்ளவர்கள் சாப்பாடெல்லாம் முடித்துக்கொண்டு படுக்கப்போகும் சமயத்தில் நாங்கள் வீடு போய்ச் சேருவோம்.

பரோடா புஸ்தகசாலையில்

இவ்வாறு ஊர் சுற்றுவதில் நாங்கள் மிகுந்த நேரத்தைச் செலவழித்ததைப் போலவே சர்க்கார் புஸ்தகசாலையிலும், 'சென்ட்ரல் லைப்ரரி'யிலும் புஸ்தகங்களைப் படிப்பதிலும் அதிக நேரத்தைச்செலவிட்டு வந்தோம். அப்பொழுது தான் பரோடாவில் சென்ட்ரல் லைப்ரரி ஆரம்பமாகி யிருந்தது. ஆகையால், சிறு வயதினராயிருந்தும் எங்களுக்கு ஏதோ கிடைத்தற்கரிய பொக்கிஷம் கிடைத்தது போன்ற உணர்ச்சி யேற்பட்டது. நாங்கள் அதை எங்களுக்குத் தெரிந்த வகையில் நன்கு பயன்படுத்தி வந்தோம். ஊர் சுற்றுதல், வாதம் புரிதல், புஸ்தகாலயத்தில் போய் படித்தல் ஆகியவற்றிற்கே நேரம் போதாமையால் நாங்கள் பள்ளிக்கூடத்தைப் பொருட்படுத்தவேயில்லை. பள்ளிக்கூடத்தில்போய் தலையைக் காட்டுவதோடு வெளியே வந்துவிடுவோம். புத்திசாலிகளாகையால் ஒரு சிறிது படித்து, மெட்ரிகுலேஷன் பரீக்ஷை வரை நாங்கள் இதே வகையில் தான் தேறினோம்.

வினோபாஜியின் தந்தை, ஐரோப்பாவின் வியாபார பாஷை என்ற காரணத்தினால், பிரஞ்சுப் பாஷையைப் பாடமாக ஏற்றுப் படிக்கும்படி அவரை வற்புறுத்தினார். நாங்கள் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்காக அகமதாபாதுக்குப் போனோம். ஆனால் பரீட்சைக்கு வைக்கப்பட்டிருந்த பிரெஞ்சுப் புஸ்தகங்களை வினோபாஜி அங்கே போவதற்குமுன் திறந்துகூடப் பார்த்ததில்லை. அவருக்குப் பல்

வேறு பாஷைகளின் அமைப்பும் ஒன்றுக்கொன்று உள்ள வித்தியாசங்களும் வெகு விரைவில் புரிந்துவிடுவது வழக்கம். இதனால் ஏற்கனவே அவருக்கு இருந்த சிறிது பிரெஞ்சுப் பாஷை ஞானத்தைக் கொண்டு பரீக்ஷை புஸ்தகங்கள் அனைத்தையும் படித்து, பரீட்சையில் எழுதித் தேறியும் விட்டார்.

பிடிவாதமான சுபாவமுள்ளவராகையால், விநோபாஜி, ஒரு சமயம் காலேஜின் முதல் வகுப்புப் பரீக்ஷையில் தேருமல் போயிருக்கவேண்டியவர் எப்படியோ தேறினர். கணிதம் அவருக்கு மிகவும் பிடித்தமான விஷயம். அதை அவருடைய கடவுளென்றே சொல்லலாம். கணக்குப் பாடத்தில் மட்டும் அவரை எவராலும் மிஞ்சமுடியாது. கேள்வித்தாளில் முதல் கேள்வி மிகவும் கடினமாயிருந்தது. விநோபாஜி கேள்விகளுக்கு ஆரம்பத்திலிருந்தே விடைஎழுதுவதென்று தீர்மானித்துக்கொண்டார். இதனல் முதல் கேள்வியிலேயே நேரத்தின் பெரும்பகுதி செலவழிந்துவிட்டது. கடைசியில் 80 மார்க் பெறவேண்டியவர் 30 மார்க் வாங்கி எப்படியோ தேறினர்.

என் சரித்திரத்தை எழுதவேண்டாம்

என் சரித்திரத்தை எவரும் எழுதவேண்டாமென்று விநோபாஜி எப்பொழுதும் சொல்வதுண்டு. அவருடைய சரித்திரத்தில் பெருப்பகுதி அகத்தைப் பற்றியது; புற விஷயங்களைப் பற்றியது அல்ல. வெளியில் நடந்த சம்பவங்கள் வெகு சிலவே. "என் சரித்திரத்தை எழுதுவதென்றால் நானேதான் எழுதவேண்டும்" என்று விநோபாஜி கூறுவது முற்றிலும் சரி. அவருடைய மனோ நிலைக்கும் எங்கள் மனோ நிலைக்கும் முன்னமேயே பெருத்த வேற்றுமையிருந்தது. இப்பொழுதோ, அது கணக்கிலடங்காதபடிப் பெருகிவிட்டது. விநோபாஜி ஆத்மீகத் துறையில் வெகு விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறார். அவருடன் ஒப்பிடும் பொழுது நாமெல்லாம் ஏற்கெனவே இருந்த இடத்திலேயே இருந்து வருகிறோமென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால் அவருடைய சரித்திரத்தை எழுதுவதற்கு எனக்குச் சிறிதும் உரிமையில்லை. இந்த நினைவுகள் அவருடைய சரித்திரமல்ல; அவருடைய சரித்திரப் பாதையிலுள்ள மைல் கற்கள் அல்லது மனோகரமான காட்சிகள் எனலாம்.

விநோபாஜியுடன் எனக்குப் பழக்கம் ஏற்படுவதற்கு முன் சுவாமி விவேகானந்தருடைய வாக்கியமொன்றைப் படித்திருந்தேன். அதில் அவர், "மனிதனுக்கு சங்கராச்சாரியாருடைய அறிவும், புத்த பகவானுடைய உள்ளமும் வேண்டும்" என்று சொல்கிறார். விநோபாஜியைப் பார்த்த பிறகு எனக்கு அந்த வாக்கியத்தின் பொருள் ஓரளவு தெளிவாயிற்று. இவ்வளவு

கூரிய அறிவின் மீது அவருடைய உள்ளம் புரிந்துவரும் ஆட்சியைப் பார்க்க வியப்புண்டாகிறது. நுணுக்கமான தர்க்க சக்தியோடுகூட, உயர்ந்த ரசிகத் தன்மையும், கணித ஞானத்தோடு, உயர்ந்த கவிதா சக்தியும் வினோபாஜி ஒருவரிடமே காணலாம். கீதையின் 7-வது அத்தியாயத்தில், "ஞானியே பரம பக்தன்" என்று கூறியிருப்பதும் 18-வது அத்தியாயத்தில், "பக்தியின் மூலமாக அவன் என்னை உணர்கிறான்" என்று கூறியிருப்பதும் வினோபாஜியின் விஷயத்தில் மிகவும் பொருத்தமாயிருக்கின்றன. அறிவும் உள்ளமும் இவ்வாறு இணைந்திருப்பதை வேறெங்கும் காண்பதரிது. கை ரேகை சாஸ்திரத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. வினோபாஜிக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. வினோபாஜி தம் கையை எவருக்கும் காட்டுவதில்லை. ஆயினும் எனக்கு அவரிடமிருந்த நெருங்கிய பழக்கத்தினால் அவருடைய கையை அடிக்கடி நான் பார்ப்பதுண்டு. அவருடைய கையில், அறிவு ரேகையும் உள்ளத்தின் ரேகையும் தனித்தனியாய் இராமல் ஒன்றாயிருக்கின்றன.

இயற்கையில் அமைந்த பிரம்மசரியம்

வினோபாஜியின் பிரம்மசரியம் அவர் இயற்கையாகவே ஏற்றதாகும். அதற்கு எவருடைய தூண்டுதலும் காரணமாயில்லை. ஆனால் ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமியின் உதாரணம் அவர் முன் இருந்தது உண்மை. சிறு வயதில் 'தாஸபோதத்'தை அவர் விரும்பிப் படிப்பதுண்டு. ஒரு சமயம் பிரம்மச்சாரி செருப்பணியக் கூடாதென்றும் மெத்தையில் படுக்கக்கூடாதென்றும் ஒரு புஸ்தகத்தில் படிக்கவே, அது முதல் அவை இரண்டையும் அவர் விட்டுவிட்டார். கோடைக்காலத்தில் சபர்மதி மணலிலும் அவர் வெறுங்காலுடனே நடப்பார். வர்தாவுக்கு வந்து பல வருஷங்களான பிறகு துப்புரவைக்கருதி செருப்பணியத் தொடங்கினர். உபநயனச் சடங்கின் முடிவில் மாமன் தன் பெண்ணை உபநயனமான மையனுக்குக் கொடுப்பதாகச் சொல்லும் ஒரு சம்பிரதாயமுண்டு. இந்த அர்த்தமில்லாத பழக்கத்திற்குச் சாட்சியாக இருக்க வினோபாஜி மறுத்துவிட்டார்.

அந்தக் காலத்திலேயே அவருடைய பேச்சில் பற்றின்மை காணப்பட்டதோடு, சிறிது உஷ்ணமும் சில சமயங்களில் காணப்பட்டதுண்டு. "நகத்தையும் தலையையும் ஏன் இப்படி வளர்க்கிறீர்கள் ?" என்று யாரோ ஒருவர் ஒரு சமயம் கேட்டதற்கு அவர், "நீங்களென்ன நாவிதரா ?" என்று பதில் கேட்டுவிட்டார். தோளில் சட்டையை மடித்துப்போட்டுக் கொண்டு அவர் பரோடா நகரத்தில் சிறிதும் தயக்கமின்றிச் சுற்றுவார். எனக்கும் அவரு

டைய சேர்க்கையினுல் இந்தப் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அவருடன் இவ்வாறு சுற்றுவதில் சங்கோஜமே தோன்றுவதில்லை. எவராவது அவரிடம் ஆங்கிலம் பேசத் தொடங்கினுல், அவர் உடனே, "உன் தாய் என்ன துரைசானியா?" என்று கேட்டு விடுவார். இதிலிருந்து எவரும் தவருக எண்ணிக்கொள்ளக் கூடாது. தாய் பாஷையில் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த போதிலும், ஆங்கிலத்தையும் சுத்தமான உச்சரிப்புடன் பேச வேண்டுமென்பதை அவரைப் போல் வற்புறுத்துகிறவர் வேறெருவர் உண்டென்று நான் நினைக்கவில்லை. இன்று மட்டுமல்ல, சிறு வயதிலிருந்தே அவருக்கு இவ்விஷயத்தில் பிடிவாதம் அதிகம். "ஒரே ஒரு சொல்லானுலும் அதன் பொருளை நன்குணர்ந்து சரியாகக் கையாளுவதனுல் சொர்க்கலோகத்தில் நாம் வேண்டுபவைகளைவேண்டியாங்கு எய்தலாம்" என்பது அவர் சூத்திரம்: இதனுலேயே அவர் பல பாஷைகளை வெகு விரைவாகப் பயின்றுவிட்டார்.

'தாஸபோதம்,' மோரோபந்த் இயற்றிய 'ஆரியபாரதம்,' 'கேகாவளி' ஆகிய நூல்கள் அந்தக் காலத்தில் விநோபாஜிக்கு மிகவும் பிடித்தவை. 'ஆரிய பாரதத்'தின் சில பாகங்கள் அவருக்கு மனப்பாடம். 'கேகாவளி'யை அவர் தெருவெல்லாம் எதிரொலிக்கும்படி உச்ச ஸ்தாயியில் பாடுவதுண்டு. இதைத் தவிர, பறிமுதல் செய்யப்பட்ட புஸ்தகங்களில் ஸவர்க்கரின் முன்னுரையுடன் கூடிய 'மாஜினி சரித்திர'த்தை எங்கள் முன் உரத்த குரலில் படித்துக் காட்டுவார். 1908-ல் 'கால்', 'கேஸரி' முதலிய பத்திரிகைகளையும், பயராடா ஸர்க்கார் புஸ்தக சாலையிலிருந்து எல்லா மராத்திப் புஸ்தகங்களையும் படித்து விநோபாஜி தம் கண்ணைக் கெடுத்துக்கொண்டார். அதனுல், இன்று யோக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தும் அவருடைய கண்ணுடியின் குறி '-8' என்பதிலிருந்து அவரது கண்ணின் நிலைமையைப் புரிந்து கொள்ளலாம். மராத்தி பாஷையில் விநோபாஜியின் திறமை ஒப்பற்றதென்று சொல்லத் தேவையில்லை பல சமயங்களில், 100 மார்க்க கொடுக்கக் கூடாதே என்பதற்காக ஆசிரியர்கள் 99 மார்க் கொடுத்ததுண்டு!

வித்யார்த்தி மண்டல்

1914-ல் நாங்கள் 'வித்தியார்த்தி மண்டல்—மாணவர் சங்கம்—ஒன்று ஸ்தாபித்தோம். அதன் சார்பில் வாரத்திற்கு ஒரு முறை நாங்கள் ஒவ்வொருவராக உபந்நியாசத்திற்குப் பிறகு வாதவிவாதம் நடக்கும். இந்த சங்கம் முதலில் ஸ்ரீ தோத்ரேஜியின் வீட்டிலும், பிறகு எங்கள் வீட்டிலும் கூடிவந்தது. இறுதியில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் கூட்டம் நடக்கலாயிற்று. எங்கள் சங்கத்திலிருந்த மாணவர்கள் வெகு சிலரே.

ஏனெனில் எங்களை எல்லோரும் தீவிரவாதிகளென்று கருதி வந்தார்கள். இது ஒரு வகையில் உண்மை. அக்காலத்தில் எங்கள் சுபாவப்படி நாங்கள் மற்ற சங்கங்களைக் குறை கூறவும் தயங்கியதில்லை. இந்த சங்கத்தின் சார்பில் ஹனுமத் ஜயந்தி, சிவாஜி ஜயந்தி, கணபதி உற்சவம், தாஸ நவமி முதலியவற்றை நாங்கள் கொண்டாடுவதுண்டு. யாசகம் வாங்கி, சங்கம் ஒரு புஸ்தசாலைக்கும் ஏற்பாடு செய்துவிட்டது. இதில் 1600 முக்கியமான புஸ்தகங்கள் இருந்தன. அவைகளுள் வேறெங்கும் கிடைக்காத பெரிய அகராதிகளும் இருந்தன. இந்தப் புஸ்தகாலயத்தை நாங்கள் பிற்காலத்தில் சபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்திற்கு அளித்து விட்டோம்.

பேச்சில் ஆவேசமும் கருத்துப் பிரவாகமும்

ஆனால் நான் சொல்ல வந்தது வேறு விஷயம். மாணவர் கூட்டத்தில் வினோபாஜி பேசும் பொழுது கூட்டத்தில் ஒருசிலரே இருந்துவந்த போதிலும், அம்மாதிரியான பேச்சுக்களை நான் இதுவரையில் அவர் வாயால் கேட்கவில்லை. மாஜினியைப் பற்றி அவருடைய உபந்நியாசம் நடந்தது. 32 வருஷங்கள் ஆகியிருந்த போதிலும், அது இப்பொழுதும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் அவருடைய பேச்சிலிருந்த ஆவேசமும் பிரவாகமும் தனித் தன்மை வாய்ந்தவை. பிறகு அவருடைய பேச்சில் அமைதியும் அடக்கமும்தோன்றி விட்டது. இப்பொழுதோ, அது மிருக்த நிதானமும் கம்பீரமும் பெற்றுவிட்டது. முன்பு அவர் பேசிய விதத்தை இப்பொழுது நினைப்பதற்கே முடியாமலிருக்கிறது. வைராக்கியத்தின்ஆரம்ப காலத்தில் மனிதன் தீயைப் போல் சுடும் தன்மை பெறுகிறான். வைராக்கியம் முதிர்ந்து விடும் பொழுது தானாகவே மனம் இளகி விடுகிறது. பக்குவம் பெறாத நிலைமையில் மனிதன் இளகிய மனம் பெற்றிருப்பானால் சுலபமாகப் பிறர் வயப்பட்டுவிடுவான். ஆகையால் வைராக்கியம் தேவையான பொழுது கடூரமாக நடந்து கொள்ளுதல் குற்றமாகாது. ஆனால் இதைக் காணும் பிறர் தவறாக எண்ணுவதற்கு இடமுண்டு. வினோபாஜியின் விஷயத்திலும் இத்தகைய தவறான அபிப்பிராயங்கள் தோன்றியதுண்டு. ஆனால் அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அவரைப்பற்றித் தவறாக எண்ணியதில்லை. அவருடைய பழய சுபாவத்திற்கும் இன்றைய சுபாவப் போக்கு ஆகியவற்றிற்கும் பெருத்த வித்தியாசம் இருப்பதாகத் தோன்றிய போதிலும், இது மேல் பரப்பிலுள்ள வித்தியாசமே. இன்று அவரிடம் காணப்படும் எளிமை முன்பும் இருந்ததுதான்; ஆனால் இந்தக் காலத்தில் அது வெளியே புலனாவது வேறு வகையிலாகும்.

தேச சேவை

1913 நவம்பரில் நாங்கள் மெட்ரிகுலேஷன் தேறிய காலத்திலேயே விநோபாஜியின் மனத்தில் வீட்டை விட்டு வெளியே கிளம்பும் எண்ணம் உதிக்கத் தொடங்கிவிட்டது. வீட்டில் அவருக்குச்சிரமம் இருந்ததோவென்ருல் அப்படி ஒன்றுமில்லை. எல்லாவகை சௌகரியங்களும் இருந்தன. அவருடைய தந்தை சிறந்த சாஸ்திரீய அறிவு படைத்தவர், உலகம் அறிந்தவர். தாயோ விநோபாஜியின் மனத்திற்கு ஒத்தவர். மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். தேச சேவை செய்வதில் விநோபாஜியின் மனம் சென்றதென்ருல் அவருடைய வீட்டார் அதை எதிர்த்திருக்கவேமாட்டார்கள். ஆனல் அவருக்கு எத்தகைய கட்டுப்பாடும் பாசமும் பிடிக்கவில்லை. அவருடைய மனம் வெறும் தேச சேவையில் செல்லவில்லை. சாதனை அல்லது தவம் புரிவதே அவருடையநோக்கமாயிருந்தது. அவர் நண்பர்களையும் வீட்டைத் துறந்து வெளியேறும்படி வற்புறுத்துவதுண்டு.

நான் அவரிடம் தேச சேவை செய்வதற்கு B. A., L. L. B. தேறியாக வேண்டுமென்றும் தர்க்கம் செய்வேன். மற்றவர்களும் இம்மாதிரியே பேசி வந்தார்கள். இவ்வாறு 2 வருஷங்கள் கழிந்தன. இடையில்என் கலியாணப் பேச்சு எழுந்தது. நான் பரோடாவில் என் பாட்டி வீட்டில் இருந்தேன். இதனல் என் தந்தைக்கு என் அபிப்பிராயமே தெரியவில்லை. அவர் என்னைக் கேளாமலேயே கலியாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார். நான் மறுக்கவே தந்தை எனக்கு பெண் பிடிக்கவில்லையென்று எண்ணிக்கொண்டார். ஆனல் விஷயம் அதுவல்ல. என் ஆயுள் பூராவும் என் தந்தை என்னை ஒரு வார்த்தைகூட கடிந்து சொன்னதில்லை. ஆகையால் கடைசியில் அவர் சொன்னதை ஒப்புக்கொண்டேன். விநோபாஜி மிகுந்த கோபமுற்ருர். ஆனல் அவர் என்னைக் கைவிடவில்லை. 'கோப்யா' என்று பிரியமாகக் கூப்பிட்டுக்கொண்டு எப்பொழுதும்போல் என் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்தார்.

காந்திஜி வைத்த பெயர்

எனக்குக் கலியாணம் ஆன பிறகும் நான் விநோபாஜியினல் 'கோப்யா' என்று அழைக்கப்படுவது என் பாட்டிக்குப் பிடிக்கவில்லை. ஆனல் அவள் உன்னுடைய அந்த 'பாவ்யா' வந்திருந்தானென்று சொல்லுவாள். நாங்கள் விநோபாஜியை 'விநாயக்' என்றே அழைப்பது வழக்கம். ஆசிரமத்திற்கு வந்த பிறகு பாபுஜி அவருக்கு விநோபா என்று பெயரிட்டார். ஆசிரமத்தில் பாண்டோபா என்ற ஒருவர் இருந்தார். அந்தப் பெயரைப்போலவே பாபுஜி இந்தப் பெய்ரையும் அமைத்தார். அதுவே பிறகு வழக்கத்திற்கு வந்துவிட்டது.

விநோபாஜி காசியிலிருந்த காலத்தில் பாபுஜியின் ஆசிரமத்தைப் பற்றிய அறிக்கையைக் காண நேரவே, அவருக்கு ஆசிரமத்தினிடம் பற்றுண்டாகிவிட்டது. இதன் பிறகு பாபுஜிக்கும் அவருக்கும் கடிதப் போக்குவரத்து நடக்க இவர் ஆசிரமத்தில் சேர்ந்துகொண்டார். அந்தக் காலத்தில் ஆசிரமம் கோசரப்பில் இருந்தது. ஆசிரமத்தின் ஆரம்ப காலத்தில் மஞ்சு கொட்டும் வேலை செய்துகொண்டு ஜடபரதரைப்போல் இருந்து வந்தார். பாபுஜியின் பேச்சுக்களை காது கொடுத்துக் கேட்டுவந்தார். ஆனால் பாபுஜி விநோபாஜியை புரிந்து கொண்டுவிட்டார்.

கீதையைப்பற்றி உபன்யாசம்

ஆசிரமத்தில் சிறிது காலம் இருந்த பிறகு விநோபாஜி ஒரு வருஷத்திற்கு ஓய்வு பெற்றுக்கொண்டார். 6 மாதம் 'வாயியில்' உள்ள பாடசாலையில் நாராயண சாஸ்திரி மராடே என்பவரிடம் பிரும்ம சூத்திரம் பாடம் கேட்டார். எஞ்சிய 6 மாதத்தையும் மகாராஷ்டிர தேசமெங்கும் சுற்றி கீதையைப் பற்றிப் பேசிவந்தார். இந்தப் பேச்சுக்களைப் பற்றிய முக்கியமான விஷயம் என்னவென்ருல் தாம் பேசப்போவதாக குறிப்பிடப்பட்ட துண்டுக் கடிதங்களையும் அவரே தான் பலவிடங்களிலும் விநியோகிப்பார். ஒரே இடத்தில் மூன்று நாளுக்கு அதிகமாகத் தங்குவதில்லை. முதல் நாளில் கூட்டம் குறைவாயிருக்கும். 2-வது 3-வது நாட்களில் பெருங்கூட்டம் கூடிவிடும். சில சமயங்களில் 7 நாட்கள் வரையில் அவர் தங்க வேண்டியதாகிவிடும். ஆனால் என்றையதினம் ஒரு வருஷம் பூர்த்தியாயிற்றோ அன்று அவர் மீண்டும் ஆசிரமத்திற்கு வந்துவிட்டார்.

வைதீகத்தை எதிர்த்தவர்

ஆசிரமத்திற்குச் சென்ற பிறகும் விநோபாஜி நண்பர்களின் தொடர்பை விடவில்லை. 1918-ல் அவர் என்னை சபர்மதி ராஷ்டிரீய சாலைக்கு அழைத்தார். ஆனால் எனக்கு இன்புளுவென்ஸா காய்ச்சல் கண்டதாலும், B.A., L.L.B. மோகம் இன்னும் விடாமையாலும், சென்ற நான் திரும்பி வந்துவிட்டேன். அதே வருஷத்தில் விநோபாஜியின் தாய் இருந்தாள். பாபுஜி தாய்க்கு பணிவிடை செய்யும் பொருட்டு விநோபாஜியை போகச் சொன்னார். அவர் போய் தாய்க்குச் சிறந்த சேவை செய்தார். ஆனால் சுடுகாட்டில் பிராமணர்கள் கையினல் பிணத்திற்கு தீயிடும் பிரச்னை எழவே விநோபாஜி சுடுகாட்டிற்குப் போக மறுத்துவிட்டு வீட்டிலேயே கீதையையும் உடநிடதங்களையும் பாராயணம் செய்துகொண்டிருந்தார். ஜனங்கள் அவரை எவ்வளவோ நிந்தித்தார்கள். அவருடைய தங்

தையும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் விநோபாஜி தாம் உண்மையென்று கருதியதை கை நழுவவிடவில்லை. அவருடைய நண்பரான பேடேகர் என்பவர் காசியில் இறந்த பொழுதும் இதேமாதிரி நிகழ்ந்தது. அந்த வீர புருஷன் விநோபாஜியிடம்,''எனக்கு கோவிந்தக் கொள்ளி வேண்டுமானால் போடு. ஆனால் இந்த தோட்டிகளேயும் அவர்களைப் போன்ற பிராமணர்களேயும் மட்டும் என்னைத் தீண்ட விடாதே'' என்று சொல்லியிருந்தார்.

வக்கீல்கள் தொழிலே விடவேண்டும்

1920-ஆகஸ்டில் மகாத்மாஜி ஒத்துழையாமை இயக்கம் தொடங்கினர். L. L. B. கடைசி பரீக்ஷைக்கு 2 மாதமே பாக்கியிருந்தது. காலேஜில் கணக்குப்படி நான் ஆஜர் கொடுத்துப் பணம் கட்டி பரீக்ஷை விண்ணப்பமும் அனுப்பிவிட்டேன். பரீக்ஷையில் எழுதுவதுதான் பாக்கி. லோகமான்ய திலகரை தரிசிப்பதற்காக விநோபாஜி பம்பாய்க்கு வந்திருந்தார். நானும் அவருடன் ஸர்தார் கிருஹத்திற்குப் (லோகமான்யரின் வீடு) போயிருந்தேன்: மறுநாள் அவர் எப்பொழுதும் போல் என் வீட்டிற்கு வந்து, ''இனி வக்கீல் பரீக்ஷையில் தேறி என்ன செய்யப் போகிருய்? வக்கீல்களே இனி தொழிலே விடவேண்டுமே'' என்ருர். நான், ''விண்ணப்பம் அனுப்பிவிட்டேன். பணமும் கட்டியாகிவிட்டது. பரீக்ஷை மட்டும் எழுதிவிடுகிறேன். ஆனால் தொழில் நடத்தப்போவதில்லை'' என்றேன். ஆனல் அவர் ''கூடாது, சூரியாஜியைப்போல் பாசத்தையே அறுத்தெறிந்து விடவேண்டும். பிறகு தொழில் நடத்த வேண்டுமென்ற சபலம் தோன்றலாம். ஆகையால் பரீக்ஷையே எழுதவேண்டாம்'' என்ருர் அவ்வளவுதான். தேச சேவை செய்வதற்கு L. L. B. பட்டம் பெறவேண்டுமென்று வாதிப்பதற்கே சந்தர்ப்பமில்லாது போயிற்று. ஆகவே நான் வாய் திறவாமல் அவர் கூறியதை ஏற்றுக்கொண்டேன். தந்தையிடம் போனேன். அவருடைய கோபத்தையெல்லாம் சகித்துக்கொண்டு குடும்ப சகிதமாக ஆசிரமத்தில் சேர்ந்துவிட்டேன். எனக்கு முன்னமேயே ஸ்ரீ தோத்ரேஜியும், ஸ்ரீ மோகேஜியும் ஆசிரமத்தில் சேர்ந்திருந்தார்கள். விநோபாஜியின் இரு சகோதரர்களும் இதற்கு முன்னமேயே அவர் வழியைப் பின்பற்றி ஆசிரமத்தில் சேர்ந்திருந்தார்கள்.

1921 வருஷப் பிறப்பன்று ஸ்ரீ ஜம்னலால்ஜி பாபுவை வேண்டிக்கொண்டு விநோபாஜியை வர்தாவுக்கு அழைத்துப் போனர். அவருடன் ஆரம்பத்தில் ஸ்ரீ தோத்ரேஜியும், வல்லபஸ்வாமி முதலிய சில மாணவர்களும் இருந்தார்கள். நான் ஒரு வருஷம் முழுதும் சபர்மதியில் இருந்தபிறகு வர்தா ஆசிரமத்தை அடைந்தேன்.

சத்துள்ள சர்க்கரைவள்ளிக்கிழங்கு

உருளைக்கிழங்கிலிருப்பதை விட அதிகமாக உணவு சத்து சர்க்கரைவள்ளிக்கிழங்கில் இருக்கிறது. குறிப்பாக உருளைக்கிழங்கைவிட 'விடமின் ஏ' சத்தும் பன்மடங்கு அதிகமாயுள்ளது சர்க்கரைவள்ளியில். சுண்ணம்பு சத்தும் (Calcium) சர்க்கரைவள்ளியில் அதிகம். கொழுப்புச் சத்து உருளைக்கிழங்கில் 0. 5. கிராம் தான். சர்க்கரைவள்ளியிலோ 36 கிராம் உள்ளது. கார்போஹைட்ரேட் என்ற (மாவுச் சத்து) உருளைக்கிழங்கில் 87 கிராம்தான். சர்க்கரைவள்ளிக் கிழங்கிலோ 127 கிராம் உள்ளது.

அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியான இந்த வள்ளிக் கிழங்கு இப்போது நம் நாட்டிலும் சகஜமாகப் பயிராகி வருகிறது.

பிரபல தாவர நிபுணர்கள் வேறு எந்தப் பொருள்களிலும் காணமுடியாத அளவு சத்துப் பொருள்கள் சர்க்கரைவள்ளியில் கிடைக்கிறதெனக் கூறுகிறார்கள். கரும்பிலிருந்து கிடைக்கும் அளவிற்கு இதில் சர்க்கரைப் பொருள் எடுக்கலாமாம்.

உடலுக்கு உறுதியளிக்கும் சத்துப் பொருள்களான, கார்போஹைட்ரேட், (மாவுச்சத்து) கால்ஷியம் (சுண்ணம்புச்சத்து) விட்டமின் 'ஏ'-இவை மூன்றும் சர்க்கரை வள்ளிக்கிழங்கில் விசேஷமாக உள்ளன.

சர்க்கரை வள்ளிக்கிழங்கின் தழைகள் கால் நடைகளுக்குச் சிறந்த தீவனமாகிறது. ஒரு ஏக்கரா நிலத்தில் சுமார் $\frac{1}{2}$ டன் தழைகள் கிடைக்கும். இன்னும் சர்க்கரைவள்ளிக்கிழங்கிலிருந்து காகிதம், துணி, பசை முதலிய பொருள்களும் தயாராகின்றன. சில ரகக் கிழங்குகளிலிருந்து சாராயமும் காய்ச்சப்படுகிறது. வள்ளிக்கிழங்கின் மாவிலை ரொட்டியும் இதர மிட்டாய் தினுசுகளும் தயாரிக்கின்றனர். கோதுமை ரொட்டியைவிட இந்தக் கிழங்கு ரொட்டி மிகவும் புஷ்டியளிக்கிறது. அமெரிக்காவில் இந்த ரொட்டி ஏராளமாகச் செலவாகிறதாம்.

நம் நாட்டில் இந்த வள்ளிக் கிழங்கில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று சிவப்பு ரகம், மற்றொன்று வெள்ளை ரகம்.

வெள்ளைராசியைவிடச் சிவப்பு ராசியில் தான் சத்து அதிகம். வள்ளிக்கிழங்குச் செடி சாதாரணமாய் ஐந்து அல்லது ஆறு அடி உயரமிருக்கும். பச்சைச் செடியின் தண்டை நறுக்கிப் பயிரிடுவதுதான் விசேஷ விளைச்சலைத் தரும்.

உருளைக்கிழங்கைவிட குறைந்த செலவில் நிறைந்த பலனையும் அதிக புஷ்டியையும் தருகிறது இந்த வள்ளிக்கிழங்கு என்று விவசாய நிபுணர்களின் ஆராய்ச்சியிலிருந்து தெளிவாகிறது.

—"கிருஷி"

ராணியின் காதல்

எம். கே. ஸ்ரீனிவாசன் B.A.

கணபதி தேவன் தன் எதிரே இருக்கும் ஒரு அருமையான சிற்பத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட்டான். அவனைச் சேர்ந்த மந்திரி பரிவாரங்களும் ஆச்சர்யமடைந்தற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அச்சிற்பம் தெய்வீகக் காதலை தெரிவித்தது. ஒரு காதலி தன் காதலனைத் தழுவியவாறு தன் அன்பை வாரி அள்ளிக்கொடுத்துக் கொண்டிருப்பதை அச்சிற்பம் பரிபூர்ணமாய் விளக்கிக் கொண்டிருந்தது. அவ்விரு காதலர்களின் கண்களில் தெய்வீக அன்பு பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது.

"யார் இந்தக் காதல் சிற்பத்தை உருவாக்கினது" என்று வினவினான் கணபதி தேவன்.

"கஜேந்திரன் ஒரு கல் தச்சன்" என்றான் அவனது மந்திரிகளில் ஒருவன்.

"அவனைக் காணவேண்டும்."

எவ்வளவு தூரம் கணபதி தேவன் அச்சிற்பத்தைக் கண்டு ஆச்சர்யமடைந்தானே, அவ்வளவு தூரம் கஜேந்திரனைக் கண்டதும் ஆச்சர்யமடைந்தான்.

கஜேந்திரன் ஒரு மெல்லிய சிறு பையன், உடம்பில்போதிய ரத்தமில்லாமையால், கண்கள் வெளியில் வந்துவிட்டன. ஆனால் அக் கண்களில் ஒரு தீவிரப் பார்வை இருந்தது.

கஜேந்திரன் கணபதி தேவனைக் கண்டு நமஸ்காரம் செய்தான்.

"நீ ஒரு சிற்பியா?" என்று வாரங்கல் தேசத்து அரசன் ஆச்சர்யத்துடன் கேட்டான். 'நீயா தம்பி இந்த சிற்பத்தை செதுக்கினாய்'' என்று மறுபடியும் ஒரு கேள்வி கேட்டான்.

"ஆமாம் அரசே."

"உனக்கு காதலைப் பற்றித் தெரியுமா?"

"ஒன்றும் தெரியாது."

"ஆனால் நீ செய்திருக்கும் வேலைப்பாடு நிரம்பப்பாராட்டத் தக்கதாய் இருக்கிறது. நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்."

"தாங்கள் இந்த ஏழையை கௌரவிப்பதற்கு மிகவும் பாராட்டுகிறேன்."

"அந்தச் சிற்பத்தில் இருப்பவன் நம்முடைய படைத் தலைவன் கருணாகரன் தானே?' என்று தனது பிரதம மந்திரியைக் கேட்டான் கணபதி தேவன்.

"ஆமாம், அரசே!"

"அந்தப் பெண் யார்?"

"அவள்தான் சாரங்கி தேவ தாசி."

"பாவம்! அப்பாவி கருணைகர னுக்கு இம்மாதிரி சிற்பத்தில் கண்காட்சி அளிப்பானென்று கனவிலும் நினைத்திருக்கமாட் டான் ஆனால் அவனைச் சிற்பிச் சிறுவன் அம்பலத்திற்கொண்டு வந்து விட்டிருக்கிறான். அச் சிறுவனுக்கு ஐம்பது பொன் நாணயங்கள் கொடுங்கள். உடனே அவனை என்னுடன் அழைத்துவர ஏற்பாடு செய்யுங் கள். என் மனத்தில் வகுத்திருக் கும் திட்டம் இச்சிறுவனால்தான் ஈடேறவேண்டும்," இது மன்ன னின் உத்திரவு. அதற்குக் கீழ்ப் படிந்து, கஜேந்திரனை வாரங்க லுக்கு அழைத்துச் சென்றார்கள். ராமப்பா கோவிலில் சிற்பங் கள் செதுக்குவதற்கு கஜேந் திரன் நியமிக்கப்பட்டான்.

ராமப்பா கோவில் வாரங்க லுக்கு வடமேற்கே நாற்பது மைல் தூரத்திலிருந்தது. அக் கோவிலைச் சுற்றி கோட்டை மதில்களும், பக்கத்தில் ஒரு பிரமாண்டமான ஏரியும் இருந் தன. ராமப்பா கோவில் மிகப் பெரியது. பெரிய தூண்களும், ஸ்தம்பங்களும் கொண்டு நில வப்பட்ட ஒரு வைணவ ஸ்தலம். ஆனால் சிற்பிகளின் வேலைப் பாடே இல்லாத கோவிலாய் இருந்தது. கணபதி தேவன் சிறு வனின் சிற்பவித்வத்தை நன்றாய்ப் புரிந்துகொண்டான். மன்னனே ஒரு சிறந்த ரசிகனும் கூட.

கஜேந்திரனைத் தன்னுடன் ராமப்பா கோவிலுக்கு அழைத் துச் சென்றான். கோவிலைச் சுற் றிக் காண்பித்துவிட்டு இக் கோயிலைச் சிற்ப மயமாகச் செய்யவேண்டுமென்று மன் னன் கேட்டுக்கொண்டான். கோவிலுக்கு எதிரில் ஒரு பெரிய கற்பாறை இருந்தது. அப்பாறை யைக் காண்பித்து அரசன் "அப்பாறையிலிருந்து நந்தி எருது ஒன்று வெளிப்படவேண் டும்" என்றான்.

கஜேந்திரன் தலையை அசைத் தான்.

"எத்தனை நாட்கள் பிடிக் கும்' என்று வினவினான் கண பதி தேவன்.

"அரசே, எல்லாம் கடவுள் செயல். என்னால் திட்டமாய்க் கூறமுடியாது. நான் உதார ணத்திற்கு ஒரு உயிருள்ள நந்தி எருதைக் காணவேண்டும். பிறகு ஒரு சிறயதொரு எருதை உருவாக்கிக்கொண்டு இச் சிற் பத்தை ஆரம்பிக்கவேண்டும்" என்றான் கஜேந்திரன்.

★

2

கணபதி தேவன் அச்சிறு வனை ஆச்சர்யத்துடன் கவனித் தான். அச்சிறுவன் யாராக இருக்கலாம் என்று சிந்தித்

தான். அவன் வாரங்கலுக்குச் சென்றதும் சிற்பிச் சிறுவனைப் பற்றி விசாரித்தான். கஜேந்திர னுடைய தந்தை ஒரு ஊர் சுற்றும் வழிப்போக்கன். அவன் மனைவியோ ஒரு அடங்காப் பிடாரி. அவர்களுக்கு வேண்டா வெறுப்பாய் தோன்றியவன் தான் கஜேந்திரன். கையில் கலையை வைத்துக்கொண்டு சிறு குழந்தையாய் இருக்கும் பொழுது மண்ணினால் பல உருவங்கள் செய்வான். பெரியவனாக வளர்ந்ததும் கல் உளியினால் பல சிற்பங்களைச் செதுக்கினான். அவனது கைவேலை திறனைப் பார்த்து அதைக் கொண்டாடத்தெரியாமல் அவனை ஏசியும் அடித்தும் வீட்டை விட்டு துரத்தியும் விட்டனர் அவனது பெற்றோர்கள்.

தானும் தனியாக வாழ காஜேந்திரன் வெளியே கிளம்பி விட்டான். வாரங்கலுக்கு அவன் வந்ததும், ஒரு கோவிலில் வேலை கிடைத்தது. சரியான ஆகாரம் இல்லாததால் சிறுவன் இளைத்து துரும்பாயிருந்தான். இருமலும் கூடவே அவனை உபத்திரப் படுத்திக்கொண்டிருந்தது. அக் கோவிலின் கற்சுவர்களில் ஒரு புது நவீனத்தை உண்டாக்க வேண்டுமென்று நினைத்தான். எவ்வாறோ ஒரு சுத்தியும் உளியும் சம்பாதித்துக்கொண்டான்.

ஒரு இரவு. ஒரு தெரு வழியாக கஜேந்திரன் சென்று கொண்டிருக்கையில், ஒரு வீட்டில் ஜன்னல் வழியாக அவன் கண்டது அவனைத்திகைப்படையச்செய்தது. அவனுக்கு விஷயம் என்னவென்று புரியவில்லை. ஆனால் அவன் கோவிலில்செதுக்கப்போகும் முதல் சிற்பத்திற்கு அவன் கண்ட காட்சி ஆதாரமாக இருந்தது. இரவில் ஒரு சிறிய கை விளக்கை வைத்துக் கொண்டு சிற்பி தன் வேலையை ஆரம்பித்தான். இரவில் முதலில் எங்கிருந்து சப்தம் வருகிறதென்று கோவில் பூஜாரிக்குத் தெரியவில்லை. பிறகு ஒரு நாள் இரவு சப்தம் வரும் திசையை நோக்கி ஆராய்ச்சி செய்து சிறுவனின் சிற்ப வேலையைக் கண்டு திக்பிரமை அடைந்தார். ஆனால் அவர் அதைக் கண்டுகொள்ளவுமில்லை—அவனைக் கண்டிக்கவும் இல்லை. முடிவில் உருவானது ஒரு காதல் சித்திரம். படைத்தலைவன் கருணாகரனும் சாரங்கியும் ஒருவரையொருவர் தழுவிய அன்புச் சித்திரம்—சிற்பமாகத் திகழ்ந்தது. அதுவே அனறை கஜேந்திரனுக்கும் மன்னன் கணபதி தேவனுக்கும் நட்பை உண்டாக்கியது.

"ராமப்பா கோவில், நாம் இறந்த பிறகு பல நூற்றாண்டுகளுக்கு சிறப்புடன் கலை ஒளியுடன் திகழும்'' என்று பல தடவை கணபதி தேவன் கஜேந்திரனைப் பார்க்க வரும்பொழுதெல்லாம் கூறுவது வழக்கம்.

"கஜா! நீதான் இந்தக் கோவிலை சிறப்படையச் செய்யப் போகிறாய்.''

"என்னை ஏன் இப்படி முகஸ்துதி செய்கிறீர்கள?"

"உனக்கு உலகமே இன்னும் சரியாக தெரியாதென்று நினைக்கின்றேன்."

"அரசே! உலகத்தில் வாழ்க்கை என்பது என்ன? உண்ணுவதும் உறங்குவதும் தானே!',

"கஜா! வாழ்க்கைதான் கவி! அதுதான் வேதாந்தம். அதுதான் விஞ்ஞானம். அதுதான் கலை. நீ உயிர் வாழ்வதற்கு உண்கிருய். உண்பதற்காக உயிர் வாழவில்லை. எல்லையில்லாப் புகழையும், உன் பெயர் மறவாதிருப்பதற்கும் நீ இந்த ஜன்மம் எடுத்திருக்கிருய்."

ராமப்பா கோவிலுக்கு அருகில் ஒரு குடிசை. அதில் கஜேந்திரன் வசித்து வந்தான். களிமண்ணுல் பல நந்திகள் செய்யப்பட்டன. இரவும் பகலும் வேலை செய்து கடைசியாக நல்லமாதிரியாக ஒரு நந்தி உருவாக்கப்பட்டது. அதை வைத்துக்கொண்டு மன்னன் அன்று காண்பித்த ஒரு பெரிய பாறையில் தன் வேலையை ஆரம்பித்தான். மெதுவாக ஒரு பெரிய எருதின் உருவம் வெளிவந்தது. அந்த வேலை முடிவடைந்த பிறகு கணபதி தேவன் அங்கு வந்து நந்தி சிலையை பரிசீலனை செய்தான். அந்த வேலை முடிய இரண்டு வருடங்கள் பிடித்தன. ஆனல் அந்த வேலை சிற்பியின் உடல் நலத்தை பாதித்துவிட்டது. அவனது கண்கள் உள்ளே போய் விட்டன. இருமலும் அதிகரித்தது.

"கஜா! நீ ஒரு வருடம் ஓய்வு எடுத்துக்கொள். நன்ருகச் சாப்பிடு. என் அரண்மனை வைத்தியர் உன்னை நன்ருகப் பரீட்சித்து நல்ல ஔடதங்களைக் கொடுப்பார். நன்ருக தேக சுகமும் வலிமையும் பெற்ற பிறகு நீ சுவர்களிலும், தூண்களிலும் உன் வேலைத்திறனைக் காண்பிக்கலாம்" என்ருர் அரசன்.

'எனக்கு ஓய்வு வேண்டாம் அரசே! வேலைதான் வேண்டும்.''

"வேண்டாம். பிடிவாதம் செய்யாதே. உன் நலம் என் நலமே. உன் உடல் நலம் கெட்டிருக்கும் பொழுது நீ வேலை செய்யக்கூடாது. நீ திடமாக இருந்தால் தான் என்கனவு நனவாகும்.''

★

3

அவள் ஒரு ஆணுகப் பிறந்திருக்க வேண்டும். அப்படித்தான் அவளை முதல்தரம் பார்த்ததும் கஜேந்திரன் நினைத்தான். சுறுசுறுப்பாகவும் கடுங்கோபமுள்ளவளுகவும் அவள் காணப்பட்டாள். அவள் தான் ஏறிக்கொண்டு வந்த குதிரையை குதிரையாக பாவிக்கவில்லை. ஏதோ மண்ணுல் செய்த மாதிரி

நினைத்துக் கொண்டு அக்குதிரையை ஆட்டிப் படைத்தாள். அதன் மூர்க்கத்தனம் அவளிடம் பலிக்கவில்லை. அதை தன் இஷ்டப்படி அடக்கியே ஆண்டாள்.

அவள் ராமப்பா கோவிலில் இருக்கும் நந்தியைப் பார்த்துவிட்டும், கோடையின் அமைப்புகளையும் கவனித்துப் போகவும், தன் தந்தையின் உத்தரவின் பேரில் வந்திருந்தாள். அவள் அங்கே இரண்டு நாட்கள் இருப்பதற்குள் அவ்வூர் அவளுக்கு சலிப்பை கொடுத்துவிட்டது. தன் குதிரையைத் தட்டி ஒரு காட்டிற்குள் செலுத்தினாள். அதுவும் சில மைல்கள் வேகமாகச் சென்றது. பிறகு அதற்குத் தாக மெடுக்கவே ஒருகுளக்கரையைக் கண்டதும், அங்கே நாடிற்று. அவளும் கீழே இறங்கி அக்காட்டின் இயற்கை விநோதங்களை அனுபவித்து வரும்பொழுது ஒரு சிறுவன் ஒரு மரத்தின் மீது சாய்ந்து கொண்டு களிமண்ணினால் பல உருவங்களை செய்து வருவதைக் கவனித்தாள். அவள் பார்ப்பது கனவா அல்லதுநினைவா என்றுசந்தேகப்பட்டாள். ஒரு மரத்தின் கிளையை அசைத்து சலசலப்பு உண்டாக்கினாள். அச்சிறுவன் உடனே திரும்பிப்பார்த்தான். அவனை அறியாமல் ஒரு சிரிப்புச் சிரித்தான். அவனது குழியிட்ட கண்களைப் பார்த்து அவளுக்குச் சிறிது பயம் உண்டாயிற்று. தன் தைரியத்தை யெல்லாம் வரவழைத்துக் கொண்டு அவனைப் பார்த்து "நீ யார்" என்று கேட்டாள்.

அவன் அவளை மறுபடியும் நோக்கினான். "நான் தான் கஜேந்திரன்" என்றான்.

"சிற்பி கஜேந்திரனா! நீ இவ்வளவு சிறியவனாக இருக்கிறாயே! நீதான் நந்தியை சிற்பித்தாய் என்று என்னால் நம்ப முடியவில்லையே?"

"நீகூடத்தான் அந்த பெரிய குதிரை மீது வரத்தக்க பெரிய ஆளாக இல்லையே! சிறியவள் தானே நீயும்."

"எனக்கு குதிரைச் சவாரி தெரியும்."

"எனக்குச் சிற்பக்கலை தெரியும்."

கஜேந்திரன் அவளைப் பார்த்து பேசிக்கொண்டே களிமண்ணால் அவளது உருவத்தை செய்துவிட்டான். அவள் அதைப் பார்த்துக்கொண்டே "உன் கையில் மிகவும் பாராட்டத்தக்க வேலைத் திறமை இருக்கிறது" என்றாள்.

அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

"நீ யார்?" என்று கேட்டான் கஜேந்திரன்.

"இவ்வூர் பெரிய மனிதரின் புதல்வி."

"யார் அவர்?"

"அவர் தான் ஒரு பெரிய மனிதர் என்று கூறிவிட்டேனே!"

"உன் பெயர்?"

"ருத்ராம்பா"

"உட்கார் கீழே"

"முடியாது. நான் இப்பொழுதே பயணமாக வேண்டும்."

"உன்னை மறுபடியும் பார்க்க முடியுமா?"

"முடியாது."

தன் குதிரை மீது ஏறி ருத்ராம்பா மறைந்தாள். அவன் ஒரு பெருமூச்சு விட்டான். தான் செய்த ருத்ராம்பாவின் உருவத்தை கையினால் உருக்கலைத்துவிட்டான் ஆனால் அவன் உள்ளத்தில் பதிந்திருக்கும் அவள் உருவத்தைக் கலைக்க அவனால் இயலாத காரியமாகி விட்டது!

★

4

கணபதி தேவன் பூவுலகை நீத்தான். நாடு அவன் பிரிவுக்காக துக்கத்திலாழ்ந்தது. சில நாட்களுக்குப் பிறகு அவனது ஒரே வாரிசாகிய ருத்திராம்பா ராணியானாள்.

ராணி ருத்ராம்பா பிடிவாதக் குணமுடையவள். தான் நினைக்கும் காரியத்தை சாதிக்கும் குணமுடையவள். கடமை தவறியவர்களுக்கும், அயோக்கியர்களுக்கும் அவள் என்றால் சிம்மசொப்பனந்தான். தன்னுடைய வெற்றி பெரும் வீரர்களைக்கொண்டு கலிங்க தேசம், சோழ தேசம், கர்நாடக தேசம் முதலியவற்றை பிடித்தாள். தன்னுடைய ஆதிக்கத்தில் பல ராஜ்யங்களை வைத்துக்கொண்டு அரசாண்டாள். அவளுக்குப் "புஜசக்தி ருத்ராம்பா" என்ற வீரப்பெயர் வைத்திருந்தார்களாம்.

கலையின் அபிவிருத்திக்காக ராணி ருத்ராம்பா பாடுபடமால் இல்லை. ஏராளமான சத்திரங்களும் ஆலயங்களும் கட்டினாள். பள்ளிகளையும் முதல்தரமான கலைக்கூடங்களையும் கல்வியும் கானமும் வாரங்கலில் நிர்மாணித்தாள். கலையும் அவள் காலத்தில் ஓங்கி வளர்ந்தன.

ஞானமித்திரா என்ற மந்திரியைத்தான் அவள் அதிகமாக கலந்து ஆலோசிப்பது வழக்கம்.

"உன் தந்தை ராமப்பா கோவிலை புனருத்தாரணம்" செய்ய ஒரு சிற்பியை நியமித்தார். அவனும் இன்னும் ஒருவனாகவே வேலை செய்துகொண்டிருக்கிறான். நீ அக்கோயிலை ஒரு நாள் பார்த்துவிட்டு வர வேண்டும்" என்றார் ஞானமித்ரா.

"நாளையதினமே ராமப்பாவுக்கு போகிறேன்" என்றாள்.

மறுநாள் ராணி ருத்திராம்பா ராமப்பாவுக்கு வந்து சேர்ந்தாள். அங்கு வந்ததும் எப்பொழுதோ ஒரு சிறிய இளைத்த சிறுவனைக்கண்ட ஞாபகம் வந்

தது. அப்பொழுது அவள் பார்த்தது ஒரு 'நந்தி' ஆனல் இப்பொழுதோ? கோவிலில் ஒரு ஜீவகளை ஏற்பட்டு இருந்தது. துவாரபாலகர்களும், தேவ மாதர்களும், கோவிலின் கற்சுவர்களை அலங்கரித்தன. தூண்கள் முழுவதும் சிற்ப ஜாலமாக விளங்கின.

அவள் அக் கோயிலைச் சுற்றி வரும் பொழுது ஒரு மூலையில் கரும்பைத் தின்றுகொண்டிருந்த ஒரு இளைத்த யுவனைக் கண்டாள். அவளது ஹிருதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது.

அவன் அருகில் ருத்திராம்பா சென்றாள். உடனே அவனும் எழுந்து மரியாதை செய்தான்.

''ருத்திராம்பா'' என்று மெதுவாகக் கூறினன்.

"இன்னும் என் பெயரை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இருக்கிருயே!''

"உன்னை மறுபடியும் காண்பதற்குத்தான், நான் இவ்வளவு நாட்கள் உயிர் வாழ்ந்தேன்.''

''உன் பெயரை நான் மறந்து விட்டேனே.''

அவன் தன் கண்களை மூடிக் கொண்டான்.

''அதனல் பரவாயில்லை'' என்ருன்.

''அதற்குத்தான் நீ வருத்தப்படுகிருயா?''

அவன் கரும்புத்துண்டை எறிந்துவிட்டு, அவ்விடத்தை விட்டகன்ருன்.

ராணி ருத்திராம்பாவும் வருத்தமடைந்தாள். தன்னைத் தானே கடிந்துகொண்டு தன் குதிரை மீதேறி அவன் சென்ற வழியைப்பின்பற்றினள். அவன் ராமப்பா ஏறிக்கரைமீது உட்கார்ந்துகொண்டு மண்ணை உருண்டைகளாக உருட்டி நீரில் வீசி எறிந்துகொண்டிருந்தான். அவனது கண்களிலிருந்து நீர் ஆருகப் பெருகியது ருத்ராம்பாவின் காலடிச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பினன்.

ருத்ராம்பா அவனை அடைந்ததும் கம்மிய குரலுடன் ''நீ துக்கப்படாதே. நான் உன்னை மறந்து விட்டது என் தப்புதான். நான் ஏன் அம்மாதிரி மறந்துவிட்டேன் என்ற காரணம் உனக்குத் தெரிந்தால் நீ உண்மையில் வருத்தப்படமாட்டாய்'' என்று கூறி அவனைச் சமாதானம் செய்ய முயன்ருள்.

அவன் பதில் எதுவும் கூறவில்லை.

''நான் யாரென்று உனக்குத் தெரியாது. தெரிந்தால் நீ இப்படிக் கடிந்துகொள்ளமாட்டாய்.''

''நீ யாரென்று நான் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை.''

ருத்திராம்பா அவனை நெருங்கினள்.

''நான் உன்னை மறந்துவிட்டதற்கு வருத்தப்படாதே. என்னை மன்னித்துவிடு.''

"இன்னும் இக்கோவிலில் நான் செய்யவேண்டிய சில வேலைப்பாடுகள் உள்ளன. அவைகள் முடிவடைந்ததும் நான் வேறு தேசத்திற்குப் போகிறேன்."

"ஏன் போகவேண்டும்."

"மனம் உடைந்துவிட்டது.

"நீ ஒரு புத்தியில்லாதவன்."

"ஆமாம். ஆமாம். புத்தியில் லாதவன் தான்,"

ருத்திராம்பா குதிரை மீதேறி தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தாள்.

★

5

சிற்பி கஜேந்திரன் தன் வாழ்க்கையில் ஒரு பெண்ணைக் கண்டான். அவளிடம் காதல் கொண்டான், பிரமை கொண்டான். தன்னுடைய கனவில் அவளை அடிக்கடி கண்டு பேசி காதலித்தான். ஆனால் அவள் அவனை மறந்துவிட்டாள். அதுவேதான் அவன் மன வியாகூலத்திற்குக் காரணம்.

ஒரு குதிரை வீரன் ஒரு நாள் காலை கஜேந்திரனைப் பார்க்க வந்தான்.

"என்ன சேதி?"

"ராணி ருத்ராம்பாவுக்கு உடம்பு சரியில்லை."

"ராணியா?"

"ஆம் ருத்திராம்பா. கணபதி தேவனின் ஒரே மகள்."

"கணபதி தேவன் என்ன வானார்?"

குதிரை வீரனுக்கு இக்கேள்வி ஆச்சர்யத்தைத் தந்தது.

"ஏன் அவர் இறந்துவிட்ட விஷயம் உனக்குத் தெரியாதா?"

"எனக்குத் தெரியாதே. என்னல் என்ன ஆகவேண்டும்?"

"ராணி உங்களைப் பார்க்க விரும்புகிருள்."

ராணி ருத்திராம்பா ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். ஞானமித்திரர் அவள் பக்கத்தில்சோக முகத்துடன் அமர்ந்திருந்தார். ஞானமித்திரர் ராணியின் வியாதியின் வேகத்தினல் ஏற்படும் பிதற்றலிலிருந்து, அவள் சிற்பியிடம் கொண்டிருந்த பிரேமையை அறிந்துகொண்டார். அவரேதான் கஜேந்திரனை வரவழைத்திருந்தார்.

ராணி ருத்திராம்பா தன் வாழ்க்கையை விரும்பவில்லை. அவளை ஜனங்கள் புஜபல ருத்திராம்பா என்று அழைத்தாலும், கலையின் அவதாரம் என்று நினைத்தாலும், அவளுக்கு மனத்தில் சாந்தி ஏற்படவில்லை. அவள் ஒரு மனிதனது ஹிருதயத்தை உடைத்துவிட்டாள். அவன் வாழ்க்கையை கெடுத்துவிட்டாள். அவன் உணர்ச்சி பெற்று மேலும் மேலும் செய்ய வேண்டிய சிற்ப வேலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள்.

கஜேந்திரன் ருத்திராம்பாவைப் பார்த்ததும் சிறு குழந்தை போல் அழ ஆரம்பித்து விட்டான். "ருத்திராம்பா" என்று கூறி அவளது கைகளைப் பற்றினான். அக்கைகளை அவன் கண்களிலிருந்து வடிந்த நீர் நனைத்துவிட்டது

"கஜேந்திரா. இப்பொழுதுதான் எனக்கு உடம்பு சுகம் ஏற்பட்டதுபோலிருக்கிறது"

"அவர்கள் உன்னை ராணி யென்று கூறினார்கள். நீங்கள் ராணியா?"

"இல்லை. நான் ஒரு பெண் மணிதான்."

"கணபதி தேவர் இறந்துவிட்டதாகவும், நீங்கள் தான் பட்டத்துக்கு வந்ததாகவும் நேற்று தான் கேள்விப்பட்டேன். நீங்கள்தானா அவருடைய பெண், நீங்கள்தானே இவ்வூர் ராணி?"

கஜேந்திரனது தலைமயிரைக் கோதிக்கொண்டே "கஜேந்திரா! சிற்ப வேலையை விடாதே. நன்ருக உழை" என்ருள்.

"உழைப்புதான் என் ஜீவன்."

"நீ உன் சிற்பங்களை முடித்து விட்டாய் அல்லவா?"

"இன்னும் சில முக்கிய அம்சங்கள் முடிவுபெறவில்லை."

"நீ இத்தேசத்தை விட்டுப் போகிறேனென்று அன்றைய தினம் கூறினையே? நீ இப்பொழுது அப்படிச் செய்வாயா?"

கஜேந்திரன் சிரித்தான்.

"நீ மிகவும் அழகாய் இருக்கிருய்" என்ருன் சிற்பி.

"கஜேந்திரா! நீ என்னை வர்ணிக்காதே."

அவனது முகத்தை ராணி தடவினாள் தன் கையில் அவனது வலது கையை வைத்துக் கொண்டு தூங்கினாள்.

"வாஸ்தவம். அவளே ஒரு ராணி. நான் சாதாரண ஒரு கற்தச்சன். அவள் என்னை மறந்துவிட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை" என்ருன் கஜேந்திரன்.

கஜேந்திரன் ராமப்பாவுக்கு வந்ததும் உளியும் கையுமாய் வேலையில் அமர்ந்தான். சிற்பங்களில் நுட்பமான அம்சங்களை முடிக்கத் தொடங்கினான் அன்ன ஆகாரம் அவனுக்குத் தேவையில்லை. இரவு தூக்கம் அவனுக்குத் வேண்டியதில்லை. முக்கிய அம்சங்களை முடித்தான், ருத்திராம்பாவின் உடம்பு தேறி மீண்டும் ராஜ்ய காரியங்களைப் பார்க்குமுன் சிற்பி கஜேந்திரன் ஒரு நாள் மார்வலிகண்டு திடீரென்று இறந்துவிட்டான். ஆனல் அவனது வேலைகள் பூர்த்தியாகிவிட்டன.

★

6

ராணி ருத்ராம்பாவின் அரசாட்சியின் முடிவு நாட்களில் ஒரு உயரமும் ஒல்லியுமான மனிதன் வெனிஸ் தேசத்தி

விருந்து வாரங்கலுக்கு வந்திருந்தான். அவன் மிகவும் நூதனமான உடை உடுத்தியிருந்தான்.

"நான் மார்க்க போலோ! வெனிஸ் தேசத்திலிருந்து உமது விருந்தாளியாக வந்திருக்கின்றேன் என்றான்."

"நானும் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். உன் வரவு நல் வரவாகுக" என்றாள் ராணீ ருத்திராம்பா.

கண்ணால் பார்த்தும் நம்பக் கூடாததும், சிந்திக்க முடியாததுமான விஷயங்கள் கலைகள், சாத்திரங்கள் நிரம்பியுள்ள உன்னதமான உன் நாட்டைக் காண வந்தேன்?

மார்க்க போலோ வாரங்கலில் சில தினங்கள் தங்கியிருந்தான். அந்நாட்டின் சிறப்பைப் பற்றி விரிவாக எழுதி வைத்தான். மார்க்க போலோ ராமப்பா கோவிலைக் கண்டதும் "உங்கள் கலையின் சிகரம் இக் கோயிலிலுள்ள சிற்பத்தில் காணலாம். மகா அற்புத சிற்பங்கள். இன்றைக்கெல்லாம் அந்த பெரிய பாறையிலிருந்து செதுக்கப்பட்ட நந்தியைக்கண்டு கவனித்துக்கொண்டே யிருக்கலாம். ஆச்சர்யமான இன்னுமொரு விஷயம். இக்கோயிலில் வடபுறத்தில் இருக்கும் பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் உருவம் ராணீ ருத்திராம்பாவே தான். மதியின் அழகும், ஒரு சிறிய அளவுக்கு முகத்தில் சோகமும் ராணீயின் சிற்பத்தில் பிரதிபலிக்கிறது" என்று எழுதினான்.

அவன் எழுதி வைத்திருந்ததை ருத்திராம்பா படித்திருந்தால் "ஐயோ கஜேந்திரா" என்று வாய்விட்டு கதறியிருப்பாள்.

★ என்ன ஆச்சரியம்! ★

மனிதனை மூப்பு, பெண்புலி போல் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. பிணிகள் சத்துருக்களைப் போல் உடலைத் துன்புறுத்துகின்றன. வாழ்நாளோ ஓட்டைக் குடத்திலிருந்து வெளிவரும் தண்ணீர்போல் போய்க் கொண்டிருக்கிறது. அப்படியிருப்பினும் மக்கள் தீய செயல்களையே புரிந்து கொண்டிருக்கிறார்களென்பது எவ்வளவு அதிசயம்?

—பர்த்ருஹரி

தேவாரத்தால் ஆகாதது ஒ ன் று ண் ட ா ?

"விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள் கொடிகள் மாடமலி நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்
[சடையினன்
செங்கண்விடை அண்ணலடி சேர்பவர்கள் தீவினைக தீருமுடனே."

தேவாரத்தால் ஆகாதது ஒன்றுண்டா? மேற்கண்ட கேள்வியை அடியேன் ஒரு நாள் ஒரு அன்பரைக் கேட்டேன். என்ன ஆயிற்று என்று கேட்டார் என்னையே? தேவாரப் பதிகங்களை உள்ளன்புடனும் தன்னம்பிக்கையுடனும், பக்தி சிரத்தையுடனும், படனம் செய்யும் அன்பர்களுக்குத் தேவாரம் எல்லாம் செய்யும் என்றேன். சொல்லுங்கள் என்றார்.

தேவாரத்தால் பொன் பெறலாம், பொருள் பெறலாம், போகமும் பெறலாம், சுந்தரர் அருளிய "பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை" என்ற தேவாரப்பதிகத்தைச் சொன்னேன். பிள்ளை கிடைக்கும் என்று திருவெண்காட்டுத் தேவாரத்தைச் சொன்னேன். "பேயடையா பிரிவெய்தும், பிள்ளையினோடுள்ள நினைவு ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா" என்றது. ஜுரம் நீங்கும் "மந்திர மாவது நீறு" எனும் பதிகத்தை ஓதுவதால் என்றும் சொன்னேன். பின்னர் நவக்ரகங்களால் ஏற்படும் சகல துன்பங்களும் நீங்கும் "வேயுறு தோளிபங்கன்" என்ற கோளாறு திருப்பதிக படனத்தால் என்றேன். பேய், பிசாசு பூதம், விடஜந்துக்கள், மிருகங்கள் முதலியவற்றால் வரும் கேடுகள் "அவ்வினைக் கிவ்வினை" என்ற திருநீலகண்டத் திருப்பதிகத்தை ஓதினால் நீங்கும் என்றும் சொன்னேன். "ஒன்று கொலாம்" எனும் பதிகம் ஓதினால் விஷம் நீங்கும் என்றேன். இன்னும் பல சொன்னேன். "இவை எல்லாம் முற்காலத்தில் நடந்தன. இப்போது நம் காலத்தில் நம் கண்முன் நடந்த அற்புதம் ஏதேனுமுண்டாயின் அதனைச் சொன்னால் நான் நாளும் திருமுறைகளை ஓதுவேன்" என்றார் அவ்வன்பர்.

உடனே பின்வரும் விஷயத்தைச் சொன்னேன். அவரும் அதிசயித்துச் சென்ற இரண்டுமாத காலமாகத் திருமுறைப் பாரா யணத்தை மேற்கொண்டார். எனவே, அன்பர்கள் யாவரும் திருமுறைகளையே நாளும் ஓதி நலம் பெறும் பொருட்டு, இவ்வற் புதத்தை யெழுதி வெளியிட்டேன். ஞாலம் முழுவதும் ஹரன் நாமம் சூழவும், சைவம் தழைக்கவும் இது பயன்படுவதாகுக.

என் ஆப்த நண்பர் ஸ்ரீ சேலம் சுப்பராயப் பிள்ளை என்பவர். இவர் தினமும் பன்னிரு திருமுறைகளையே ஓதி வருபவர். இவர் நம் பரதக் கண்டத்தில் உள்ள பாடல்பெற்ற திருத்தலங்கள் 274-ல் 260 தலங்களை முறையாகத் தரிசித்தவர். சிதம்பரம், உலகமூர்த்தி தேசிகர் மடம் சிவஸ்ரீ முத்துக்கற்பகக் குருக்கள் ஐயா அவர் களிடம் சமய, விசேஷ நிர்வாண தீக்ஷைகளைப் பெற்றுச் சிவபூஜை தவறாது செய்துவரும் சீலர். இவர் ஒரு சமயம் கால் இடறிக் கீழே விழுந்து காலெலும்பு முறிந்து இராயப்பேட்டை ஆஸ்பத்திரி யில் சிகிச்சைபெற்றுக் குணமடைந்தார். இப்போது இவருக்கு வயது 84. அப்பர்ஸ்வாமிகளுடைய வயதையும் தாண்டியவர். தோற்றம் சேக்கிழார் பெருமான் அப்பரைப் பற்றிக் கூறியபடி யுள்ள வடிவினையுடையவர். இவருக்குச் சென்ற இரண்டாண்டு களுக்குமுன் சைதாப்பேட்டையில் இருந்தபோது தற்செயலாக நிலத்தில் வழுக்கி வீழ்ந்து கால் எலும்பு முறிவுண்டது. சைதாப் பேட்டையிலுள்ள "மார்வாரி ஆஸ்பத்திரியில்" சிகிச்சை பெற் றுக் குணம் அடையாததால் மறுபடியும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார்.

இவருக்கு முன் முறிந்த எலும்பைக் குணப்படுத்திய டாக்டர் அவர்களை படமெடுத்துப் பார்த்து வயதானதால் குணமடையாது என்று சொல்லிவிட்டார். பின்னே என் செய்வது? 'கடைசியாக ஆண்டவன் விட்டவழி' என்ற பழமொழி நினைவிற்கு வந்தது. தான் தினம் படனம் செய்யும் திருமுறைச் சுவடியில் கயிறு சாற் றிப் பார்த்தார். திருமாகறல் ஸ்தலத்தில் திருஞானசம்பந்தர் அருளிய சாதாரிப்பண் கிடைத்தது. அதிலும் முதற்பாட்டே கிடைத் தது. அப்பாட்டினிறுதியில் "செங்கண்விடை யண்ணலடி சேர் பவர்கள் தீவினைகள் தீருமுடனே" என்றுள்ளது. பிறகு உற வினர் துணையுடன் அந்த ஸ்தலத்திற்குச் சென்றார். நாளும் நகர்ந்து

நகர்ந்தே ஆலயத்தை வலம் வந்தார். பதிகத்தையும் படனஞ் செய்து வந்தார். ஆலயத்திற்கு நகர்ந்தும் செல்லமுடியாத நேரத்தில் இவர்களை வண்டியில் வைத்து இழுத்துச்சென்றும், வண்டி நேராத காலத்து இவர்களைத் தம் முதுகில் சுமந்துகோண்டு வந்தும் சேர்த்துபகரித்த *திருமாகறல் சிவநேசச் செல்வர்களுக்கு யாம் என்ன கைம்மாறு செய்வது? அன்னார் இறைவன் திருவருளைப் பெற்றுச் சகல ஐஸ்வர்யங்களுடனும் வாழ்வார்களாக. பின்னர் படிப்படியாகக் குணமாகித் தற்போது எழுந்து சாதாரணமாக நடக்கும் சக்தியைப் பெற்றார் என்றால் "தேவாரத்தால் ஆகாதது ஒன்றுண்டா?" என்ற கேள்விக்குப் பதில் இவ்வற்புதம் ஒன்று போதாது? அவர்களை அடியேன் சிவராத்திரி புண்ய நாளன்று திருமயிலையில் கண்டு தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

—கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார்

---

* திருமாகறல்: இத்தலம் காஞ்சீபுரத்திலிருந்து தென்கிழக்கில் 9 மைல் தொலைவில் சேயாற்றில் வடகரையிலுள்ளது. உத்தரமேரூர் போகும் பஸ் வசதியுமுண்டு. சுவாமி திருநாமங்கள்: அடைக்கலம்காத்த நாதர், நிலையிட்ட நாதர். ஆபத்திற்காத்தவர். மங்கலங்காத்தவர், திருமாகறல் ஈசன். மகம்வாழ்வித்த நாதர், அகத்தீசர், பரிந்து காத்த நாதர், ஆபத்சகாயர், தடுத்தாட்கொண்டவர், புற்றிடங்கொண்டார், பாரத்தழும்பர். அம்பிகையின் பெயர்: புவனநாயகி.

FASHION HOME

Pro: M. U. VARGHESE & BROS

Govt. Diplomaed Dress Makers

4-A Whannels Road, Egmore, Madras.

MAKE

Smash-hit Personal Appearances!
Never before such enduring beauty!
Never before such princely comfort!
At a charge so unbelievably low!

Dealers in:

B & C Mills Products & artists in making dresses to measurement & taste

பதினெட்டாம் நாள் யுத்தம்

தமிழாக்கம்: "பைங்காநாடு"

பாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. அந்தப் போரின் கடைசி நாள் நடந்த நிகழ்ச்சி பாரதத்திலுள்ள சல்ய பர்வத்தில் உள்ளபடி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போரின் பதினெட்டாவது நாளாகிய இன்று நாம் எல்லோரும் சேர்ந்து போர் புரியவேண்டும் என்ற பரஸ்பர ஏற்பாட்டுடன் சல்யனால் நடத்தப்படுவதும் கொல்லப்பட்டு எஞ்சியதுமான சேனை கிளம்பியது.

இன்றோடு போர்க்கதை முடிவடையவேண்டும் என்ற ஒரே தீர்மானத்துடன் பாண்டவ சேனை உற்சாகத்துடன் முயற்சி செய்தது. முறைப்படி போர் துவங்கியது. கர்ணபுத்ரன் சித்ர ஸேனன் நகுலனால் கொல்லப்பட்டான். ஸகதேவன் சகுனியைக் கொன்றான். துர்யோதனன் சேகிதானனைக் கொன்று வீழ்த்தினான். அச்வத்தாமனால் பாஞ்சால ராஜன் ஸுரதன் கொல்லப்பட்டான். ஸாத்யகி, திருஷ்டத்யும்னன் இருவர்களால் ஸாலுவனும், அர்ஜுனனால் புத்திரர்களுடனும் சுற்றத்தாருடனும் ஸுசர்மாவும் பீமனால் துரியோதனனைத் தவிர திருதராஷ்டிரனுடைய பிள்ளைகளும் யமனுலகிற்கு விருந்தாளியாக அனுப்பப்பட்டார்கள். அரசனான யுதிஷ்டிரர் மத்திர ராஜனும் மாமனுமுள்ள சல்யனை யுத்தத்தில் பரலோகத்திலும் கர்ணனுக்கு தேஜோவதம் செய்விக்க வேண்டியவன் போல் அவனுடன் உடனிருப்பதைச் செய்தார்.

கர்ணனுக்கு துரதிருஷ்டவசமாக சல்யன் ஸாரதியாக வந்து சேர்ந்தான். ஒருவன் மேன்மை அடையவேண்டுமானால் அவனுக்கு வேண்டியவர்கள் அவனுடைய குறைகளைக் காட்டாமல் உற்சாகப் படுத்தவேண்டும். சல்யனோ எப்பொழுதும் கர்ணனைப் புரளி செய்து "நீ இவ்விதம் யுத்தம் செய்தால் உருப்படப் போவதில்லை" என்றெல்லாம் பலவிதமாய்ப் பேசி அவனை மனமுடைந்துபோகச் செய்தான். எனவே தேஜோவதத்திற்கு சல்ய ஸாரத்யம் என்று பெயர்வழங்கி வருகிறது.

அந்த ஸமயத்தில் ஆங்காங்கு வீரர்களிழந்த எதிரியின் படை சிதறியோட ஆரம்பித்தது. திருதராஷ்டிரனைச் சேர்ந்த யயுத்ஸு

என்பவன் கவுரவர்களின் ஸ்திரீ வர்க்கத்தை ஹஸ்தினபுரம்சேர்த்து எல்லாச் செய்தியையும் விதுரரிடம் தெரிவித்தான். ஸாத்யகியினல் பிடிக்கப்பட்ட ஸஞ்சயன் வியாஸரால் விடுவிக்கப்பட்டான். அவன் சென்றுகொண்டிருக்கும் பொழுது மாயையினுல் த்வைபாயன மடுவில் பிரவேசித்த துரியோதனனைப் பார்த்து அழுதுகொண்டு அவனது உத்தரவின் பேரில் கிருபர் முதலியவர்களுக்கு அவனது நிலையைக் கூறிவிட்டு நகரத்தை யடைந்தான். பிறகு எஞ்சிய துரியோதனனுடைய வீரப்படையினரான கிருபர், கிருதவர்மர், அசுவத்தாமன் இவர்கள் அந்த மடுவில் குருராஜனை அந்த இழிவான நிலையில் பார்த்து மிகவும் வருத்தமடைந்து பிரலாபித்தனர். இதற்கிடையில் போர்க்களத்தில் துரியோதனனைக் காணுத தால் பரபரப்படைந்தார் யுதிஷ்டிரர். மாம்ஸத்திற்கு அலைந்து கொண்டிருக்கும் வேடர்களிடமிருந்து துரியோதனின் மறைந்திருக்கும் செய்தியை பீமன் யுதிஷ்டிரரிடம் தெரிவித்தான். உடனே தன் பரிவாரங்களுடன் அந்த இடத்திற்கு ஓடினுர் யுதிஷ்டிரர். அங்கு ஒருவரையும் காணுமல் வியப்புற்று, ஜலஸ்தம்பன வித்தையினுல் துரியோதனன் மடுவினுள்ளிருப்பதை கிருஷ்ணபகவானிடமிருந்து அறிந்துகொண்டு யுதிஷ்டிரர் "அடே பேடி! திருராஷ்டிரன் மகனே! ஏண்டா இவ்விதம் எடுத்த காரியத்தை முடிக்காமல் நடுவில் ஓடி ஒளிந்திருக்கிருய்? ஊசி குத்துமிடத்திற்காகக்கூட பேராசைப்படும் நீ பூமி முழுவதையும் பற்றற்று இவ்விதம் விடுவது தகுதியல்ல. அட குழந்தாய்! நீ நற்குலத்தில் பிறந்தவன் பயப்படாதே. உனது இஷ்டமோ அல்லது சுவர்க்கமோ கிட்டட்டும். நன்கு மேல் கிளம்புவாயாக" என்றுர்.

துரியோதனன் மடுவின் உள்ளிருந்து கொண்டே கூறினுன். "அடே பாண்டவா! களைப்பினுலல்லவா நான் இந்த மடுவில் படுத்திருக்கிறேன். பயத்தினுலன்று. உங்களுடைய மனக்கஷ்டத்துடன் இந்த பூமி என்னுல் அனுபவிக்கப்பட்டதே. இது எனக்குப் புதிதன்று. இப்பொழுதோ வீரர்கள் கொல்லப்பட்டதால் கைம்பெண் போலவும் அணிந்த பிறகு எறிந்த மாலைபோலவும் கிழிந்த உடை போலவும் திருவற்றதும், மகிழ்ச்சியற்றதும் ஸாரமற்றதுமான இந்த பூமி உனக்கே இருக்கட்டும். மேலும் உன்னேடு நான் போர் புரிய வேண்டுமென்று விரும்பினுல் உங்களில் ஒருவன் கதா யுத்தத்திற்குத் தயாராக இருக்கட்டும் என்று கூறினுன். யுதிஷ்டிரரும் அப்படியே ஆகட்டும் என்று சொல்ல கையில் கதையுடன் மேலே எழுந்தான் துரியோதனன்.

அவன் எழுந்தவுடன் உங்களுள் யார் என்னுடன் த்வந்தவ யுத்தத்திற்குத் தயாராயிருக்கிருன் என்று கேட்டான். அதற்கு

யுதிஷ்டிரர் "எங்களுள் யாரை நீ விரும்புகிறாயோ அவன் உன்னை எதிர்த்துப் போர் புரிவான்" என்றார்.

அவர்களுள் ஒருவரேனும் ஜயிக்கப்பட்டால் நாங்கள் எல்லோரும் காட்டிற்குப் போவோம்" என்று பதில் சொல்ல கிருஷ்ணபகவான் அவனைத் தடுத்து பரபரப்புடன் சொன்னார்,

"ஏன் ஐயா மறுபடியும் சூதாட்டத்தை ஆரம்பிக்கின்றீர்? பீமனைத் தவிர உங்கள் நால்வரில் யார் இவனுடன் கதா யுத்தத்தில் போட்டியிடமுடியும்? துரியோதனன் உங்கள் வனவாஸ காலம் முழுவதும் பீமனை வெல்ல வேண்டுமென்ற விருப்பத்தால் இரும்பு மயமான அவனுடைய பிரதிமையைச் செய்து நன்கு பயின்றிருக்கிறான் ஆதலால் இந்த பிரதிக்ஞை செய்தது போதும். குழந்தாய் பீமா! உனது பிரதிக்ஞையை நிறைவேற்ற இதுவே தருணம்" என்றார்.

பிறகு பீம துரியோதனர்களுக்குள் கதா யுத்தம் ஆரம்பித்தது. அந்த சமயத்தில் தீர்த்த யாத்திரை சென்றிருந்த பலராமர் தனது இரு சிஷ்யர்களுக்குள் கதாயுத்தத்தைக் கேள்வியுற்று குதூகலத்துடன் அங்குவிரைந்து வந்து அவர்களால் பூஜிக்கப்பட்டு மத்தியஸ்தராக இருந்தார். இவ்விதம் ஆரம்பிக்கப்பட்ட த்வந்தவ யுத்தம் பீமனுக்கு அதிக வலிமையிருந்ததாலும் துரியோதனனுக்கு பயிற்சி மிகுதியாலும் ஏற்றத்தாழ்வின்றி ஜயாபஜய நிலைபுரியாமல் வெகு நேரம் நடந்தது. பிறகு உபாயமறிந்த கிருஷ்ணனால் ஏவப்பட்ட அர்ஜுனன் பீமனுக்கருகில் சென்று மகிழ்ச்சிக்குக் காரணமில்லாமலிருக்கும் போதும் நல்லது பீமா நல்லது! என்று சொல்லி தனது துடையை அடிக்கடி தட்டிக்கொண்டிருந்தான். உடனே பீமன் குறிப்பை அறிந்துகொண்டு சபையில் செய்த பிரதிக்ஞையையும் நினைத்து தான் நன்றாக அடிக்கும் ஸ்வபாவம் உள்ளவனாதலால் கதையால் ஒரே அடியால் அவனது துடையை முறித்தான். துடை ஒடிந்து துரியோதனன் வெட்டப்பட்ட வேருடைய மரம்போல் சிதறிய கிரீட ரத்தினங்களாகிய புஷ்பங்களை உடையவனாகவும் சிதைந்த சாகைகளையுடையவனாயும், சிதறுண்ட தலைமயிராகிய சருகுக் கூட்டங்களையுடையவனாயும் புண்ணியம் குறைந்த ஸ்வர்க்கவாஸி போல 'ஹா ஹா' என்ற கூக்குரலிட்டுக்கொண்டு தலைகீழாக பொறி கலங்கி பூமியில் விழுந்தான். அதே சமயத்தில் நாற்புறங்களிலுமிருந்தும் 'அந்தோ அந்தோ' என்ற கூக்குரல் கிளம்பியது. பூமியில் விழுந்த அவனது தலையைக் காலால் மிதித்துக்கொண்டு பசு பசு என்று சொல்லி கூத்தாடினான் பீமன். அஜாத சத்துருவான யுதிஷ்டிரர் குணமுடையவரானபடியாலும் உற்றார் உறவினரிடம் அன்பு கொண்டவராதலாலும் தடைபடாத கண்ணீர் பெருக்கையுடையவராய் புலம்ப ஆரம்பித்தார்.

"கிடைக்காததைப் பற்றி யோசித்தல், கிட்டியதில் உடனே தகுந்த ஏற்பாடு செய்தல், கிடைக்கப்பெருததில் அடைய விருப்பம், கிட்டினுல் அதில் மகிழ்ச்சியின்மை, சேவகர்களைப் போஷித்தல், பிரஜைகளைச் சந்தோஷிக்கச் செய்தல் சத்ருக்களை யடக்குதல் சாரர்களைக் கண்ணுகக் கொண்டிருத்தல் சோம்பேறித்தன்மை யில்லாமல் காரியத்தில் கண்ணுயிருத்தல், முதலிய பல அரச குணங்களினுல் அலங்கரிக்கப்பட்டிருந்தும் உன்னைப் பேராசை என்ற ஒருகுற்றம் கெடுத்தது. இல்லை. இது என்னுடைய துரதிருஷ்டத்தின் கோளாறுதான். ஏனென்ருல் இப்பேர்ப்பட்ட தம்பியான உன்னுடன் ஒரே சிம்மாதனத்தில் வீற்றிருக்கும் சுகத்தை யான் அனுபவிக்கவில்லையே" என்று சொல்லி வாய்விட்டு அலறினர் தருமர்.

துரியோதனன் தனது உத்தரவினுல் துச்சாதனன் திரௌபதியைப் பிடித்து இழுத்து அவமானம் செய்து மானபங்கம் செய்ய விரும்பும் அந்த நாளில் பாஞ்சாலியைப் பார்த்து "மாடே மாடே" என்று கூவி யழைத்தான் அதாவது ஒரு மாடு எவ்விதம் ஒருவனிடம் எப்பொழுதும் தங்காமல் விலைகொடுத்து வாங்குபவர்களிடம் கைமாறுமோ அவ்விதமே திரௌபதி ஒரு கணவனுக்குச் சொந்தமாகாமல் ஐவர்களுக்கும் மாறிமாறி வந்ததைச் சுட்டிக்காட்டினுன் போலும். இப்பொழுது துரியோதனன் தலையை காலால் மிதித்து பீமன் அதையே சொல்லிக் குத்திக்காட்டினுன்.

பலராமனே பீமன் தனது காலினுல் துரியோதனன் தலையை மிதிப்பதைப் பொறுக்கமாட்டாமல் "அடே பாபி, அயோக்கியா! முறையுடன் கதாயுத்தம் செய்கின்ற குரு மகாராஜனை முறைதவறி அடித்து வீழ்த்தி என் முன்னிலையிலே அவரது தலையை காலால் தொடுகின்றனையா? மதவெறி பிடித்த மடையா? எந்த ஆசிரியனிடமிருந்து த்வந்தவ யுத்தத்தில் இடுப்பிற்குக் கீழ் அடிக்கக் கற்றுக் கொண்டாய்? அடே கெட்டபயலே! பட்டாபிஷேகமான மகாராஜனின் தலையைக் காலால் மிதிக்கும் உனக்கு வெட்கமில்லையா? அடா கர்வியே! தனக்கு சமானமான வீரன் இல்லை என்ற எண்ணத்தால் கொழுப்பேறிய உன்னை மதங்கொண்ட யானையைச் சிங்கம் போல நான் உன் மண்டையை இப்பொழுதே சிதறவடித்து துரியோதன மகாராஜனைத் தேற்றுவேன்" என்று சொல்லி வெகுண்டு உடல் துடித்து எழுந்தார். அதற்குள் கிருஷ்ணன் விரைந்து வந்து அவரைத் தழுவிக்கொண்டு வேண்டினுர். அண்ணு! தயவுசெய்து பொறுத்துக்கொள்ளுங்கள் பாவம்! நமது அத்தை குந்தியை நினைக்கவேண்டும். மேலும் நமது மருமகன் அபிமன்யுவைக் கொன்றதில் அவர்களுக்கிருந்த தரும நிலையை நீங்கள்

கேட்டதில்லையா? துடையைத் தட்டியதனல் கோபங்கொண்ட விதுரனல் இந்தப் பாவி சபிக்கப்பட்டிருக்கிருன். மேலும் திரௌபதியை அவமானம் செய்ததால் வெதும்பிய மனமுடைய பீமஸேனனும் இவனது துடை முறித்தல் பிரதிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது. யுதிஷ்டிர ராஜனை எப்பொழுதும் எவ்விதத்திலும் கவனிக்கவேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல. பஞ்சபாண்டவர்களுக்குள் ஒருவன் நசித்தால் எல்லோருக்கும் நாசம் ஏற்படுவது திண்ணம் அதனல் புத்ரசோகத்தினல் வருந்தும் குழந்தை சுபத்ரைக்கு நாமே கேடு செய்தவர்களாக ஆவோம். ஆதலால் பதட்டம் வேண்டாம் என்று சொல்லி கிருஷ்ணன் பலராமனை சமாதானம் செய்தார். அவ்விதமே யுதிஷ்டிரரையும் சமாதானப்படுத்தி துரியோதனனை மிகவும் நிந்திக்கிற தனது படைவீரர்களையும் தடுத்துச் சொன்னர். ஏ வீரர்களே! இந்தப் பாவி எல்லாவற்றையும் பாழாக்கி தானும் தன்னுயிரைக் கொன்று பாழாக்கினன். எனினும் இத்தகைய துக்க காலத்தில் அவனுடைய தோஷத்தைச் சொல்லிக்காட்டுவது புண்ணில் எரித் திராவகத்தை விட்டதுபோல கஷ்டத்தை உண்டுபண்ணும். ஆதலால் இவன் பேச்சைவிட்டு விடுங்கள்'' என்ருர்.

மானியான அந்த துரியோதனன் அதைத் தன்னைப் புரளி செய்வதாக எண்ணிக்கொண்டு உடலின் முற்பகுதியால் எழுந்து பூமியில் இடுப்பினல் இருந்துகொண்டு கிருஷ்ணனைப் பின்வருமாறு இகழ்ந்தான். ''ஏ,கம்ஸனல் சிறை வைக்கப்பட்டவனுடைய மகனே! உனது குடிலத்தனத்தை நான் அறிவேன். பீஷ்மர், துரோணர், கர்ணன் இவர்களை நேர்மையாலா நீ வென்ருய்! இப்பொழுதும் உனது சூழ்ச்சியாலேயே எனக்கு இக்கதி. இவ்விதம் துர்புத்திக் கடலாகிய நீ என்னை இகழ்ந்துகொண்டு ஏன் வெட்கப்படாமலிருக்கின்ருய்? மேலும் கேளடா. பெரிய மந்திரியான நீ பார்த்துக் கொண்டிருக்கையிலேயே உனது யஜமானர்களான பாண்டவர்கள் துக்கித்துக் ஐச்வர்யங்கள் நிறைந்ததும் எல்லா அரசர்களால் அலங்கரித்ததும் நான்கு சமுத்திரங்களால் சூழப்பட்டதுமான இந்த பூமண்டலம் முழுவதும் இஷ்டம்போல் என்னல் அனுபவிக்கப்பட்டு விடப்பட்டது. இப்பொழுதோ வீரர்கள், யானைகள், குதிரைகள், அற்றதும், சவங்கள் நிறைந்ததும் எரிந்துபோன காடு போன்றதும், கிரகணம் பிடித்த சந்திர மண்டலம் போன்றதும் கைம்பெண் போன்று வருத்தப்படத்தக்கதுமான இந்த பூமியை பிரேத கிருத்யம் செய்வதிலேயே ஊக்கங்கொண்டு தினமும் தர்ப்பணம் செய்து சுத்தமான கைகளையுடையவனுய்க் கொண்டு இந்த பாண்டவன் நன்கு அனுபவிக்கட்டும். எதற்காக சோகப்பிணி வடிவமான இந்த ஜயத்தினல் கர்வங்கொண்டிருக்கிருய்?'' என்ருன்.

கிருஷ்ணனோ, "அடே கெட்ட பயலே! ஏனடா இப்பொழுதும் உனது கெட்ட தன்மையை விடவில்லே. இயற்கைக்குணம் மாருது. உன் வார்த்தை உனக்கு ஏற்றது தான் .சீ! போ" என்று அவனைக் கூறிவிட்டு எல்லோருடனும் கூடாரத்தை அடைந்தார். அங்கு சென்ற பிறகு கிருஷ்ணன் ரதத்திலிருந்து அர்ஜுனனைத் தன் உபகரணங்களுடன் இறங்கச் சொன்னார். உடனே குரங்குக் கொடிமேலே செல்ல அந்த ரதம் திடீரென்று உண்டான நெருப்பினால் சாம்பலாகிவிட்டது.

"துரோணர், கர்ணன் இவர்களால் விடப்பட்ட ஆக்னேயாஸ்திரம் நான் இருந்ததினால் சக்தியடங்கி இருந்து வந்தது. இப்பொழுது தடையின்றி பரவிவிட்டது" என்று கிருஷ்ணன் அதன் காரணத்தை அறிய விரும்பிய யுதிஷ்டிரருக்குச் சொன்னார்.

பிறகு பாண்டவர்களுடைய பிரதான மனிதர்கள் துரியோதனனுடைய ஆடை ஆபரணங்களை இஷ்டப்படி உடுத்திக்கொண்டிருக்கையில் பரிதபிக்கத்தகுந்த காந்தாரியிடமிருந்து சாபம் வருமோ என்று சந்தேகப்பட்ட யுதிஷ்டிரன் அவளைச் சமாதானம் செய்ய கிருஷ்ணனை அனுப்பினார். அங்கு வியாஸரால் சமாதானப் படுத்தப்படும் அக்கண்ணிழந்த தம்பதிகளை நமஸ்கரித்து திருதராஷ்டிரனுடைய கையைத் தனது கையால் பிடித்துக்கொண்டு அழுதார். பிறகு தானே ஒரு க்ஷணம் ஆச்வாஸப்படுத்திச் சொன்னார். தீப்பொறியால் தொடப்பட்டவனுக்கல்லவா சூட்டினால் உண்டாகும் தொந்திரவு. நன்கு எரியும் காட்டுத்தீயினுள் நுழைந்தவனுக்கு அது ஏது? இத்தகைய குலநாசத்தில் ஏனோ துக்கம் என்னும் பேச்சு? மிகக்கொடிய துக்கமேற்பட்டால் அது துக்கமின்மை என்று தான் சொல்லவேண்டும். மேலும் நீர்க்குமிழிபோல் ஒரு கணத்தில் நசிப்பது சரீரம்; மனைவி மக்களின் சேர்க்கை வழிப்போக்கர்களின் சந்திப்பதற்கு சமமானது. எல்லா அனுபவங்களும் கனவில்காணும் அனுபவங்களுக்குச் சமமானவை. இவ்விதம் ஸாரமற்றஸம்ஸாரத்தில் இருந்தபோதிலும் விவேகி சுகதுக்கங்கள், லாப நஷ்டங்கள், ஜயாபஜயங்கள், மானவமானங்கள் முதலிய துவந்துவ தர்மங்களால் ஆக்ரமிக்கப்படாதவனாய் எங்கும் சுகதுக்கமற்றவனாய் தாமரை நீர்போல் பற்றற்றவனாய் உலக வாழ்க்கையை நடத்தவேண்டும்.

இது எல்லா சாஸ்திரங்களின் ஸாரம். ஏன்? வியாஸ பகவானால் தினம் உபதேசிக்கப்பட்ட இதுஉங்களுக்கு இப்பொழுது புதிதாக ஒன்றும் உபதேசம் செய்யவேண்டியதில்லை. மேலும் ஊழ்வினைக்குட்பட்ட இந்த நிகழ்ச்சியால் துரியோதனனோ சகுனியோ

அல்லது மற்றவனே ஒருவனும் வெறுக்கத் தகுந்தவனல்லன். பாண்டவர்களையும் சோபதிருஷ்டியால் நீங்களிருவரும் தள்ளக் கூடாது. தந்தையின் முகம் காணாத அவர்கள் இளமைப்பருவம் முதல் சொந்தப் பிள்ளைகளைப்போல் உங்களிருவர்களாலும் வளர்க்கப்பட்டு உங்களது உத்தரவை எந்தச் சமயத்திலும் மீற வில்லை. ஆதலால் நீங்களிருவரும் அவர்கள் விஷயத்தில் நல்ல எண்ணங் கொள்ளவேண்டும். இதையே நான் அடிக்கடி வேண்டு கிறேன்.

மிகவும் கஷ்டப்பட்டு அப்படியே ஆகட்டும் என்று ஒத்துக் கொண்ட அந்த காந்தாரி திருதராஷ்டிரர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிருஷ்ணன் அச்வத்தாமனிடமிருந்து தீங்கை எதிர் பார்த்தவராய் உடனே இரவில் யுதிஷ்டிரரை அடைந்து காந்தாரி திருதராஷ்டிரர்களைத் தான் சமாதானப் படுத்தியதை அவருக்குத் தெரிவித்து "நமது நன்மையைக் கருதி நாம் வேரிடம் சென்று வசிக்கவேண்டும்" என்று கூறினர்.

அவ்விதமே புறப்பட்ட அந்த பஞ்சபாண்டவர்களுடனும் ஸாத்யகியினுடம் கூட ஒரு நதிக்கரையில் கிருஷ்ணன் சுகமாக நித்திரையிலாழ்ந்தார்.

அச்வத்தாமன், கிருதர், கிருதவர்கர் இவர்களுடன் கூட துரியோதனனை அடைந்து அவனுடைய அந்த நிலையினுல் மிகவும் வருத்தமடைந்து எல்லா பாஞ்சாலர்களுடைய வதத்தைப் பிரதிக்ஞை செய்தான்.

பிறகு சந்தோஷமடைந்த துரியோதனன் அச்வத்தாமனை ஸேனாதிபதியாய் நியமித்தான். அவனும் கிருபர், கிருதவர்மர் இவர்களுடன் கூடப்புறப்பட்டு இதை எவ்விதம் நிறைவேற்றலாம் என்று தீவிரமாய் ஆலோசித்தான்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

உயிர்க்கனல்

"ஸ்ரீரா"

(தொடர்ச்சி)

அத்தியாயம் 4

அன்று இரவு பங்காருசாமி கடையைத் திறந்து வைத்துக் கொண்டு வெகு நேரம் உட்கார்ந்திருந்தான். நேரமாகி விட்ட தென்பதை உணரும் மன நிலையில் அவன் இல்லை. புதையல் இருக்கும் கதை கேட்டவன் தேடிச் செல்லும் போது இருக்கும் பேய் நிலையில் தான் அவன் இருந்தான். மண் படிந்த தலைமயிருக்கும் காற்றுக்குமிடையே சிறிய யுத்தங்கள் நடக்கும்போது நடுநிலைமை வகிக்கவும் முடியாமல் வகிக்காமலிருக்கவும் முடியாமல், தலையில் மெதுவாகக் கை வைத்து நெருடுவதும், பின்னர் எடுத்து விடுவதுமாகப் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தான்.

அவன் மனத்தை அப்படி ஆக்கிரமித்துக் கொண்டிருந்த விஷயம் தான் என்ன? சுருக்கமாகக் சொல்லவேண்டுமானல் அதைத் "தத்துவ சாஸ்திரம்" என்று குறிப்பிடலாம்.

தத்துவ சாஸ்திரத்துக்கும் பங்காருசாமிக்கும் சம்பந்தமுண்டு என்ற விஷயத்தைக் கேட்கும்போதே பலர் துணுக் குறுவார்கள். மாஜி வெற்றிலை பாக்குக் கடை பங்காருவா இத்தகைய அதிசயமான ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டான் என்று சந்தேகப் படுவார்கள். சந்தேகத்தை வெல்லும் துணிவுடையவர்கள் அனுதாபப்படுவார்கள். ஒன்பது ரூபாய் மூன்றணுவுக்கும் பத்து ரூபாய் ஆறணுவுக்கும் உள்ள பேதத்தைக் கணக்கிட்டு நடுநிசி பன்னிரண்டு மணிக்கு அன்றைய பற்றுப் பத்தியை நிரப்பும் பங்காரு இத்தகைய பரிசீலனைகளில் இறங்க முடியுமா? இறங்கலாமா?

இரண்டு முக்கிய விஷயங்கள் அவனைக் கவ்விக்கொண்டிருந்தன. ஒன்று பொம்மைகளாயிருந்த நாயும், பூனையும், உயிர் பெற்று நடமாடக்கூடிய சக்தி பெற்றிருந்தது. மற்றது நாய், பூனை என்ற இரு சிருஷ்டிகளிடையே இருந்த இயல்பான விரோதம். முதலாவதைவிடப் பின்னதே அவனை அதிகமாக ஆட்கொண்டிருந்தது என்று சொல்லவேண்டும்.

நாய்...பூனை—விரோதமான ஜந்துக்கள். இது பற்றிய சிந்தையே இப்போது தான் அவனுக்கு உண்டாகியிருந்தது.

பங்காரு ஒரு காலத்தில் தன் வீட்டில் பூனை ஒன்றை வளர்த்து வந்தது என்னவோ உண்மை தான். காட்டில் வாசம் செய்வதாகக் கூறப்படும் சிங்கம், புலிகள் போல் பூனை அவனுக்குப் பரிச்சயமாகாத வஸ்துவல்ல. பூனை வளர்த்த அந்தக்

காலத்தில் அதன் எலிவேட்டை யில் பங்காருவும் பங்குகொண்ட துண்டு. ஆனால் எலி—பூனை உறவுகளைப் பற்றி அப்போ தெல்லாம் யோசனை செய்ய நேரமேயில்லை அவனுக்கு. மனப்பக்குவம் சந்தர்ப்பங் களுக்காகக் காத்துக் கொண் டிருக்கும் என்று கூறுவார்கள். பங்காருவுக்கும் அப்படித் தானோ என்னவோ தெரிய வில்லை.

பங்காளிச் சண்டைகள் பல வற்றை விலக்கியும், சிலவற்றில் ஈடுபட்டும் பங்காருவுக்கு ரொம் பப் பழக்கமுண்டு. நாய்—பூனை உறவும் இதே அடிப்படையில் இயங்கி வருவதாகத்தான் அவ னுக்குத் தோன்றிற்று.

ஒரு தடவை—சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர்— சிந்தாமணீ மோட்டில் தன் குடிசைக்கு மூன்ருவது வீட்டில் வசித்த 'பாப்பர்' பச்சையப்பன் குடித்துவிட்டு யாரிடமோ அடி பட்டுத் திரும்பும்போது தன் னிடம் கூறிய வார்த்தைகள் அவனுக்கு ஞாபகம் வந்தன. அப்போது சிரித்ததுபோல் இப் போது ஒரு முட்டுச் சிரித்தான்.

"என்ன......லே...செமந்து தாங்கிட்டான்! படுவா மவன்... எ...எ...எ...பங்காளிப் பய லாத்தான் இருக்கணும்...வேற எவனுக்கு இம்மா ஆணுவம் இருக்கும்......!'' என்ற பங் காளியற்ற பச்சையப்பனின் வார்த்தைகள் தான் அவனை அப்படிக் குலுங்க வைத்தன.

மண்ணிலே மண்டியிட்டுத் திரிந்த பிள்ளைப் பிராயத்தில் வாய்மொழியின் அரிச்சுவடி நடைமுறையில் பாடமாகும் காலத்திலேயே பங்காளி— சமம்—விரோதி என்ற சாம்ய மும் இயல்பிற்குள் ஏறினலல் லாது இந்த உணர்வு ஏற்பட முடியாதல்லவா? பாடையில் ஏற்றிக் கொளுத்தும் வரையில் இந்த விஷம் உடலைவிட்டு இறங் குவதில்லை. இதே போலத்தான் போலும் நாய்க்கு, பூனை—சமம் —விரோதி என்ற பொருளும், பூனைக்கு, நாய்—சமம்— விரோதி என்ற பொருளும் தத் தம் தாய்மார்களின் மூலம் பாலுடன் கலந்து ஊட்டப்படு கின்றன!—இவ்வாறு எண்ண மிட்டான் பங்காரு.

குடிகாரப் பச்சையப்பனைப் பற்றி நினைவு வந்த சில நிமிஷங் களுக்கெல்லாம் போதையேறிய ஒரு நிஜ ஸ்வரூபத்தை அவனல் நேரில் காணமுடிந்தது. முன்னே நின்றவன் பச்சையப்ப னல்ல. நண்பன் தங்கவேலு.

அந்தப் பயலைக் கண்டதும் பங்காரு ஒரு தடவை சூள் கொட்டினன். இறங்கிச் சென்று கையைப் பிடித்து இழுத்துப் பக்கத்தில் உட் கார்த்தி வைத்துக்கொண்டான். ஏதோ நினைத்துவிட்டுத் தனக் குள்ளே சிரித்தான். மானுஷீ கத்திலிருந்து விலகி நிற்கும் பொருள்பற்றிப் பேசுவதற்குப் போதையின் மூலம் தடம் தவறியிருக்கும் மனத்தின்

ஒலிபரப்பியாகிய நாவே சரியான கருவி! இந்தப் பேருண்மை அவனுக்கு உதயமாகியிருக்கலாம்!

"ஏப்பா இம்மா நேரம்? கட்டை அசரலேயா. விளக்கைப் பொருத்திக்கிட்டு இப்படியே இந்நேரம்...கோளி கூவிடும் போலிருக்கே...எ..." என்று ஆடினன் தங்கவேலு.

அவன் முதுகில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டிவிட்டு "டேங்கம்மா" என்ற அவன் பதிலேயும் வாங்கிக்கொண்டு பங்காரு பின்வரும் கேள்வியை அரை கேலியாக அவனிடம் போட்டான்:—

"ஏப்பா, நீ பூனே பார்த்திருக்கியா?"

தங்கவேலு சிரிக்கவில்லே. காதில் விழுந்தது மூளேக்கு எட்டுவதற்குள் ரொம்ப சங்கடப் பட்டுப்போய்விட்டது.

சிறிது நேரங் கழித்து, "ஆ... பூனெ......என்னு சொன்னே... பூனேயா...ஆமா...ஆமா... இந்த எலி பிடிக்குமே...ஏலே, பங்காரு, எலி பாத்திருக்கியா நீயு...மணிக்கூண்டு சுப்பாச் செட்டி மண்டியிலே எம்மாம் பெரிசு எலியெல்லாம்..."

பங்காரு அவனே விடவில்லே. இடைமறித்தான்.

"இந்தப் பூனேயைக் கண்டா நாயெல்லாம் ஏன் இப்படிச் சீறுது?" என்று அவசரமாகப் பரீட்சை வைத்தான் அவன்.

பள்ளிக்கூடம், பரீட்சை இதையெல்லாம் தங்கவேலு எங்கே பார்த்திருக்கிருன்? கேள்விபோட்டால் பதில் வர வேண்டுமே யொழிய இன்னெரு கேள்வி தொடுக்கக் கூடாது என்று அவனுக்குத் தெரியாது.

"இந்த எலியைக் கண்ட பூனே ஏஞ் சீறுதாம்?" என்று கேள்விபோட்டான் அவன்.

கேள்விகளின் உருவத்தில் தான் பேதம் இருந்தது. தத்துவத்தில் இரண்டும் ஒன்றுதான்!

"படைச்சவன் எழுதிட்டா வேறே நடக்குமா? தலேயிலே எழுதி ஒட்டி அனுப்பிச்சுப் போட்டான். இங்கே வந்து அடிச்சுக்கிட்டு நிக்குது. எதுதான் அடிச்சுக்கல்லே. எல்லாந்தான் பளியாப்போட்டுக்குது. மனுசனே மனுசன் ராவற ராவுலே இதெல்லாம் என்னப்பா அதிசயம்" என்று தங்கவேலு விளக்கினன்.

சிருஷ்டியின் அஸ்திவாரம் போராட்டம் தான் என்ற உண்மையை இந்த உருவத்தில் தான் அவனல் விளக்க முடிந்தது.

"படைச்சவனுவது எழுதற தாவது, கேலிக்கூத்து, ஒண்ணேட ஒண்ணு சரசமாப்போனு வலிக்குமா? வாளத் தெரியாம எல்லாங் குட்டிச்சுவராப் போவுது" என்று மனப்பூர்வ

மாகப் பேசினன் பங்காரு பூனையும் நாயும் நல்லுறவு பூண்டு வாழும் நிலையை அவன் சற்றுக் கற்பனை செய்து பார்த்தான். அவ்வளவுக்கவ்வளவு படைப்பின் இயல்பிலிருந்து தான் பிரிந்து போவதாக அவனுக்குத் தோன்றியது.

"சாசமாப் போவரதெல்லாம் நடக்கிற காரியமா? பூனைக்கு எலி விரோதமில்லேன்னு ஊரிலே எலி பெருகிப் போகும். மனுசனையே கடிச்சுத் தின்னுட்டுப் போகும்" என்று தங்கவேலுவின் வாதம் மேலும் ஒரு அடி நகர்ந்தது.

பங்காருவுக்கு இது ஒரு சிறிய காரணமாகத்தான் தோன்றியது. எலியைக் கொல்வதற்காகப் பூனையையும், பூனையைக் காப்பதற்காக நாயையும் யாரோ படைத்திருப்பதுபோல் கொள்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. சிருஷ்டியின் காரண பூதத்திலிருந்து விடுபட்ட தற்செயலான புற இயல்பாகத் தான் பட்டது இந்தப் பூனை-நாய் விரோதம், அவனுக்கு.

பூனையால் நாய்க்கு யாதொரு தொந்தரவும் கிடையாது. பரஸ்பரம் உயிரின் அடிப்படை விவகாரமான உணவு விஷயத்தில் கூட இரண்டின் பாதைகளும் ஒன்றையொன்று குறுக்கிடுவதில்லை. இரண்டுக்கும் தனித்தனியே பரந்த நடமாட்ட வெளி இருக்கிறது.

★

ஆழ்ந்த சிந்தனையும் அயர்ந்த தேகமும் கண்ணிமைகளின் மேல் கடுமையாக உட்கார்ந்தன பங்காருவுக்கு. தலையை ஒரு முறை சொரிந்து விட்டு எழுந்திருந்தான்.

"எழுந்திருடா... தங்கவேலு!" என்று அவனை முழங்காலால் ஒரு முண்டு முண்டிவிட்டுக் கடையடைப்பில் இறங்கினன். மின்சார விசையின்மேல் கை வைத்து அழுத்திவிட்டுக் கடைசிப் பலகையை எடுத்துக் கொண்டே "ரெண்டு மொந்தே இருக்குமா? ஏது இன்னைக்கு இந்தப் பாட்டையில் கிளம்பினே?" என்று பேச்சை நீடித்தான். கடையடைப்பு முடிந்ததும் சாவியை இடுப்பில் வைத்துக்கொண்டு தங்கவேலுவுக்கு ஒரு கை கொடுத்து அணைத்த வண்ணம் சிந்தாமணி மோட்டை நோக்கிக் கிளம்பினன்.

வீடு செல்லும் பாதையில் யோசனை அதிகமாயிற்று. அதில் ஒரு ஆசை பிறந்தது. ஆசை என்பதைவிடப் பிடிவாதம் என்பது அதிகப் பொருத்தமாக இருக்கும்.

உயிர் இயல்பைத் தூண்டக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தவுடன் உயிர்பெற்றெழக் கூடிய அபூர்வ பொம்மைகள் இரண்

டையும் திரும்பவும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வலுத்தது. அதைத் தொடர்ந்து அந்த பொம்மைகளிடையே நட்பை வளர்த்து, இயற்கையில் காணமுடியாத அந்த அதிசயத்தை சங்கல்பிக்க வேண்டும் என்ற அவாவும் உண்டாயிற்று. படைப்புச் சக்தியின் கர்வமும், துணிவும் அவன் தலையை ஒரு கணம் கிறுகிறுக்க வைத்தன. தங்கவேலுவின் மேல் தன்னை முட்டுக் கொடுத்துக் கொண்டு நடந்தான்.

அத்தியாயம் 5

பங்காருவிடமிருந்து பொம்மைகளை வெற்றிகரமாக வாங்கிக்கொண்டு வந்த பெண் மணிகளது பெயர்கள் முறைப்படி தங்கம்மாள், சரோஜா என்பன. தங்கம்மாள், சரோஜா என்ற வெறும் பெயர்கள் மாத்திரம் யாதொரு உறவையும் குறிப்பிடுவனவாக இல்லை என்பது ஒரு பெரிய குறைதான். பெயர்களுக்கு இருக்கும் சக்தி எவ்வளவு குறைவு என்பதை இந்த உண்மை விளக்குகிறதல்லவா? ஒரு மாமியாரும், நாட்டுப் பெண்ணுமாகச் சேர்ந்து பொம்மைகளை விலை தீர்த்து வாங்கிக்கொண்டு வீடு சேர்ந்தார்கள் என்று சுருக்கமாகக் கூறுவதன் மூலம் [illegible] அகங்களில் நவராத்திரி [illegible] கொலு போன்ற சுபசூசகா[illegible] பண்டிகைக் காலங்களில் மாமியார், நாட்டுப் பெண் உறவைத் தெளிவாக விளக்கிவிடலாம் என்று தோன்றுகிறது. முக்கியமான தேசீய நெருக்கடிகள் ஏற்படும் காலத்தில் பரஸ்பர நலனை உத்தேசித்து, ஒருவரை யொருவர் கவிழ்த்துவிடாமல் பாதுகாப்பதைக் குறியாகக் கொண்டு அமையும் கூட்டு மந்திரி சபையை இந்தக் கூட்டுறவுக்கு ஒப்பிடலாம்.

மாமியார் என்ற ஹோதாவில் தங்கம்மாள், நாட்டுப் பெண்ணான சரோஜாவின் அபிப்பிராயத்தை நவராத்திரி பொம்மைகள் வாங்கும் விஷயத்தில் முக்கியமாகக் கருதினது இயற்கையே. இருவரும் வீடுநோக்கிச் செல்லுங்காலையில் தங்கள்தங்கள் பூர்வகுடும்ப ஆசை, அபிப்பிராயங்கள், கொலுசாமான்கள் வாங்கும் விஷயத்தில் எப்படி ஒத்து வந்திருக்கின்றன என்பதைப் பரஸ்பரம் விவரித்துக் கொண்டார்கள்.

பரஸ்பரம் விரோதமான இரு உயிர் இயல்புகளுடைய ஜட உருவங்கள் ஆளுக்கொன்றாக சுமக்கப்பட்டு, சுமந்தவர்களிடையே பிணைப்பை ஏற்படுத்துவதாக அமைந்தது குறிப்பிடவேண்டிய விஷயம்தான்.

தங்கம்மாளும், சரோஜாவும் ஆண்டாள் தெருவிலிருந்த தங்கள் வீட்டுக்குள் நுழைந்த சமயம் களேபரமான வேளையாக விருந்தது. வீட்டு எஜமானர்—

சரோஜாவின் அகமுடையான்—பாலசுந்தரம் தனது காரியாலயத்திலிருந்து தன்னுடன் அலுப்பைச் சுமந்து வந்திருந்த வேளை, தெரு மண்ணைக் கிளறிப் பந்தாட்டம் ஆடி ஓய்ந்த பின்னர் காலிலும் உடம்பிலும் புழுதியேறிப் படிந்த உருவத்துடன் பசியையும் சேர்த்துக் கொண்டு சரோஜாவின் தவப் புதல்வன் வெங்கிட்டு கலாட்டா செய்துகொண்டிருந்த வேளை, எல்லாம் அப்போது சேர்ந்து கொண்டிருந்தன. தங்கம்மாளின் கணவர் வாயிற் திண்ணையில் உட்கார்ந்து தோத்திரங்களைத் தமக்குத் தாமே உபதேசித்துக் கொண்டிருந்த வேளையும் அதுதான் என்பதை அவசியம் குறிப்பிடவேண்டும்.

தங்கம்மாளின் கணவர் சபேசய்யர் தமது வயதுக்கொப்பான குடும்ப அக்கறையுடன் "கோவிலுக்குப் போனால் இத்தனை நாழியா? பிள்ளையாரையே பிடித்துக்கொண்டு வந்துவிட்டாயா? அந்தப் பிள்ளை பசியென்று அலறிக் கொண்டிருக்கிறது" என்ற வார்த்தைகளால் தமது சகதர்மிணியைவரவேற்றார். பொருளாதார அடிப்படையில் சபேசய்யர் கொலுச்சாமான் வாங்குவதை விரும்புவதில்லை என்ற பெருண்மையை உணர்ந்தே தங்கம்மாள் கோவிலுக்குச் செல்வதாகக் கூறித் தன் லட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியிருந்தது.

சரோஜாவைப் பூனை சகிதமாகக் கண்ட பாலசுந்தரம் "எந்தக் காட்டில் பிடித்துக்கொண்டு வந்தாய்?" என்ற கேள்வியால் அவளைச் சிரிக்க வைத்துத் தனது சுமுகமான மனோபாவத்தை வெளியிட்டான்.

"எல்லாம் நீங்கள் வேட்டையாடப்போகும் காட்டில்தான்! அதிருக்கட்டும். இதைப்பாருங்கள் நன்றாக இருக்கிறதா? எவ்வளவு பணம் கொடுக்கலாம்!" என்று கொஞ்சுதலாகக் கேட்டாள் சரோஜா.

பேச்சு ஆரம்பித்த சமயத்தில் கூடத்து மூலையில் தனது சட்டையைக் கழற்றிக் கொண்டே நின்றிருந்த வெங்கிட்டு பொம்மையைக் கண்டதும் மகாநாட்டுக்குள் நெருங்கினான். அவனது உயரம் அந்த விவாதப் பொருளில் அவனுக்கிருந்த ஈடுபாட்டுக்கு வசதியாக இல்லை.

தனது அக்கறைக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய தன் பாட்டியின் பக்கம் நெருங்கி அவள் கையிலிருந்த நாயைக் குதித்துப் பிடித்தான். பேரனிடம் தனக்கிருக்கும் வாஞ்சையை மறந்துவிடாத தங்கம்மாள் அவனது கரங்களுக்குள் அந்த நாயை லாகவமாகச் சேர்த்துவிட்டு, "வெங்கிட்டு, சமத்தில்லையா? கீழே போட்டுடாதே; உக்காந்துகொண்டு சதைப் பாரு. மெதுவா உயிர்" என்று எச்சரிக்கை செய்தாள்.

பாலசுந்தரம் தனது மனைவியாளின் கேள்விக்குப் பதில் கூறத் தனக்குத் திறமை போதாது என்பதை மறைத்துக்கொள்ளும் முறையில் வெங்கிட்டுவின் பக்கம் திரும்பி அவன் கையிலிருந்த நாயைப் பார்த்தான். நெருங்கி அதைக் கையிலெடுத்து தடவினன். ரொம்ப புஷ்டியான மிருகம், சுகாதாரபூர்வமாக வளர்க்கப்பட்ட ஜந்து என்று அவனுக்குப்பட்டது.

அத்தியாயம் 6

மகாநாடு நடந்த அந்த கொலுதுவங்கும் முன்னுளைய இரவு அந்தக் குடும்பத்தில் சமைந்த காட்சியை ஊகித்துக் கொள்ளலாம். மின்சார விளக்கின் கண்ணேட்டத்தின் கீழ் மலர்ந்திருந்த அந்தக் கூடத்தில் முக்கால் பகுதி கொலு ஏறுவதற்குத் தயாரிக்கப்பட்டிருந்த பலகைகள், படிக்கட்டுகள், ஜோடனைகள் இவற்ருல் ஆக்ரமிக்கப்பட்டிருந்தது.

பல பல சிறிய பாகங்களால் முழுதாக்கப்பட்டிருந்த அந்தப் படிக்கட்டு நியதியை மறைத்திருந்த வெள்ளைப் பண்டங்கள் சபேசய்யரது வேஷ்டிகள், பாலசுந்தரத்தின் துண்டுகள், துப்பட்டிகள் இவைதான் என்பதில் சந்தேகமே வேண்டாம். இந்தச் சேர்க்கையினடியில் மறைத்திருந்த பொருள்களை ஊடுருவிப் பார்க்க யாருக்காவது சந்தர்ப்பம் கிட்டியிருந்தால் எத்தனை கள்ளிப்பெட்டிகள், காலுடைந்த பெஞ்சி, நாற்காலிகள், கிரோசின் தகரங்கள், மேஜைகள் இத்யாதி அங்கே மறைந்திருந்தன என்பதைக் கண்டுபிடித்திருக்க முடியும்.

அந்த அழகிய குடும்பம் இரவின் அரவணைப்பை ஏற்கச் செல்லும்போது அதன் அங்கங்களிடையே மறுநாளைய விழாத் துவக்கத்திற்கு முன்னேட்டமான யோசனைகள் எப்படியெல்லாம் கொந்தளித்துக் கொண்டிருந்தன என்பதை சற்று விவரிக்க வேண்டும்.

சபேசய்யரும் தங்கம்மாளும் எளிதில் தூங்கிப்போய்விட்டார்கள். கொலுபற்றிய சிந்தனையில் அவர்களுக்கு முக்கியத்துவம் இருப்பதாகத் தோன்றவில்லை போலும்! எத்தனை நவராத்திரிகள் வந்து வந்து போய்விட்டன! அலுத்துத்தான் விட்டது அவர்களுக்கு.

வெங்கிட்டு தனது மெத்தையில் புரண்டுகொண்டிருந்தான். காலை மாத்திரம் மூடியிருந்த போர்வையைக் கட்டை விரலால் நெருடிக் கொண்டிருந்தான். நாயின் உடலை ஸ்பரிசித்த உணர்ச்சி அவன் கையை விட்டு இன்னும் நீங்கவில்லை. அடுத்த தெருவில் தாசில்தார் வீட்டில் வளர்ந்து வந்த உயிருள்ள நாய்க்கும் இதற்கும் ஒப்பீடு செய்துபார்த்தான். அதன் காதுகள் இவ்வளவு அழகாக இல்லை. இந்த உண்மையை

ஊர்ஜிதப் படுத்திக்கொள்ள எழுந்து சென்று பார்த்து வரலாமா என்று ஒரு கணம் நினைத்தான். கண்ணைத்திறந்தபோது அவன் அறையில் நிலவிய இருட்டு இநத நினைவை அழித்து விட்டது. ஜன்னல் வழியாக எதிர் வீடு தெரிந்தது.

எதிர் வீட்டு சியாமளா ஞாபகம் வந்தது. அவளும் இவனுடன் முதல் பாரத்தில் படித்துக்கொண்டிருந்தாள். ரொம்ப சூடிகையான பெண். நேரடியாக இருக்கும்போது ஒருவரையொருவர் பேச்சில் கவிழ்த்துக்கொள்ள முயல்வது இயல்பானாலும், பிரிந்திருந்த காலையில் பரஸ்பரம் மதிப்பு வைத்திருந்தார்கள். தன்னகத்து நவராத்திரியில் ஆரோகணமாகப் போகும் நாயின் அழகைப் பற்றி மறுநாள் காலையிலோ பள்ளி செல்லும்போதோ அவளிடம் எப்படி விவரிப்பது என்று யோசனை செய்து வைத்துக் கொண்டான். "எங்கம்மாவும், பாட்டியும் வாங்கிண்டு வந்தா'' என்று சொல்வதை விட, "எங்கப்பா வாங்கிண்டு வந்தா'' என்று புளுகுவதே பொருத்தமானது என்று அவனுக்குத் தோன்றிற்று. வர்க்க ஒற்றுமையில் அவனுக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. தனது வர்க்கத்தின் பெருமையை விளக்க எந்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது அவன் துணிபு. ஆண் என்பது ஆட்சி என்பதன் திரிபு என்ற தோற்றத்துடன் ஆட்சி என்ற சொல்லுக்குப் பொருளையும் அவனிடம் கூறிவிட்டால் கட்டாயமாக ஒரு "சபாஷ்'' கொடுப்பான் அவன்.

சியாமளாவை விட்டு நாயிடம் தன் யோசனையைத் திருப்பினான். கைகளைச் சேர்த்து, உடம்பை வளைத்து ஒரு முறை கொட்டாவி விட்டான். தன்னால் சரியாகப் பரிசீலனை செய்ய முடியாமல் போய்விட்ட பூனை பற்றிய ஞாபகம் வந்தது.

நாயையும், பூனையையும் அவனால் சேர்த்துப் பார்க்க முடியவில்லை. ஒவ்வாத சேர்க்கையாகவே அது அவனுக்குப்பட்டது. தான் வீட்டிலும், கோபிலிலும் பற்பல விடங்களிலும் கண்ட பூனைகளைப் பற்றி எண்ணமிட்டான். அவற்றின் திருட்டுத்தனம் தான் கண் முன் வந்து நின்றது. இந்தத் திருட்டுப் பிராணிக்கு இருந்த உடல் நயம், தூய்மை இவை ஒரு பூனையுருவத்தின் மூலம் அவனுக்குக் காட்சியளித்தன. ஒருபூனையைப் பிடித்து முதுகைத் தடவிப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டான். பூனையைப் பிடிப்பது சுலபமல்ல. அதுவும் எளிதில் தானாக நெருங்கி வராது. காலையிலெழுந்தவுடன் முதல் காரியமாகப் பொம்மைப் பூனையை எடுத்து தடவிப் பார்க்கவேண்டுமென்று முடிவு கட்டிக்கொண்டான். தூக்க மூட்டம் பூரணமாயிற்று. கனவுகளை வரவேற்கும் நிலைக்குச் சிறிதுநேரத்தில் அவன் அழைத்துச் செல்லப்பட்டான்.

பக்கத்து அறையில் விளக்கொளி இல்லாவிட்டாலும் மின்சார விசிறியின் சுழலோசையும் இரு குரல்களது சொல்லோசையும் கேட்டுக்கொண்டிருந்தன. இரவின் ஆத்மார்த்தமான ரகசியப் பிணைப்புடன் சேர்ந்து "தாம்" என்பதனின்று விடுபட்ட, ஆனால் "தாம்" என்பதற்கு முக்கியமான விஷயங்கள் வழக்காடப்பட்டன அந்த அறையிலே.

"நாளைக்கு மத்தியானம் பூராவும் மச்சிலிருந்த பொம்மையையெல்லாம் இறக்கிப் படியில் அடுக்கியாகவேண்டும். நைவேத்தியத்துக்கு ஒன்றும் செய்யப் போதிருக்காது. கார்த்தாலே மார்க்கட்டுக்குப் போறபோது மறக்காமே ஒரு நூறு கொய்யாப்பழம் வாங்கிண்டு வந்துடுங்கோ" என்றது ஸரோஜாவின் குரல்.

"இப்போது கூட இந்த நினைவு தானா? ராத்திரி வேளையில் திட்டம் போடக் கூடாது, தெரியுமா?" என்றது பாலசுந்தரத்தின் குரல்.

"இப்போ போடாமே பின்னே எப்போ? கொஞ்சநாழிக்கெல்லாம் தான் விடிஞ்சு போகுமே?" என்றது ஸரோஜாவின் குரல் ஏகத்தாளமாக.

குரலின் பின்னே மறுநாளைய சாயங்காலம் பற்றிய கற்பனைகள் அவள் மனத்திரையில் படர்ந்தன. பக்கத்து வீடுகளிலிருந்த கோமளாவையும், ஸரஸாவையும் பாட வைக்க வேண்டுமென்ற யோசனை வகுக்கப்பட்டது. படியில் உச்சாணியில் ஏறியிருக்கும் நாயையும், பூனையையும் பார்த்து விட்டு மஞ்சட் குங்குமத்துக்கு வரும் நாரிமணிகள் "எத்தனை அழகாருக்கு! எங்கே வாங்கினேள்? என்ன விலை?" என்ற கேள்விகளை மலர்ச்சி, பொறுமை இவற்றுடன் கேட்கும் காட்சியும் அவளைத் தப்பவில்லை. பாலசுந்தரம் சற்று மௌனமாக இருந்தான். தூங்கிவிட்டான். ஸரோஜாவின் கற்பனைகளும் அவளை அயர்விலாழ்த்தி இமைகளை மூடின.

அந்த இனிமையான இரவிலே அறை மூலையொன்றில் துணிகளால் மூடி வைக்கப்பட்டிருந்த இரு ஜடபொம்மைகளும் தான் இரவின் ஆட்சியைப் பூரணமாக ஏற்றுக்கொண்டிருந்தன என்று சொல்லவேண்டும். மௌனத்தின் நீண்ட பாதையில் தோன்றும் உயிரற்ற ஆட்டபாட்டங்களில் அவை லயித்திருக்கலாம். காலம், வயது இவற்றிற்குக் கட்டுப்படாத தங்களது பௌதீகத்தை நினைந்து அதில் சொக்கியிருக்கலாம். எல்லைகளும் சார்புமற்ற அந்த சுத்த அகங்காரப் பதுமைகள் எதில் ஈடுபட்டிருந்தாலென்ன? பிறருக்குத் தம்மிடம் உண்டாகியிருந்த அக்கறையின் காரணமாகவே அவை இவ்வுலகின் பாத்திரங்களாக விருந்தன.

(தொடரும்)

ஸதாசிவ பிரஹ்மம்

●

அமராவதி நதிக் கரையில் உள்ள கரூரிலும், காவேரி தீரத்தி லுள்ள நெரூர், கொடுமுடி முதலிய புண்ய க்ஷேத்திரங்களி லும் 163 வருஷங்களுக்கு முன்பு திகம்பரராய் ஸஞ்சரித்து வந்த ஞானபரராகிய ஸதாசிவ பிரஹ்மம் என்ற மகான் பிரஹ்மானந்த பரவசராகியிருந்த சமயங்களில் இயலிசையாக ஸமஸ்கிருத பாஷையில் அனேக கீர்த்தனங்களைப் பாடியுள்ளார். அவை இன்றும் பிரசித்தமாக விளங்கி வருகின்றன. இவரது அற்புதச் செயல்கள் அனேகம் உள்ளன. கி. பி. 1890 அக்டோபர் மாதம் 20உ யன்று புதுக்கோட்டை பிரஹதாம்பா விலாச அச்சுக்கூடத் தில் ஸதாசிவ பிரம்மத்தின் சரித்திரம் தமிழ் வசன ரூபத்தில் அச்சிடப்பட்டது. இப் புத்தகத்தைப் படித்தால் இம் மகா புருஷரின் மகிமை விளங்கும். இம் மகானின் அனுக்கிரஹத் தாலேயே புதுக்கோட்டை ஸமஸ்தானம் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்துகொண்டு வருகிறது. இந்த ஸமஸ்தான அரசர்கள் இன்றும் நெரூரில் உள்ள இவரது ஸமாதிக்கு வருஷோற்சவ, நித்யோத்ஸவ பூஜைகள் நடத்திக்கொண்டு வரு கிறார்கள். இவருடைய ஆக்ஞைப் பிரகாரம் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பெண்களுக்கு ஸ்வயம்பாகமும், ஒவ்வொரு வருஷ மும் மிகுந்த செலவுடன் நவராத்திரி பூஜா ஸந்தர்ப்பணமும் இன் றும் நடத்தப்பட்டு வருகின்றன.

★

அருணாசல கவிராயர்

இவருடைய ஊர் சீர்காழி. தமிழ் பாஷையில் ஐந்திலக்கண மும் அறிந்த புலவர். ராமாயணப் பிரசங்கங்கள் நிகழ்த்துவதில் மிக ஸமர்த்தர். இவர் துளஜா மகாராஜா காலத்தில் இருந்தவர். ஸ்ரீமத்ராமாயணத்தை, கதை, ஸந்தர்ப்பங்கள் முதலியவற்றை விடாமல் அந்தந்த ரஸங்களுக்குத் தகுந்த ராகங்களில் வர்ணக்ர மங்கள் விளங்க, ஆறு காண்டங்கள் வரை தமிழ் கீர்த்தனங்களாக இயற்றி மணலி முத்துகிருஷ்ண முதலியார் ஸபையில் ராமஸ்வாமி தீக்ஷிதர் முதலிய வித்வான்கள் இருந்த ஸபையில் பாடி, அரங் கேற்றி, கனகாபிஷேகம் செய்விக்கப் பெற்றுப் புகழுடைந்தார். இவர் ஸங்கீத வித்யையிலும் ஸமர்த்தர்.

[மூலம் :— ஸ்ரீ ஸுப்பராம தீக்ஷிதர் இயற்றிய இயலிசைப் புலவர் வரலாறு என்ற தெலுங்கு நூல் தமிழாக்கம் : டி. ஸ்ரீ பார்த்தஸாரதி

பழமையில் மோகம்

"குச்சாமாமா"

(நான்காம் பாகம்)

வீட்டில் நுழையாத வரையில் க்ஷேமம், நுழைந்துவிட்டாலோ நிலவரத்தைக் கண்டதும் "கோவிந்த, கோவிந்த, கோவிந்த" என்று தலையில் அடித்துக்கொண்டே விதியையும் நொந்துகொண்டு வெளியே வர நேரிடும். பிறகு அந்த மனிதனுக்கு அந்த வீட்டின் நினைப்பு வந்தாலே போதும். தெனுலிராமன் பூனே, பாலைக்கண்ட கதை தான்.

மூன்றுவது கோவிந்தன் இந்திராவைக் கல்யாணஞ் செய்து கொண்டு நான்கு வருஷங்களாயினவாம். அது வரையில் ஒரு குழந்தைப்பேறு உண்டாகாத காரணத்தால் இந்திராவுக்கும் அவள் தாயாருக்கும் ரொம்ப குறை. கோவிந்தன் பேரில் ஒரு வெறுப்புங்கூட.

ஏதோ மிலிட்டரியில் உத்யோகம் பார்த்து விலகிய கோவிந்தன், தன் வசமிருந்த சிறிது முதலைக்கொண்டு மௌண்டு ரோட்டில் ஏதோ ஒரு அற்ப வியாபாரத்தை வைத்துக் கொண்டு ஜீவிதத்தைக் கழிக்கலானர். இந்திராவின் அதிருஷ்டம் கோவிந்தனுக்கு ஒரு சக்கை போட்டது. மடமடவென்று வியாபாரம் பெருகிக் கடையுப் விருத்தியாகிப் பணமுங் குவியலாயிற்று

இவரும் வேட்டகத்தோடு தான் இருந்தார். இதற்குள் ஒரு மோட்டார் வைத்துக்கொண்டு வாழுந் தரத்தையும் அடைந்து விட்டார் வியாபார ஸ்தலத்தில் இப்போது ஐந்து ஆறு பேர் குமாஸ்தாக்கள், 'காஷிய'ரென்றும், 'அக்கௌண்டெண்டு' என்றும், 'டைபிஸ்டு' என்றும், 'ஸ்டோர்கீப்பர்' என்றும், 'ஸேல்ஸ்மென்' என்றும், 'பில் கலெக்டர்' என்றும், 'ஸைகில் பாய்' என்றும் பலருஞ் சேர்ந்து கோவிந்தனை ஒரு பெரிய முதலாளியாக்கி விட்டனர். பணம் பெருகியதோ இல்லையோ—தினசரி கணக்கு வழக்குகளை ஆபீஸில் எப்படி எழுதி ஏறக் கட்டினலும் அவை எல்லாம் வருமான வரி இலாகாவுக்கு நம்பத் தகுந்த தரத்திலிருக்கும். கணக்குகள் எல்லாம் அவ்விதமே இருக்கின்றனவாவென்று தணிக்கை செய்து நற்சாக்ஷி நல்க வருஷாந்தர ஆடிட்டர்கள் வருவார்கள். இதெல்லாம் ஒரு வகை தானே! உண்மையில் கோவிந்தனின் லாப நஷ்டங்கள் எத்தன்மையிலிருந்தன? இக்கணக்குகளைத் தணிக்கை செய்வது யார்? இந்த உண்மையான வருமா

னத்தை நிச்சயித்து அதற்கு வரி போடுவது யார்? இவை எவ்வளவு கடினமான செயல்கள்! பொறுப்புமிக்கவைகளுமன்றோ? உண்மையில் தனது லாபமின்னதென்று சொல்லும் வியாபாரியுமுண்டா? அதை வியாபாரியிடமிருந்து சொல்ல வைக்கும் சாமர்த்தியமுள்ளவரும் உண்டா. வேதாளத்தின் உதவியால் பேசாமடந்தையைப் பேசவைத்த விக்கிரமாதித்தனும் இந்த விஷயத்தைப் பேசுமாறு வியாபாரியைச் செய்யமுடியாது இவ்வளவு கடினமான வேலையைப் பொறுப்பு வாய்ந்த வேலையை இந்திராவும் அலர்மேல் மங்கையம்மாளும் கனிவுடன் ஏற்றனர். தினந்தோறும் வீடு திரும்பியதும் கோவிந்தன் கணக்குகளை இவ்விருவரிடமும் ஒப்புவித்து ரொக்கத்தையுங் கட்டிவிடவேண்டும். துருவித் துருவி இவர்கள் இருவரும் கேள்விகள் கேட்டுக் காலணா பிச்சைக்காரனுக்குத் தானஞ் செய்தது வரையில் வெளியாகிப் பதிவான பிறகு கணக்கும் கையிருப்பும் சரியான பிறகு செலவினங்களில் அனாவசியமானவற்றைக் குறித்துத் தாக்கீதுகள் பிறப்பித்துச் சிக்கன முறையைக் கடைப்பிடிக்கும்படி கண்டிப்பான உத்திரவுகளுமிட்டுப் பணத்தை இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொள்வர். பிறகு அந்தப் பணத்திலிருந்து காலணா வெளிவர வேணுமானாலும் கோவிந்தன் வெகு சிரமப்பட்டால் தான் முடியுமோ என்னவோ.

கோவிந்தனுக்குத் தாயாரும் தகப்பனாரும் இரண்டு ஸஹோதரர்களுமிருந்தனர். அவர்களெல்லோரும் தனியாகத்தான் மைலாப்பூரில் குடித்தனம் பண்ணி வந்தனர். ஜீவனத்திற்குச் சிரமம்தான். தலைப்பிள்ளை கோவிந்தன் செல்வத்தில் புரண்டு கொண்டிருப்பதாக அவர்கள் எண்ணம். என்ன காரணத்தாலோ கோவிந்தனுடன் அவர்களுக்கு அதிகமாக போக்குவரத்து இல்லாமலிருந்தது. ஏதாவது கல்யாணம் கார்த்திகைகளுக்குச் சம்பந்திகள் என்ற வகையில் கோவிந்தாச்சாரியர் அழைப்புப் பத்திரிக்கை அனுப்பினாலும் கோவிந்தனின் தகப்பனார் வந்து பந்தல் வியவஹாரங்கள் பூர்த்தியானதும் சாப்பாட்டிற்கு மைலாப்பூருக்கே போய்விடுவார். கோவிந்தாச்சாரியர் வீட்டில் ஸம்பந்தியை இருந்து சாப்பிட்டுப் போகும்படி நிர்ப்பந்திப்பதும் கிடையாது... போகும் பொழுது கோவிந்தன் தன் காரிலாவது தந்தையை மைலாப்பூரில் கொண்டுபோய் விட்டுவரலாமே! அதுவுஞ்செய்ய மாட்டார். பஸ் 'சார்ஜா'வது இருக்கிறதாவென்று உபசாரத்திற்குங் கேட்கமாட்டார். அவரது குடும்பம் வரவரத் தரித்திரத்தில் முழுகிக் கொண்டே வந்தது. இந்நிலையில் யாராரோ கோவிந்தனிடம் விஷயத்தைத் தெரிவித்தார்களாம். அவற்றை அப்படியே வீட்டிற்கு வந்ததும் கோவிந்தன் இந்திராவிடமும் அலமேல்மங்கை யம்மாளிடமும்

ஒப்பிப்பார். இவர்கள் அதற்குச் சொல்லும் பதிலை வாங்கி தலைப்பில் முடிந்து கொள்வார். மறு நாள் மத்யஸ்தர்களிடம் அதை அப்படியே அவிழ்த்துச் சமர்ப்பிப்பார். மத்யஸ்தர்கள் என்ன செய்யமுடியும்? ஆயினும் ஏதோ கஷ்டப்பட்டுக் கோவிந்தனின் தம்பிகள் இருவருக்கும் கோவிந்தனின் கடையிலேயே ஏதோ வேலை போட்டுக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்தனர். அவ்விருவரின் சம்பளத்தில் தாய் தந்தையருடன் ஜீவனம் நடைபெற ஏற்பாடு செய்ததே பெரியதொரு தியாகம் என்றும் அதோடு தன் பெற்றோருக்குத் தனது கடமை முழுவதுமே செலுத்திவிட்டதாகவுமே கோவிந்தனின் உபாஸனு தேவதைகள் அருளிவிட்டனர். கோவிந்தனும் கவலையை விடுத்தார். நிற்க, கோவிந்தனின் பணம் இரும்புப் பெட்டியில் குவிந்து வந்தது. சாவி மட்டும் இந்திராவிடமோ அலர்மேல் மங்கையம்மாளிடமோ இருந்தது. காலக்கிரமத்தில் இந்தப் பணத்தில் சிறுகச் சிறுக இந்திராவின் நகைகளாகவும் புடவை ரவிக்கைகளாகவும் மாறிடலாயிற்று. மற்றும் மாம்பலத்தில் ஒரு பங்களாவுமாயிற்று. இப்பொழுதும் கோவிந்தா கோவிந்தா வென்றுதான் ஏக குடும்பமாக நடக்கலாயிற்று.

இடையில் தன் புருஷனைக் கைப் பொம்மையாக ஆட்டி வரும் சில பணக்காரப் பெண்களுக்கே உரித்தான சில "வீக்னிஸ்" "மார் படபடப்பு" "மூர்சை" "ஹார்ட் டிஸீஸ்" என்பன போன்றவை இந்திராவுக்கும் அவ்வப்போது வருவதும் அதனால் வீட்டிலுள்ள ஆண் பெண்கள் எல்லோரும் திமிலோகப்பட்டு வீடே குமிந்து இந்திராவைச் சூழ்ந்து கொள்வதும், எல்லோரும் ஒரு அனுதாபமும் ஆதரவும் தெரிவிப்பதும், கார்கள் விர் விர் என்று பறப்பதும் டாக்டர் மேல் டாக்டர் வந்து போவதும்—முடிவில் சியில் இந்திராவே தான் மூர்ச்சித்தது போதுமென்று தோன்றவும் மெதுவாகக் கண் விழிப்பதும், பின்னும் இரண்டு நிமிஷத்திற்குள் காபி குடிப்பிக்க இருவர், டீ குடிப்பிக்க இருவர், குளிர்ந்த ஜலம் குடிப்பிக்க இருவர், வெந்நீர் குடிப்பிக்க இருவர் ஒரு சொட்டு பால் குடிப்பிக்க இருவர் என்று பலரும் ஒரே சமயத்தில் உபசரிக்க, ஒன்றையுமே ஏற்காமல் இந்திரா விளக்கெண்ணெய் குடித்தவள் போலும் புளியம் பழத்தை சுவைத்தவள் போலும் கோணல்களை முகத்தில் வருத்திக் கொண்டு "ஏதுக்கு இப்படியெல்லாம் வீணுக அமர்க்களப்படுத்துகிறீர்கள்" என்று சொன்ன பின் எல்லோருமே நிம்மதியுடன் பெருமூச்சு விடுவதுமான நிகழ்ச்சிகள் அவ்வப்போது ஏற்பட்டு இந்திராவின் கௌரவம் ஸௌகுமார்யம் இவற்றைத் தெரிந்தவருக்கு ஞாபகமூட்டியும் தெரியாதவருக்கு அறிவித்தும் வரலாயின.

இவ்விதக் குடும்பத்தில் இந்த சூழ்நிலையில் வளர்ந்த ராஜலக்ஷ்மியைத் தான் பார்த்தஸாரதி கல்யாணஞ் செய்துகொள்ள நேர்ந்தது. ஏன் நேர்ந்தது, எப்படி நேர்ந்தது என்ற விவரங்களை இப்போது விளக்குவானேன்?

பெண்பார்க்கும் படலமென்ற ஸம்பிரதாயம் ஒன்று உண்டல்லவா? அதுவும் நடந்தேறியது. அன்றைய தினம் மனுஷ்யாளெல்லாம் நடந்துகொண்ட விதமே புதுமையாகத் தென்பட்டது பார்த்தஸாரதிக்கு. பெண் பார்க்கச் சென்றபோது பார்த்தஸாரதியுடன் அவனுடைய பந்துக்கள் ஒருவருஞ் செல்லவில்லை. சில நண்பர்கள் தான் சென்றனர். அவர்களோ ஸ்ரீ வைஷ்ணவர்களல்ல. புவனேச்வர அய்யர் என்றவர் தான் இந்த நண்பர்களுள் பிரதானமானவர்.

பெண்ணைப் பார்த்தவுடன் பார்த்தஸாரதிக்கு ஒருவிதமான அபிப்பிராயமுந் தோன்றவில்லை. பெண்ணைப் பார்த்து வந்த பிறகு அழகா இல்லையா? களை பொருந்திய முகமா? சிவப்பா, கருப்பா, மாநிறமா? ஒல்லியா, பருமனா? குள்ளமா உயரமா? என்று எத்தனையோ கேள்விகள் கேட்டனர் அவனுடைய நண்பர். இதில் ஒன்றிற்காவது பதில் கூறவே தெரியவில்லை பார்த்தஸாரதிக்கு. "முகத்தில் முக்கால் பாகம் மூக்கு, காதுகளிரண்டும் கன்னங்களிலிருந்து 90 டிக்ரியில் தோள் புறம் வியாபிக்க, காற்று நிறைந்த கப்பல் பாய்மரம் போல் காதுகளின் கிண்ணங்கள் முகத்தைப் போல் எதிரிலிருப்பவரை நோக்கியவாறு பயமுறுத்தும் பாவத்திலிருக்கின்றன. பற்களில் மேல் வரிசையில் எதிர்ப்பல் ஒன்று நுனியில் பிறை வடிவம் பெற்றிருக்கிறது. தலையில் வகிடு எடுத்துள்ள பாகத்தை யொட்டி சீக்கிரத்திலேயே கூந்தல் உதிர்ந்து பொட்டையாகிவிட ஹேது இருக்கிறது" என்று யாருமே கேட்காத வகையில் பெண்ணைப் பற்றிய தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான் பார்த்தஸாரதி. இதைக் கேட்ட நண்பர்கள் "போடா மடையா" என்று சொல்லிச் சிரித்தனர். வாஸ்தவத்தில் மடத்தனம் இனி தான் பரிணமிக்கப் போகிறதென்பதை யாருமே அறியவில்லை.

ஆயினும், அடுத்த இரண்டு நாட்களுக்கெல்லாம் பார்த்தஸாரதி மறுபடியும் புவனேச்வர அய்யருடன் கோவிந்தாச்சாரியாரின் வீட்டிற்குச் சென்றான். பார்த்தஸாரதிக்காக வக்காலத்துப் பெற்றவராய் புவனேச்வர அய்யர் பேசலானார்.

பு.ஐ: பாருங்கள் பெருமாளே! ஒரு விஷயம். பார்த்தஸாரதிக்குக் கல்யாணமானதும் குடித்தனம் ஆரம்பித்தாகவேண்டும். தற்போது ஊரிலிருக்கும் அவன் தாயாரைத் தன்னிடமே அழைத்து வைத்துக்கொண்டு சகல சௌகரியங்களுடனும்

பராமரிக்க உதவியாக வீட்டை நடத்தவும் குடும்பத்தின் பொறுப்பை ஏற்கவும் உடனடியாகவே குழந்தையைக் கொண்டுவிட்டுக் குடித்தனத்தை நிலைக்க வைக்கவேண்டும். இது விஷயமாக உங்கள் நோக்கம் எவ்வளவு தூரம் அனுகூல பாவத்திலிருக்குமென்று அறியத்தான் இன்று வந்திருக்கிறோம்.

கோவிந்தாச்சாரியார் ஒரு வரட்டுச்சிரிப்புசிரித்தார். என்ன பதில் சொல்வதென்று தோன்றாமல் முகத்தில் அசட்டுக் களை சொட்ட வாயில் ஊறாத எச்சிலை விழுங்க வீணாக முயற்சித்தார். இதற்குள் வீட்டின் உட்புறமிருந்து ஏதோ ஒரு புதுமையான சப்தம் கேட்டது. கோவிந்தாச்சாரியரை உள்ளே அழைத்திட அவ்விடமிருந்தவர்கள் பிறப்பித்த ஸமிக்ஞை தான் அது. கோவிந்தாச்சாரியரும் உள்ளே சென்றார். சற்று நேரம் ஏதோ கிசுமுசு வென்று சப்தம்; பிறகு தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி எல்லா பாஷைகளிலும் ஏதேதோ பேச்சுக்கள். முக்காலும் ஹிந்தியில் தான் ஸம்பாஷணை; முக்கியமாகப் பேசும் குரல் சற்று உயரும் போதெல்லாம் ஹிந்தி பாஷை தான் கேட்டது. இப்படியாக ஒரு பதினைந்து நிமிஷமாயிற்று. பிறகு கோவிந்தாச்சாரியார் வெளியே வந்தார். அவர் முகம் களையிழந்து வாடி வதங்கிச் சுருங்கி இருப்பதாகப் பார்த்தஸாரதிக்கும் புவனேச்வர ஐயருக்கும் தோன்றியது. 'ஐயோ பாவம்!' என்ற ஒரே எண்ணந் தான் இருவர் மனத்திலும் எழுந்தது.

கோவிந்தாச்சாரியார் ஒருதரம் வரட்டு இருமலால் தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு, "இதில் பாருங்கோ நாமொன்றும் பழைய காலம் போல் பொம்மைக் கல்யாணம் செய்ய உத்தேசிக்கவில்லை. பெண் பிள்ளை இருவரும் வயது வந்தவர்கள். பிள்ளையோ படிப்பாளி; பெண்ணும் 5-வது பாரம் வரையில் படித்திருக்கிறாள். ஹிந்தியில் மாத்யமிக் பரீக்ஷை தேறி இருக்கிறாள். மற்றும் ஓரளவு வீணையும் வாசிக்கத் தெரியும். வாய்ப்பாட்டோ...

பு. ஐ: அதெல்லாந் தெரிந்த விஷயந்தானே. முந்தாநாளெல்லாம் அதைத் தான் சொன்னீர்களே...

கோவிந்தாச்சாரியார்: எதற்குச் சொல்ல வந்தேனென்றால் கல்யாணமான பிறகு என்ன வேண்டுமென்பதை அவர்களே பேசி வகுத்துக்கொள்ளட்டுமே. கல்யாணமான பின் என்ன வேண்டும் எப்படி வேண்டும் என்ற பிரச்னைகள் கல்யாணத்திற்கு முன் எழவே நியாயமில்லையே. என்று ஏதோ மழுப்பினார். நிமிஷத்திற்கொரு தரம் உட்புறம் பார்வையைச் செலுத்த மறக்கவில்லை. ஒருவித தீர்மானமுமடைய முடியாமல் பார்த்தஸாரதியும் புவனேச்வர ஐயரும் வீடு திரும்பினர்.

பிறகு மூன்று நான்கு நாட்கள் சென்றன. ஒரு நாள் கோவிந்தாச்சாரியார் வந்து பார்த்தஸாரதியைப் பார்த்து நாளைய புதன்கிழமை கல்யாணம். காலை 7-30 மணிக்கு மேல் 9 மணிக்குள்ளாக. செவ்வாய்க்கிழமை ராத்திரியே வந்துவிடுங்கள் என்று சொல்லி அழைத்தார்.

"இன்று ஞாயிற்றுக்கிழமையாயிற்று. நாளை ஒரு நாள் தான் இடையிலிருக்கிறது. என் மனுஷ்யாள் ஒருவருக்குந் தெரியப்படுத்தவும் அவகாசமில்லையே. ஒரு வாரந் தள்ளியாவது முகூர்த்தத்தை வைத்துக் கொண்டால் நன்றாயிருக்குமே" என்றான் பார்த்தஸாரதி.

"வேறு சௌகர்யமான முகூர்த்தமில்லை. மற்றும் நானும் எல்லா ஏற்பாடுகளுஞ் செய்து விட்டேன். பந்துக்கள் எங்கே போகிறார்கள்? நம்மைச் சேர்ந்தவர்கள் தானே? நண்பர்கள் வந்தாலாயிற்று. நண்பர்களை விடவா மற்றொருவர்? சுபஸ்ய சீக்கிரம் என்பார்கள். ஆச்சு போச்சு என்று இந்த முகூர்த்தத்திலேயே நடத்திவிடலாமென்று கோவிந்தாச்சாரியார் நெடுநேரம் ஏதேதோ பேசிவிட்டுப்போனார்.

கல்யாணமும் அதே முகூர்த்தத்தில் நடந்தது. பார்த்தஸாரதியின் சார்பில் வந்திருந்த மனுஷ்யாள் யாவரும் மித்ரர்கள் தான். அவரவரும் கல்யாணமானதும் ஏதோ சாப்பிட்டுவிட்டுப் பகல் இரண்டு மணிக்கெல்லாம் திரும்பிப் போய்விட்டனர்.

இதனிடையிலேயே ஏதோ ஒண்டுதலற்ற முறையில் எல்லோரும் ஏனோ தானோவென்றிருப்பதாகப் பார்த்தஸாரதிக்குத் தோன்றலாயிற்று. மாலை மணி மூன்று நான்கு என்றானபோது கல்யாண மாப்பிள்ளை தனியாகவே உட்கார்ந்துகொண்டிருந்தார். இப்படி ஒரு நபர், அழைக்கப்பட்டு அங்கு வந்து உட்கார்ந்திருக்கிறார் என்ற எண்ணமே ஒருவருக்கேனும் இருப்பதாகத் தெரியவில்லை. மாலையில் கல்யாண விஷயமாக ஒரு சடங்குமே இல்லை நடக்கவேண்டியது ஏதாவது உண்டா இல்லையா என்பதை பார்த்தஸாரதிக்குத் தெரியாது. கோவிந்தாச்சாரியாரோ வேறு யாரேனுமோ நினைத்ததாகவுந் தெரியவில்லை. என்னடாவென்று கேட்பாருமற்று நாம் மட்டும் இப்படித் தனியாக விருக்கிறோமே என்று தோன்றவே பார்த்தஸாரதி முள்ளின் மேல் இருப்பது போல் தவிககலானாள்.

இரவு சுமார் 8-30 மணியிருக்கும்—கோவிந்தாச்சாரியார் வீட்டிலிருந்த சிலரில் ஒரு பரபரப்பு காணப்பட்டது. குறுக்கும் நெடுக்குமாக எல்லோரும் ஓட்டமும் நடையுமாக ஸஞ்சரித்துக்கொண்டிருந்தனர். எதிரில் காணும் ஒருவரை இன்னொருவர் ஏதோ கேட்பார். அவர் அதற்கு பதிலே சொல்லாமல் நடப்பார். இப்படியாக ஒரு நாடகம்.

விஷயம் என்னவென்றுல் இந்திராவிற்கு மயக்கம் வந்து விட்டது.

போதாதா விசேஷம்?

வழக்கம் போலவே கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தெளிவு ஏற்பட்டது. இடையில் பார்த்தஸாரதியும் ஒருதரம் போய் இந்திராவைப் பார்த்தான். அவளைச் சூழ்ந்திருந்தவருள் ஒருவராவது சற்று நகரவில்லை, அன்று காலை வரையில் அன்னியனுயிருந்தவன் ஒருவன் வந்திருக்கிறுனே என்பதற்காவது யாராவது சற்று நெளிந்து கொடுக்கலாமே, இல்லவே இல்லை.

இந்திராவைச்சுற்றி உட்கார்ந்திருந்தவர்களில் இருந்தவள் ராஜலக்ஷ்மியும் ஒருத்தி. பார்த்தஸாரதி வந்ததையோ அவன் இந்திராவைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதையோ அவள் கவனித்ததாகவோ காண்பித்துக் கொள்ளவில்லை. ஆனுல் அவன் வந்திருக்கும்போது எழுந்திருக்கவுஞ் செய்யாமல் அப்படி இருக்கலாகாதென்று யாரோ ஜாடையாக அவளிடந் தெரிவித்திருக்கவேண்டும். அவள் மிகக் கோபமாக ஹிந்தியில் ஏதோ பதில் சொன்னது "உன் வேலையைப் பார்" என்ருே "இருக்கட்டுமே என்னவாம்?" என்ருே இருக்கவேண்டுமென்று ராஜலக்ஷ்மியின் முகபாவத்திலிருந்தும், சொற்களின் தொனியிலிருந்தும், பிறர் நடந்துகொண்ட விதத்திலிருந்தும் பார்த்தஸாரதி அறியலானுன்.

இது என்னவென்று உங்களுக்குத் தோன்றுகிறது என்று ஒருவர் இதனிடையில் பார்த்தஸாரதியைக் கேட்டார்.

எல்லோரும் சற்று விலகி நல்ல காற்று வரும்படி விட்டால் மயக்கந் தெளிந்துவிடும். வேறு ஒன்றும் விசேஷமான வியாதியாகத் தோன்றவில்லை என்று பார்த்தஸாரதி சொன்னது பலருக்கும் பெரிய ஏமாற்றத்தை விளைவிப்பதாய் இருந்தது. ராஜலக்ஷ்மியின் முகத்திலோ எள்ளும் கொள்ளும் வெடிக்கலாயின. பார்த்தஸாரதிக்கோ யாவுமே ஒரு புதிராகவிருந்தது.

இதனிடையில், ஏற்கெனவே ஒருக்கால் விவரித்தது போல் இந்திராவிற்குப் பலரும் பலவிதமான உபசாரங்களும் செய்வதில் முனைந்திருந்தனர். இவ்வகை அலுவல்களில் ராஜலக்ஷ்மியும் கோவிந்தனும் நடந்து கொண்டது பார்த்தஸாரதியின் கண்ணிற்குப் புதுமையாகப்பட்டது. வயது வந்த பெண்—ஸ்திரீ—ராஜலக்ஷ்மி தன் உடன் பிறந்த சகோதரனுனுலும் பெற்ற தந்தையேயானுலும் ஓரளவிற்கு மேல் நெருங்கிப் பழகுவது விரஸமல்லவா? கோவிந்தனுடன் தொட்டுப் பழகுமளவிற்கு வித்யாஸமில்லாத மனமும் செயலும் சற்று அஸாதாரணம் தானே? என்று தோன்றியது பார்த்தஸாரதிக்கு. மற்றும் இந்திரா இங்கிலையிலிருப்பதற்காக எல்லோருமிருந்தது போலவே

ராஜலக்ஷ்மியும் கோவிந்தனுங் கூடத்தான் கவலை தோய்ந்த முகத்துடனும் தழதழத்த சொற்களுடனும் இருந்தனர். ஆனாலும் அவ்விருவரும் ஒருவரோடொருவர் பேசும்போது முகத்தின் கவலைக்குறி நீங்கிவிடும் 'சற்றே சிரித்த' முகத்துடன் தான் பேசுவர். பேச்சிலும் கவலையால் விளைந்த தழதழத்த சொற்களிரா. அன்பும் கனிவும் சிந்தும் சொற்களாகவே இருக்கும். உண்மை எப்படியோ பார்த்தசாரதியின் கண்களில் இவை தான் தோன்றின.

பின்னுளில் "ஒருக்கால் இதற்கும் இந்திராவின் மயக்கத்திற்குங்கூட ஏதாவது காரணகார்ய பாவமிருக்குமோ? என்றும் பார்த்தஸாரதி சிந்திக்கலானான். அவ்வாறாயின், இந்திராவிற்குத் தாய்மை உண்டாகாததற்கும் ஓரளவு காரணத்தை ஊகிக்கலாமோ? மற்றும், முன்னொருகால் சொன்னதுபோல் இந்திராவிற்கும் அலமேலு அம்மாளுக்கும் கோவிந்தன் மேல் ஓரளவு வெறுப்பும் ஏற்பட்டதற்குக் காரணம் இந்திரா அன்னையாகாததல்ல என்றெல்லாம் சிந்திக்கலானான். அது எவ்வாறாயினும் தன் கல்யாணத்தன்று நடந்தவை ஒன்றுமே பார்த்தஸாரதிக்குப் பிடிக்கவில்லை.

எப்படியோ—9-30 அல்லது 10 மணிக்கெல்லாம் இந்திரா கண் விழித்தாள். அதைத் தொடர்ந்து முன்னொருகால் கூறிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதுதான் ஸமயமெனத் தோன்றவே பார்த்தஸாரதி, தான் தன் வீட்டிற்குப் போவதாகக் கிளம்பினான். ஒருவராவது ஏன் என்று கேட்கவில்லை. கோவிந்தாச்சாரியார் மட்டும் ராத்திரி இவ்வளவு நாழிகையாகிவிட்டதே சாப்பிட வேண்டாமா? என்றார். பகல் சாப்பாடே இன்னும் ஜீரணிக்கவில்லை. அப்படியொன்றும் நாழியாகியும் விடவில்லை என்றான் பார்த்தஸாரதி. சரியென்ற பாவனையில் தலையை யசைத்தார் கோவிந்தாச்சாரியார். எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டான் பார்த்தஸாரதி. ஒருவர் தவராமல் தலையை மட்டும் அசைத்து விடையளித்தனர். புறப்படும்போது ஒரு வெற்றிலைப் பாக்கு எடுத்துக்கொள்ளும்படியோ கொடுத்தனுப்பும்படியோ ஒருவருஞ் சொல்லவில்லை. வஸந்தம் கொடுக்கலாமே அதுவுமில்லை, எல்லாம் புதுமையாயிருந்தது பார்த்தஸாரதிக்கு. இப்புதுமைகளிலேயே சிந்தை நிறைந்திருந்த பார்த்தஸாரதி தன் வீட்டையடைந்தபோது இரவு ஒரு மணியாகிவிட்டது.

மறுநாள் அக்கம் பக்கத்தாரெல்லாம் கல்யாணம் விசாரிக்க வந்தனர். "என்ன ஸார்! ராத்ரியே திரும்பிவிட்டீர்கள் போலிருக்கிறதே! தனியாகவா இப்படி பிடாரி புறப்பாடாகும் வேளையில் வருவது? என் ஒருவருமே கூட வரவில்லை? பெண்ணையும் அழைத்துக்கொண்டு சுபமாக வர வேண்டாமோ?

உங்களுக்குத் தான் மனுஷ்யாள் ஒருவருமில்லே. பெண்ணைக் கொடுத்தவாளுக்காவது நெடு நாளேய க்ஷேமத்தை உத்தே சித்து நல்ல வேளையில் ஒரு கிருகப்பிரவேசம் செய்து வீட்டில் கொண்டு வந்து விடவேணு மென்று தோன்ருதோ? ஒரு வரிசையா, வெண்மையா ஒன்றையுங் காணுமே? போனது போலவே கையை வீசிக் கொண்டு வந்திருக்கிறீரே!'' என்று சரமாரியான கேள்விகளை வீசினுர்கள். பாவம், பார்த்தஸாரதிக்கு ஒன்றுசொல்லத் தெரியவில்லே. எல்லாவற்றிற்கும் ஒரு அசட்டுச் சிரிப்பால் பதிலளித்து மழுப்பினுன்.

அன்றைய பொழுதெல்லாம் தீவிரமாக ஆலோசித்தான். தான் ஒரு திட்டமிட்டு ஏதோ ஏற்பாடு செய்ய அது ஒன்ருக முடியும் போலிருக்கிறதே! என்று விசாரம் பிடித்துக்கொண்டது. எப்படியாவது நிலேமையைச் சாதகமாகத் திருப்பிக்கொள்ள வேணுமென்று தீர்மானித்த பார்த்தஸாரதி ஒரு முடிவான திட்டமிட்டான். இரண்டு தினங்கள் கழிந்து ஞாயிற்றுக் கிழமை கிருகப் பிரவேசம் காலே 9 மணிக்கு என்று நிச்சயித்து ராஜலக்ஷ்மியை அழைத்து வந்து விடுமாறு கோவிந்தாச்சாரியாருக்குத் தெரிவித்தான்.

ஞாயிற்றுக்கிழமை கிருகப்பிரவேசத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளேத் தனக்குத் தெரிந்த வரையில் மற்றும் நண்பர்களின் ஆலோசனையை அனுசரித்தும் ஏதோ செய்து வைத்திருந்தான் பார்த்தஸாரதி. சமையற்காரர்கள் சமைத்துக் கொண்டிருந்தனர். காலேயிலேயே வரக்கூடியவர்களுக்குப் பலஹாரம் காப்பி முதலிய ஏற்பாடுகளேயுஞ் செய்திருந்தான். வீட்டின் முன் ஒரு பந்தல். வாழை மரம், தோரணம் முதலான அலங்காரங்கள் குறைவின்றி இருந்தன. மேளக்காரன் காலேயில் ஒரு தவணே கல்யாண வீட்டு முறைமைக்கு ஏதே மேளம் வாசித்துவிட்டுப் பிறகு ''நலங்கு முதலியவை உண்டா? எத்தனே மணிக்கு வரவேண்டும்?'' என்று கேட்டான். பார்த்தஸாரதிக்கு ஒன்றும் பதில் சொல்லத் தெரியவில்லே. மனுஷ்யாளே ஒருவரும் வரவில்லேயே! கடைசியில் எல்லா ஏற்பாடுகளும் வீண் தானே? பார்ப்பவர்கள் அதிகமாகவல்லவா கேலி செய்வார்கள்? என்றெல்லாம் பயந்துவிட்டான். வைதீகச் சடங்குகளேச் செய்விக்கவேண்டிய பிராமணர்கள் ஒவ்வொருவராய் வந்து கூடிக்கொண்டிருந்தனர். மணியோ ஏழு, எட்டு என்ருகிக் கொண்டிருந்தது. கிருகணியைப் பற்றிய தகவலேக் காணவில்லே. கிரஹப்பிரவேசம் எப்படி நடக்கும்? ''ஸ்ரீராமசந்திரா! இது என்ன சோதனே!'' என்று அங்கலாய்த்துவிட்டான் பார்த்தஸாரதி. இதற்குள் அங்கிருந்தவர்களும் பலவிதமாக பேசிக் கொண்டனர்.

(தொடரும்)

மேவாரின் வீழ்ச்சி

[மூலம் : த்விஜேந்திரலால் ராயால் இயற்றப்பட்ட
மிகப் புகழ்பெற்ற வங்க நாடகம்]

தமிழாக்கம் :
"பைங்கா நாடு"

(சென்ற மாத தொடர்ச்சி)

அஜய் : மானஸி! நீ கொடுத்து வைத்தவள். மானஸி, இன்று நான் உன்னிடம் விடைபெற்றுக்கொள்ள வந்திருக்கிறேன்.

மானஸி : ஏன்? எங்கு செல்லப்போகிறாய்?

அஜய் : போருக்கு!

மானஸி : எப்பொழுது?

அஜய். நாளைக்காலை.

மானஸி : அங்கிருந்து எப்பொழுது திரும்புவாய்?

அஜய் : ஒன்றும் நிச்சயமில்லை. திரும்பி வருவேனா, மாட்டேனா என்பதே சந்தேகம்?

மானஸி : ஏன்?

அஜய் : போரில் ஒரு வேளை இறந்துவிடலாம்.

மானஸி : ஓஹோ! (தலையைக் குனிந்துகொள்கிறாள்)

அஜய் : மானஸி! நான் திரும்பாவிட்டால்?...

மா : என்ன ஆகும்?

அ : உனக்கு வருத்தம் ஏற்படுமா? ஏற்படாதா?

மா. ஏற்படும்!

அ : எவ்வளவு அலட்சியம் மானஸி! நீ அறிவாயா?

மா : எதை?

அ! உன்னிடத்தில் எவ்வளவு அன்பு.

மா : தெரியும். நீ மிகவும் என்னிடம் அன்பு வைத்திருக்கிறாய்.

அ : என்னிடத்தில் உனக்கு அன்பு இல்லையா?

மா : உம்.

அ : இல்லை. உன் அன்பு வேறு இடத்தில் இருக்கிறது.

198111

மா: ஆம். மனித சமுதாயத்தினிடத்தில்.

அ: என்ன கடுமை. அலட்சியம்!

மா: ஏன் அஜய்! நான் உன்னிடம் மட்டுந்தான் அன்பைச் செலுத்தவேண்டுமென்று விரும்புகிருயா? நீ தனியாக என் இதயத்தில் ஆட்சி செலுத்த எண்ணுகிருயா? அப்படியென்ருல் நீ ஒரு சுயநலக்காரன்.

அ: மானஸி! இன்னும் நீ ஒன்றும் அறியாதவளாயிருக்கிருய்.

மா: நீ ஏன் என்னிடம் கோபப்படுகின்ருய். இதில் என்னுடைய குற்றம் என்ன? மனித சமுதாயத்தினிடத்தில் அன்பைச் செலுத்துவது ஒரு குற்றமா? நீ இதைக் குற்றமென்று கருதினல் எனக்கு தண்டனை அளி. நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயார்.

அ: நான் தண்டனை அளிப்பதா?

மா: ஆம். நீ எனக்கு தண்டனை அளி. அஜய்! இன்று நீ போருக்குச் சென்றுகொண்டிருக்கிறய். இந்தப்போரில் நீ எவ்வளவு அதிகம் கொலை செய்திருக்கிருயோ? அவ்வளவு புகழ் ஏற்படும் உனக்கு. அதேபோல நான் எவ்வளவு அதிகம் அன்பு செலுத்துகிறேனே அவ்வளவு குற்றமும் அதிகரிக்குமா?

அஜ: மானஸி! நீ இந்த அகண்ட உலகத்தினிடம் அன்பைச் செலுத்து. உன் விசால இதயத்தில் உலகம் முழுவதற்கும் இடமளி. இப்பொழுது நான் உன்னிடம் ஒன்றும் சொல்லப் போவதில்லை. நான் மகாமூடன். ஆகாயம்போல விஸ்தாரமான உன் இதயத்தை அற்பமான என் சிறு இதயத்தில் அடைத்து வைக்க விரும்புகின்றேன். என்னை மன்னித்து விடு. நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.

மா: நல்லது அஜய்! சென்று வா. உலகம் முழுவதும் அநியாயமும் அக்ரமும் நிரம்பியுள்ளது. அதைப்போக்க எப்பொழுதாவது யுத்தமும் செய்யவேண்டியிருக்கிறது. ஆனல் போர் பயங்கரச்செயல். அதில் முடிந்த அளவு தன்னை பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

[அஜயசிம்மன் செல்கிருன்.]

மா: அஜய்! நீ போர்க்களத்திற்குச் செல். என் இதய பூர்வமான வேண்டுகோள் உன்னை இரும்புக் கவசம்போல் காக்கும். ஆனால் போரில் மடியும் மக்களின் கதி? மடியும் மக்களின் மனைவிகள், தாய்மார்கள், இது மாதிரி கடவுளிடம் வேண்ட மாட்டார்களா? எனக்குத் தெரியவில்லை: எவ்வளவு பேர் வேண்டுகோளை கடவுள் ஏற்றுக்கொள்கிறாரோ, எத்தனை பேர்களுடைய பிரார்த்தனையை உதறித் தள்ளுகிறாரோ, இதற்கு ஒருவித மாற்றும் கிடையாதா?

[நீர் நிறைந்த கண்களுடன் சிறிது நேரம் ஆகாயத்தை உற்று நோக்கிக்கொண்டிருக்கிறாள். அவள் முகம் மலருகிறது. கைதட்டிக்கொண்டே செல்கிறாள்.]

பேஷ்! இப்பொழுது நான் ஒரு வேலை செய்யப்போகிறேன். போரில் காயமடைந்தவர்களுக்கு என்னால் ஒரு உதவியும் செய்ய முடியாதா? ஆம், முடியும். காயம்பட்டவர்களுக்கு உதவி செய்வேன். இதில் என்ன தடை! இதைத்தான் செய்யப் போகிறேன்.

[ராணி, ருக்மணி வருகிறாள்.]

ராணி: மானஸி! உனக்குத் தெரியுமா?

மானஸி: என்ன?

ராணி: உன் தகப்பனார் போருக்குச் சென்றிருக்கிறார்.

மா: ஆம், கேள்விப்பட்டேன்.

ரா: முகலாயர்களுடன் போருக்குச் சென்றிருக்கிறார்.

மா: ஆம். தெரியும்.

ரா: எவ்வளவு அலக்ஷ்யமாய் கூறுகிறாய்! "ஆம், தெரியும்" போருக்குச் செல்வது வெண்ணெய் தின்பதுபோல் அவ்வளவு எளிதா? ஆயிரக்கணக்கானவர்கள் போரில் கொல்லப்படுகிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா?

மா: ஆம். கொல்லப்படலாம்.

ரா: கொல்லப்படலாம் என்பது இல்லை. கொல்லப்படுகிறார்கள். இந்தத் தடவை பாத்ஷாவின் சேனையுடன் போர் நடக்கும். இந்தத்தடவை எல்லாம் அழிந்துவிடும் என்று தெரிந்து

கொள். போருக்குச் சென்றவர்கள் கொல்லப்படுவார்கள். போருக்குச் செல்லாதவர்கள் நிலை என்ன ஆகுமோ ?

மா : இதற்கு நான் என்ன செய்யமுடியும் ?

ரா : நான் உன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்து வைத்திருந்தேன். ஆனல் அதற்கு இப்பொழுது சமயம் கிடைக்காது. இந்தக் குழப்பத்தில் எப்படிக் கல்யாணம் நடக்கும் ?

மா : ஆமாம். நடக்க முடியாது

ரா : முடியாதா ? கலியாணம் நடக்காவிட்டால் என்ன ஆகும் ?

மா : நல்லது !

ரா : என்ன ? நல்லதா ! பெண்கள் கலியாணம் செய்து கொள்ளாமலிருக்கமுடியுமா ? ஜோதிபுரி இளவரசனுடன் உனக்குக் கலியாணம் நிச்சயமாயிருந்தது. ஆனல் இப்பொழுது கலியாணம் நடக்காது. எல்லோரும் போருக்குச் செல்வார்கள். எல்லோரும் இறப்பார்கள். முதலில் கலியாணம் நடக்கட்டும். பிறகு போருக்குச் செல்லலாம் என்று சொன்னேன். ஆனல் அவர் அதைக் கேட்கவில்லை.

மா : அம்மா ! நீ கவலைப்படாதே. நான் கலியாணத்தைக் காட்டிலும் பெரிய வேலை ஒன்று செய்யத் தீர்மானித்திருக்கிறேன்,

ரா : என்ன வேலை.

மா : போர்க்களத்திற்குச் செல்வேன்.

ரா : எதற்கு ?

மா : அம்மா நீ இப்பொழுது சொன்னயல்லவா ? போரில் பலர் மடிவார்கள் என்று. அவர்களுக்கு என்னல் உதவி செய்ய முடியாதா ? ஆம். காயம் பட்டவர்களுக்கு நான் உதவி புரிவேன்.

ரா : விபரீதம்தான். அஜயன் இதெல்லாம் உனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிருன் என்று நினைக்கிறேன்.

மா : இல்லை. இதில் அவர் குற்றம் ஒன்றுமில்லை. அஜயன் எல்லோரையும் கொல்லச் செல்கிருன். நான் எல்லோரையும் காப்பாற்றச் செல்கிறேன்.

ரா . இல்லை. இது உன்னல் முடிந்த காரியமா ?

மா : நன்ருய் முடியும்.

ரா : இல்லே நீ அங்கே செல்லக்கூடாது.

மா : அம்மா ! நீ கவலேப்படாமலிரு. நான் நிச்சயம் செல்வேன். உனக்குத்தான் தெரியுமே; கடமை என்னே அழைக்கும்போது என்னேத் தடுக்க ஒருவராலும் முடியாது என்று நீ போ. நான் போருக்குச் செல்ல ஆயத்தம் செய்கிறேன்.

ரா : நீ யாருடன் செல்வாய் ?

மா : அஜயசிம்மனின் சேனேயுடன்.

ரா : நினேத்தபடி ஆகிவிட்டது. ராணுஜியும் போருக்குச் சென்றுவிட்டார். இவளேச் சமாதானப்படுத்துவது யார் ?

மா : அப்பா இங்கு அருந்தால் இந்த வேலேயிலிருந்து என் னேத் தடுக்கமாட்டார். அவர் கருணேயுள்ளவர்.

ரா : அவர் உன்னிஷ்டப்படி விட்டுவிட்டார். அதனுல்தான் நீ இப்படிச் செய்கின்ருய் ? எல்லாம் வீணுகிவிட்டது. எனக்குத் தெரியும். ஏதோ பெரிய ஆபத்து ஏற்படப்போகிறது.

மா : அம்மா ? நீ கொஞ்சம்கூடக் கவலேப்படாதே. ஒரு மனிதன் பிற மனிதன் மீது அக்கிரமம் செய்கின்ருன். என்னுல் முடிந்த வரை அதைத் தடுக்கப்போகின்றேன் அம்மா, நீ போ, கவலேக்கு ஒன்றும் இடமில்லே.

ரா : இப்பொழுது கலியுகம் தன் ஆட்சியை நன்ருய் நடத்து கிறது.

[ராணீ செல்கிருள்]

மா : இந்த எண்ணத்தை என் மனத்தில் யார் விளே வித்தார்கள். முதலில் இந்த ஜோதி என் அந்தக் கரணத்தின் ஒரு ஓரத்தில் ஒளிந்திருந்தது. அது இப்பொழுது முழுதும் மலந்து விட்டது. இது ஒரு புத்துணர்ச்சி. பரமானந்தம். கலியாண சுகம்; இந்தப் பேரானந்தத்தின் எதிரே ஒரு பொருளா ?

காட்சி 7

இடம் : மேவாரின் போர்க்களம்.

நேரம் : மாலே.

[ஹிதாயத் அலி ஒரு டேராவில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிருர். வெளியே போர்க்களத்தின் பேரிரைச்சல் சல். வாசற்படியில் இரண்டு வீரர்கள் உருவிய கத்தியுடன் நின்று கொண்டிருக்கிருர்கள்.]

ஹிதாயத்: ஹுஸேன்! மேவாரின் சேனே சுமாராக எவ்வளவு இருக்கும் என்று கணக்கிட்டாயா?

ஹுஸேன்: சுமார் ஐம்பதினுயிரம் இருக்கும்.

ஹிதாயத்: ஆமாம். ஆனல் ராஜபுத்திரர்கள் இன்னும் ஓடிக்கொண்டிருக்கவில்லேயே!

ஹுஸேன்: இல்லே, ஜனுப்!

ஹிதாயத்: காலேயிலிருந்து சண்டை செய்து கொண்டிருக்கிருர்களே? இன்னுமா ஓடவில்லே.

ஹுஸேன்: இல்லே. அவர்கள் இறுதி வரை நன்கு போரிடத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

ஹிதாயத்: கொஞ்சம் போர் முறை கூட அவர்களுக்குத் தெரியும் போலிருக்கிறதே!

ஹுஸேன்: ஆமாம், அவர்கள் போர் செய்வதைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது.

ஹிதாயத்: ராஜபுத்திரர்களின் பேரிரைச்சல் காதில் விழுகிறதே. நம் சிப்பாய்களின் பேச்சு மூச்சைக் காணவில்லேயே. அவர்கள் போர் செய்கிருர்களல்லவா?

ஹுஸேன்: ஏன் போர் செய்யவில்லே. ஒரு முறை வெளியில் வந்து பார்க்கக்கூடாதா. தாங்கள் சேனேத்தலேவர்.

ஹிதாயத்: ஆம். நிச்சயமாய் நான் சேனேத்தலேவர்களுக்கெல்லாம் தலேவன். கூடாரத்திலிருந்து வெளியே கிளம்பத் தேவையில்லே. என் மைத்துனர் இஞயத்கான் ஒருவரே இவர்களுக்கு போதும். இந்த அப்பாவிகள் என்னுடன் போரிடுவார்களா?

ஹுஸேன்: ஆம். ஜனுப்! இது சரிதான். ஆனல் பாருங்கள். ராஜபுத்திரர்கள் கர்ஜித்துக்கொண்டிருக்கிருர்கள். கவனியுங்கள். மறுபடியும் அவர்களின் பேரிரைச்சல். நிலேமை சரியில்லே.

ஹிதாயத்: என்ன நடக்கிறது என்று வெளியில் சென்று பார்க்கலாமா?

ஹுஸேன்: அதுதான் சரி.

ஹிதாயத்: வேண்டாம். நீ இங்கேயே இரு. எனக்கு வழக்கமாகிவிட்டது. மாலை வேளைக்குப் பிறகு தனியாக இருக்க முடிவது இல்லை.

ஹுஸேன்: இது கெட்ட பழக்கம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்.

ஹிதாயத்: அதோ பார். சத்தம் அதிகமாகிக்கொண்டு வருகிறது.

ஹுஸேன்: அருகில் வா, கேட்கிறது சத்தம்.

ஹிதாயத்: என்ன சொன்னாய்?

ஹுஸேன்: ஜனாப்! யாரோ இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது,

ஹிதாயத்: வருகிறார்களா? (ஹுஸேனைப் பிடித்துக் கொள்கிறான்.)

[ஒரு சிப்பாய் வருகிறான்.]

ஹிதாயத்: என்ன செய்தி?

சிப்பாய்: குதாவந்த், சேனைத்தலைவர் சம்ஷேர்கான் கொல்லப் பட்டார்.

ஹிதாயத்: அப்படியா?

ஹுஸேன்: மற்ற வீரர்கள்?

சிப்பாய்: போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஹிதாயத்: இனயத்கான் பிழைத்திருக்கிறார் அல்லவா?

சிப்பாய்: ஆம் ஹுஜூர்!

ஹுஸேன்: அச்சா. நீ போ.

[சிப்பாய் செல்கிறான்.]

ஹிதாயத்: உண்மையில் தீங்கு நேரிடும் போலிருக்கிறது.

ஹுஸேன்: ஆம், ஹுஜூர். அப்படித்தான் தோன்றுகிறது. நீங்கள் அன்று மேவாரை கண்மூடித் திறப்பதற்குள்

ஜெயித்துவிடலாம் என்று சொன்னீர்கள் அல்லவா? இப்பொழுது உங்களுக்குத் தெரிகிறதா? மேவாரை ஜெயிப்பது எவ்வளவு கடினமாயிருக்கிறது. இப்பொழுது இந்த அடிமையின் வார்த்தை சரிவரப் புரிகின்றதா? அதோ! கவனியுங்கள். அவர்கள் இன்னும் அருகில் வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஹிதாயத்: சந்தேகமில்லாமல். இந்தப்போரில் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது.

ஹுசேன்: ஆம்! ஜனாப். ஒன்றும் சொல்ல முடியாது.

[மற்றொரு சிப்பாய் வருகிறான்.]

ஹிதா: என்ன சமாசாரம்?

சிப்பாய்: நம் படை இடது பக்கமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

ஹிதா: இது ஏன்?

ஹுஸேன்: இந்தச் சத்தம் அதனுடையதுதானா?

சிப்பாய்: ஜீ ஹாம். (சிப்பாய் செல்கிறான்)

ஹுஸேன்: ஜனாப்! சேனைத் தலைவர்களுக்கெல்லாம் தலைவரே! தாங்கள் கொஞ்சம் கூடாரத்திலிருந்து வெளியில் தான் வாருங்களேன். குறைந்தது உங்களைப் பார்த்து வீரர்களுக்கும் உத்தியோகஸ்தருக்கும் தைரியம் விருத்தியாகுமல்லவா? தாங்கள் சேனைத்தலைவர்களுக்கெல்லாம் தலைவர். கொஞ்சம் வெளியே வாருங்கள்.

ஹிதா: ஐயோ! நான் சேனைத்தலைவன். (மிகவும் முகத்தில் வெறுப்பு வெளிப்படுகிறது.)

[மூன்றாவது சிப்பாய் வருகிறான்.]

சிப்பாய்: குதாவந்த்! இனாயத்கான் கொல்லப்பட்டார்.

ஹிதா: ஆ! இவன் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறான்! இதுவும் நடக்கக்கூடியதா? மறுபடியும் ராஜபுத்திரர்களின் பேரிரைச்சல் கேட்கிறது. அதோ அவர்கள் அருகிலேயே வந்து விட்டார்கள்.

ஹுஸேன். ஜனாப்! தாங்கள் ஒரு முறை வெளியில்வந்தால் போதும்,

ஹிதா : இப்பொழுது நேரம் எங்கிருக்கிறது? இதைக் கேட்கிருயா?

ஹுஸேன் : ஆம்! கேட்டுக்கொண்டிருக்கிறேன். இரைச்சல் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. இதோ! இன்னும் அருகில் வந்துவிட்டது.

[நான்காவது சிப்பாய் வருகிருன்.]

சிப்பாய் : ஜனுப்! எல்லர்ப் படையும் நாதியற்றதாகி விட்டது.

ஹிதா : இதுதான் எனக்கு முன்பே தெரியுமே? வேறு ஏதாவது......

ஹுஸேன் : வேறு என்ன ஆகும்? நாதியற்ற பிறகு வேறு என்ன ஆகமுடியும்?

சிப்பாய் : யஜமான்! எல்லாப் படைகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ராஜபுத்திரர்கள் முன்னேறிக்கொண்டே வருகின்றனர்.

ஹிதா : ஹுஸேன்! எதிரிகள் வந்துவிட்டார்கள்போலிருக்கிறதே?

[ஓடுங்கள் ஓடுங்கள் என்ற குரல் கேட்கிறது.]

ஹிதா : எந்தப் பக்கம்?

ஹுஸேன் : இந்தப் பக்கம்......

[ஹுஸேன் ஒரு பக்கம் ஓடுகிருன். ஹிதாயத் பயந்து மற்ருெரு பக்கம் ஓடுகிருன். இதற்குள் அவன்மேல் குண்டுபாய்கிறது. கீழே விழுகிருன். பல ராஜ புத்திரர்களுடன் முகலாயர்களின் கொடியை எடுத்துக்கொண்டு அஜயசிம்மன் வருகிருன்.]

அஜயசிம்மன் : ஜே! மேவாரின் ராணுவுக்கு ஜே!

ஹிதாயத் : (கைகளைத் தூக்கி) மன்னிப்பு! என்னைக் கொல்லவேண்டாம். நான் பிழைத்திருக்கிறேன். என்னைக் கொல்லாதே. கைதியாக்கிவிடு.

அஜய் : நீயார்?

ஹிதாயத் : நான் அரசரின் சொந்தப்படைக்குத் தலைவன்.

அஜய்: படைத் தலைவனா? இந்த நேரத்தில் போர்க் களத்தை விட்டு விட்டு ஏன் கூடாரத்தில் அடைந்துகிடந்தாய்?

ஹிதாயத்: உங்......உ...நான்? இதற்கு முக்கியமான காரணம் உள்ளது. ஆனால் இப்பொழுது அது நினைவிற்கு வரவில்லை. நீங்கள் என்னைக் கொல்லாதீர்கள். என் உயிரைக் காப்பாற்றுங்கள்.

அஜய்: பார்! இந்த நரி மேவாரை வெற்றி கொள்ள வந்திருக்கிறது. பயப்படாதே. நீ கொல்லப்படமாட்டாய். ராஜபுதனம் எங்கும் மேவாரின் வெற்றியைக் கோஷிக்கச் செய்.

ஹிதா: ஆம். கோஷிக்கச் செய். இதில் எனக்கு ஒரு கெடுதலும் கிடையாது.

[தன் வீரர்களுடன் அஜயசிம்மன் செல்கிறான்.]

ஹிதா: உயிர் தப்பியது, உயிர்.........தாகம், தண்ணீர், தண்ணீர்!

காட்சி 8

இடம்: போர்க்களம்.

நேரம்: நடுநிசி.

[ஆங்காங்கு பிணங்கள். காயம்பட்டவர்கள் குவியல் குவியல்களாகக் கிடக்கின்றனர். பல வீரர்களுடன் மானஸி அங்கு சுற்றிக்கொண்டிருக்கிறாள். சில வீரர்களின் கையில் தீவட்டிகள் இருக்கின்றன.

மானஸி: சிலர் அந்தப்பக்கம் செல்லுங்கள். நான் இங்கு கவனிக்கிறேன்.

[பல ராஜபுத்திர வீரர்கள் அந்தப்பக்கம் செல்கின்றனர்.

மானஸி: ஆஹா! நாற்புறங்களிலும் எவ்வளவு கொலைகள். இந்த அழுகையும் கூக்குரலும்! எவ்வளவு கருணை நிரம்பிய காட்சி. ஏ பரமேச்வரா! உன் ராஜ்யத்தில் இதுதான் முறையா? மனிதனை மனிதன் உண்ணுவதுதானா? தரணியில் இந்த ஹிம்ஸைக்கு ஒரு பொழுதும் முடிவு கிடையாது? மனிதன் தங்கு தடையின்றி மனிதனைக்கொன்று குவிக்கிறான். கருணைக்

கடலான நீ வாய் திறவாமல் நின்று கொண்டு வேடிக்கைப் பார்க்கிருய்! நீல மயமான ஆகாயத்தைப் பிளந்துகொண்டு உலகம் முழுவதும் பாபத்தின் பயங்கரமான வெற்றி முழக்கம் எழுந்து கொண்டிருக்கிறது. அப்பொழுதும்கூட நீ அதை அடக்கவில்லை. இது எப்பேர்ப்பட்ட பயங்காமான மர்மத்தை பிளக்கும் கருணைக் காட்சி. இந்தப் பிணக்குவியல்களை பார்க்கச் சகிக்கவில்லையே! இந்த காயம்பட்டவர்களின் கூக்குரல் கேட்க முடியவில்லையே!

முதல் காயம்பட்டவன்: ஐயோ! செத்தேன்......

மா: சொல் சகோதரனே! உனக்கு எங்கு காயம்பட்டிருக்கிறது. ஆஹா! இந்த எளியவனுக்கு அதிகக் கஷ்டம்?

முதல் காயம்பட்டவன்: இங்கே, இங்கே! தாயே! நீ யார்?

மானஸி: பேசாதே. (குண்டுபட்ட இடத்தில் கட்டுக்கட்டுகிருள். ஒரு வீரனிடம் ஜாடை காட்டுகிருள். அவன் ஒரு கிண்ணத்தைக் கொண்டுவந்து கொடுக்கிருன். மானஸி காயம்பட்டவனிடம் செல்கிருள்.) பயப்படாதே. இந்த மருந்தைக் குடி.

[மருந்தைக் குடிக்கிருன். அருகிலுள்ள மற்றொரு காயம்பட்டவன் கதறுகிருன். அவனருகில் செல்கிருள் மானஸி.]

பேசாமலிரு. உன் சிசுருஷைக்கான ஏற்பாடு நடக்கிறது.

[ஒரு ராஜபுத்திரவீரனிடம் ஜாடை காட்டுகிருள். அவன் செல்கிருன். அப்பொழுது வேறொரு காயம்பட்டவனிடம் செல்கிருள்.]

நீ பேசாமல் சற்று நேரம் இரு நான் இதோ வருகிறேன்.

மூன்றுமவன்: ஏ ராமா! பிராணன் போய்விட்டால் நல்லது. தாங்கமுடியவில்லையே வலி!

மானஸி! (அவனருகில் சென்று பார்க்கிருள்) இவனுக்கு உயிர் இருக்கிறது. (வீரனிடம்) இவனைப்பார்.

ஹிதாயத்: தாகம்! தாகம்! தண்ணீர்! தண்ணீர்!

மா: (ஹிதாயத்தினிடம் சென்று ஒரு குவளை தண்ணீர் கொடுத்துச் சொல்கிருள்) இதோ தண்ணீர், குடி.

ஷிதா : (நீரைப்பருகி) ஏ அல்லா ! உயிர் பிழைத்தது !

[பல வீரர்களுடன் அஜயசிம்மன் வருகிருன்.]

அஜய் : இந்தக் காரிருளில் நீ யார்? மேவாரின் ராஜ கன்னிகையா ?

மானஸி : யார் ? அஜயனு ?

அஜய் : (அருகில் வந்து) ஆம் மானஸி !

மானஸி : அஜய், காயம்பட்டவர்களுக்கு உதவி செய்வதில் எங்களுக்கு உதவி செய்யச் சொல் உன் வீரர்களே. நம் மனிதர்கள் குறைவாயிருக்கிருர்கள்.

அஜய் . அவர்கள் என்னவேலே செய்யவேண்டும் ?

மா : அவர்கள் காயம்பட்டவர்களே ஸேவைசெய்யும் கூடா ரத்திற்கு எடுத்துச் செல்லட்டும்.

[தொடரும்]

அச்சுப் பேச்சு

1577 : இந்த வருஷத்தில் இந்தியா தேசத்தில் முதன் முதலாக கொச்சியில்தான் போர்ச்சுகீசிய பாதிரிமார்களால் ஒரு அச்சாபீஸ் துவக்கப்பட்டது.

1578 : திருநெல்வேலியிலும் போர்ச்சுகீசிய பாதிரிமார்களால் ஒரு அச்சாபீஸ் துவக்கப்பட்டது.

1616 : பம்பாய் அருகேயுள்ள ஸால்செட்டில் முதன் முதலாக ஒரு அச்சாபீஸ் ஆரம்பிக்கப்பட்டது.

1662 : பீம்ஜி பரேக் என்ற குஜராத்தைச்சேர்ந்த ஒரு இந்திய ரால் ஒரு அச்சாபீஸ் நிறுவப்பட்டது.

1713 : ஜெர்மனியிலிருந்து தமிழ் டைப்புகள் வார்த்துக் கொண்டு வரப் பெற்றன.

1886 : 'நியூயார்க் ட்ரிபியூன்' பத்திரிகாலயத்தில்தான் முதன் முதலாக லினோடைப் மெஷின் வேலேசெய்யத் தொடங் கியது.

சரித்திரப் பிரசித்திபெற்ற நாஞ பர்ஞவிஸ் கீதையைத் தகரத் தகடுகளில் எழுதிய எழுத்துக்களேக் கொண்டு தயாரித்தாராம்.

ஹிந்து மதமே பாரதம்

பாரஸீக மதம் தன் தாய்நாடான ஈரானிலிருந்து வெளியேற்றப்பட்டு இந்தியாவில் அபயமடைந்தது. அந்தக் காலத்திலிருந்து இந்த மதத்தைப் பின்பற்றுவோர் பிரபலமும் பெரும் சம்பத்தும் பெற்று இங்கு வாழ்ந்து வருகிறார்கள். பாரஸீக மதம் இந்தியாவிலிருந்து மறையலாம். ஆனால் இந்தியா மறைந்து விடாது.

புத்த மதம் இந்தியாவிலேயேதான் ஸ்தாபிக்கப்பட்டது. புத்த மதத்தின் மறைவினால் இந்தியா பாதிக்கப்படவேயில்லை.

இஸ்லாமியர்கள் இந்தியாவை ஆக்கிரமிப்பதற்கே வந்தார்கள். ஆனால் இப்பொழுது பாரதமக்களில் ஒரு வகுப்பினர்களாகி விட்டனர். இஸ்லாம் இந்தியாவிலிருந்து மறைந்தாலும் பாரத தேசம் அசையாது.

கிறிஸ்துவ மதம் இந்தியாவில் புகுந்துவிட்டது. இன்று கிறிஸ்துவர்களே ஆட்சி புரிகிறார்கள். கிறிஸ்துவ மதம் மறைந்தாலும் பாரத நாடு மங்காது. கிறிஸ்துவர்கள் குடியேறுவதற்கு முன்பே பாரதநாடு உள்ளது. அவர்கள் இந்தியாவிலிருந்து மறைந்த பின்னரும் பாரதநாடு என்றும் போல் விளங்கும்.

ஆனால் இந்தியாவிற்குத் தாய்ப்பாலூட்டி, தாலாட்டி வளர்த்த ஹிந்து மதம் மறையும் நிமிஷமே பாரத நாடும் மறையும். அப்பொழுது பாரதநாட்டின் புனிதமான ஸநாதன மதம் வெறுங் கனவாகும்; எகிப்தையும் எகிப்தின் மதம்போலவும் ஒரு நினைவு மட்டுமேயாகும். இவ்வாறு நிகழும்போது இந்தியா ஒரு கல்வெட்டு நிபுணரின் ஆராய்ச்சிக்குப் பாத்திரமாகவும் உடற்கூற்று சாஸ்திர நிபுணரின் ஆராய்ச்சிக்குகந்த ஒரு சவமாகவும் மாறும். ஹிந்து மதம் மறையும் க்ஷணத்திலிருந்து பாரதம் தேசபக்திக்கும் பெருமைக்கும் ஏற்ற ஒரு நாடு என்ற அந்தஸ்தை இழக்கும்.

—*Annie Besant*



GANZON BROS.

DRESS SPECIALISTS

3, Thope Street

TRIPLICANE, MADRAS - 5

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters

★

In the hands of the Master - Tailors and Cutters of GANZONS, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

வாழ்க்கை முழுமையும் கடவுள் மயமாக்க

நமது அன்றாட வாழ்க்கையில் கழியும் ஒவ்வொரு கணமும் சாதாரணமானதாய்த் தோன்றிய போதிலும் உண்மையில் அவை அத்தகையவையல்ல; அதில் பெரிய பொருள் பொதிந்திருக்கிறது. வாழ்க்கை முழுவதும் ஒரு பெரிய யக்ஞ கர்மமே. உன்னுடைய உறக்கம் என்பது என்ன? அது ஒரு சமாதி. எல்லா வகை போகங்களையும் நாம் ஆண்டவனிடம் அர்ப்பணம் செய்துவிட்டுத் தூங்குவோமானால் அந்தத் தூக்கம் சமாதியே யல்லாது வேறு என்ன? நம்மிடையே ஸ்நானம் செய்யும் பொழுது 'புருஷ ஸூக்தம்' சொல்லும் வழக்கமிருந்து வருகிறது. செய்யும் இந்த ஸ்நானத்திற்கும் புருஷ ஸூக்தத்திற்கும் என்ன சம்பந்தமென்று எண்ணிப் பாருங்கள். பார்க்க விரும்பினால் நிச்சயம் புலனாகும். எந்த விராட் புருஷனுக்கு ஆயிரம் கைகளும், ஆயிரம் கண்களும் உண்டோ, அவனுக்கும் என் இந்த ஸ்நானத்திற்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தமென்னவென்றால், நீ எடுத்துத் தலையில் ஊற்றிக்கொள்ளும் அந்தச் செம்பு ஜலத்தில் ஆயிரக்கணக்கான துளிகளிருக்கின்றன. அந்தத் துளிகள் உன் தலையைக் கழுவி உன் பாவத்தை அகற்றுகின்றன. உன் தலையின் மீது ஆண்டவனுடைய ஆசியே பொழிவது போல் ஆகும் அது. ஆண்டவனுடைய ஆயிரம் கைகளும் ஆயிரம் நீரொழுக்குகளை உன்மீது பொழிந்து கொண்டிருக்கின்றன. இந்தத் துளிகளின் மூலமாய் ஆண்டவனே உன் தலைக்கு அகத்திலுள்ள அழுக்கையும் கழுவிக் கொண்டிருக்கிறான். இத்தகைய தெய்விக பாவனையை அந்த ஸ்நானத்தில் புகுத்துவாயானால் அந்த ஸ்நானம் வேறு தன்மை பெற அதில் அளவிட முடியாத சக்தி வந்து சேர்ந்துகொள்ளும்.

இந்த பாவனையுடன், அதாவது இது ஆண்டவனுடையது என்ற உணர்ச்சியுடன் ஒரு சாதாரணமான காரியத்தைச் செய்த போதிலும் அது புனிதமாய் விடுகிறது. இது அனுபவத்தில் உணரப் பட்டதிலொன்று. நம்வீட்டிற்கு வந்திருப்பவர் ஆண்டவனே என்று

மனத்தில் சிறிது எண்ணிக்கொண்டு பாருங்கள். சாதாரணமான பெரிய மனிதன் ஒருவன் நம் வீட்டிற்கு வந்தாலே நாம் எவ்வளவு வீட்டைத் துப்புரவெல்லாம் செய்கிறோம், விருந்துச் சாப்பாடெல்லாம் தயாரிக்கிறோம்? வருவோன் ஆண்டவனென்று எண்ணத் தொடங்குவோமானால் நம் பாவனை எந்த அளவுக்கு மாறக்கூடு மென்று நீங்களே சொல்லுங்கள். கபீர், துணி நெய்து கொண்டிருந்தார். அதிலேயே ஆழ்ந்து போகும் அவர் ஆண்டவனுக்கு அணிவிப்பதற்கென்றே தாம் ஆடை நெய்வதாக எண்ணிக் கொண்டு,

"झीनी झीनी बिनी चदरिया।"
[ஜீனீ ஜீனீ பினீ சதரியா]

என்று பாடியவராய் மெய்ம்மறந்து போவார். ரிக்வேதத்தில் வரும் ரிஷி,

"वस्त्रेव भद्रा सुकृता मुपाणी"
[வஸ்த்ரேவ பத்ரா ஸுக்ருதா ஸுபாணீ]

"நான் எனது இந்த ஸ்தோத்திரத்தை அழகிய கைகளினால் நெய்த ஆடையைப்போல் ஆண்டவனை ஏற்கச் செய்கிறேன்" என்கிறார். கவிஞன் இயற்றும் ஸ்தோத்திரம் ஆண்டவனுக்காகவே. கைக்கோளன் நெய்யும் ஆடையும் ஆண்டவனுக்கென்றே நெய்கிறான். எத்தகைய உள்ளத்தைப் போய்த் தொடும் கற்பனை! சித்தத்தைத் தூய்மைப்படுத்தி உள்ளத்தைத் துள்ளி எழச் செய்யும் எத்தகைய தூய கருத்துக்கள்!! இந்த பாவனை வாழ்க்கையில் ஒரு முறை வந்துவிடுமானால் அது எவ்வளவு தூய்மை பெற்றுவிடும்! இருளில் மின்னல் ஒளிக்கும் பொழுது ஒரு கணத்தில் அந்த இருளெல்லாம் ஒளியாகி விடுகிறது. இருள் மெல்ல மெல்லவா ஒளியாகிறது? இல்லை. ஒரு கணத்திலேயே அகமும் புறமும் எல்லாம் மாறிப்போகின்றன. அவ்வாறே ஒவ்வொரு காரியத்தையும் ஆண்டவனுடன் இணைத்தவுடன் வாழ்க்கையில் அற்புதமான சக்தி தோன்றிவிடுகிறது. ஒவ்வொரு காரியமும் தூயதாகத் தொடங்கி விடுகிறது. வாழ்க்கையில் உற்சாகம் பரவுகிறது. இன்று நம் வாழ்க்கையில் உற்சாகம் எங்கே இருக்கிறது? நாம் வாழ்ந்திருப்பது சாவு வராமையினாலேயே. எங்கு பார்த்தாலும் உற்சாகத்திற்குப் பஞ்சமேற்பட்டிருக்கிறது. கலையில்லாத ஒப்பாரியாயிருக்

திரட்டு

சிறந்த மாதாந்தர கட்டுரைப் பொக்கிஷம்

22-A, நரசிங்கபுரம் தெரு
மவுண்ட் ரோடு, சென்னை

★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்

★ 50-க்கு மேலான அரசியல், சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள் !

★ பலதரப்பட்ட விஷயங்கள் !

★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
22-A, நரசிங்கபுரம் தெரு,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

கிறது வாழ்க்கை. ஆனால் நம் காரியங்களனைத்தையும் ஆண்டவனுடன் இணைத்து விடுவதென்று சிறிது எண்ணிப்பாருங்கள். பிறகு உங்கள் வாழ்க்கை எவ்வளவு இனிமை பொருந்தியதாய் மதிப்பிற்குரியதாய் ஆகிறதென்பது புலனாகும்.

ஆண்டவனுடைய ஒரு பெயரினாலேயே உடனே மாறுதல் ஏற்பட்டு விடுகிறது. இதில் ஐயப்பாடு தேவையில்லை. இராமன் என்று சொல்வதனால் என்ன ஆகப்போகிறது என்று சொல்லாதீர்கள். சிறிது சொல்லித்தான் பாருங்களேன். மாலை நேரத்தில் உழவன் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருக்கிறான். வழியில் அவனுக்கு ஒரு பிரயாணி கிடைத்துவிடுகிறான். அவன் பிரயாணியிடம்—

“பிரயாணம் செய்யும் அண்ணா! ஏ நாராயணா, சிறிது நில்லும். இப்பொழுது இரவு வந்து விட்டது. பகவானே, என் வீட்டிற்கு எழுந்தருளும்” என்கிறான். அந்த உழவன் வாயிலிருந்து இம்மாதிரியான சொற்கள் வெளிவருமானால் அந்தப் பிரயாணியின் தன்மையே மாறிவிடுகிறதா, இல்லையா என்று பாருங்கள். அந்தப் பிரயாணி வழிப்பறி செய்யும் திருடனாயிருந்தபோதிலும் அவன் நல்லவனாய் விடுவான். இந்த மாறுபாடு பாவனை காரணமாக ஏற்படுகிறது. பாவனையிலேயே எல்லாம் பொதிந்திருக்கிறது. வாழ்க்கையே பாவனை மயந்தான். இருபது வயதான பிற வீட்டுப் பையனொருவன் நம் வீட்டிற்கு வருகிறான். தந்தை அவனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்கிறார், அந்தப் பையனுக்கு வயது இருபதே ஆயிருந்த போதிலும் ஐம்பது வயதான அந்தப் பெண்ணின் தந்தை அவன் காலைத் தொடுகிறார். இதற்கு என்ன அர்த்தம்? பெண்ணை அளிக்கும் அந்தக் காரியம் எவ்வளவு புனிதமானது! எவனுக்கு அவள் அளிக்கப்படுகிறாளோ அவன் ஆண்டவனாகவே காணப்படுகிறான். மருமகனிடம் கொள்ளப்படும் இந்த பாவனையையே இன்னும் மேலே கொண்டு போங்கள், முன்னே கொண்டு செல்லுங்கள்.

இவ்வாறு பொய்க்கற்பனைகள் செய்து கொள்வதால் பயன் என்னவென்று சிலர் சொல்லலாம். எடுத்ததுமே உண்மை—பொய் என்று சொல்லாதீர்களென நான் சொல்லுகிறேன். முதலில் பயின்று பாருங்கள், அனுபவம் பெறுங்கள்; அதன்பின் உங்களுக்கு

உண்மையும் பொய்யும் தெரியவரும். அந்தக் கன்னிகாதானத்தில் சொல்லளவோடு நில்லாது மருமகன் உண்மையிலேயே பரம் பொருளென்று உணர்ந்தீர்களானால் எவ்வளவு மாறுதல் தோன்றுகிறதென்று தெரியவரும். இந்தப் புனிதமான பாவனையின் பயனைக் குறித்தபொருள் ஏற்கெனவே இருந்ததற்கும் பின் அது ஆவதற்கும் ஆகாயத்திற்கும் பாதாளத்திற்குமுள்ள வேற்றுமை இருக்கும். தீயவன் நல்லவனையும் தகுதியற்றவன் தகுதியுள்ளவனையும் மாறிவிடுவான். *பால்யா என்ற வேடன் மாறியது இதே வகையில் அல்லவா? வீணையின் மீது விரல்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. வாயினால் நாராயண நாமஜபம் நடந்து கொண்டிருக்கிறது. அவன் கொல்லுவதற்கு ஓடுகிறான், அப்பொழுதும் சிறிதும் அமைதி கலைவதற்கு மாறாக அவன் பக்கம் அன்புடன் பார்க்கிறார். பால்யா இத்தகைய காட்சியை இதற்கு முன் கண்டதேயில்லை. அவன் அந்தக் கணம்வரையில் இரண்டேவகைப் பிராணிகளைத் தான் பார்த்திருந்தான். ஒன்று அவனது வில்லையும் அம்பையும் பார்த்து ஓடுவது, மற்றதோ அவன் மீது எதிர்த்துப் பாய்வது. ஆனால் நாரதரோ அவனைக் கண்டதும் ஓடவுமில்லை, அவனை எதிர்க்கவுமில்லை. சாந்தராய் நின்றுகொண்டிருந்தார். பால்யாவின் அம்பும் வில்லும் அப்படியே நின்றுவிட்டன. நாரதரோ இமையையும் அசைக்கவில்லை; கண்களையும் மூடவில்லை. இனிய கீதம் முன்புபோல் ஒலித்துக்கொண்டிருந்தது. நாரதர் பால்யாவிடம், "உன் அம்பு ஏன் நின்றுவிட்டது?" என்று கேட்டார். அதற்கு பால்யா, "உங்களுடைய சாந்த பாவத்தைப் பார்த்து" என்று பதில் சொன்னான். நாரதர் பால்யாவின் தன்மையே மாற்றிவிட்டார். இந்த மாறுபாடு உண்மையா பொய்யா ?

[மூலம்: ஆச்சார்ய விநோபாஜியின் கீதைப் பேருரைகள் சர்வோதயப் பிரசுரம்.]

---

* வால்மீகி முனிவரின் ஆரம்பகாலப் பெயர்.

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை
தடுத்து
கூந்தல்
செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப்
புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, சென்னை - 1.

பிராயச்சித்தம்

பாகவத புராணத்தை இதுவரை பத்துப் பன்னிரண்டு தடவை படித்திருப்பேன். ஏதாவது ஒரு ஸ்கந்தத்தை எடுத்து வைத்துக்கொண்டு, குறிக்கோளில்லாமல் ஏதாவது ஒரு பக்கத்தைப் புரட்டி, இரண்டு வரி படித்தால், படுத்து உறங்கியிருக்கும் சிந்தனை உயிர்பெற்று, ஆழ்ந்த தத்துவங்களைக் கணநேரத்தில் மனத்துக்குக் கொண்டுவந்து விடுகிறது. வாசிப்பவனது மனநிலையைப் பொறுத்தது இது என்பது ஒரு பகுதி உண்மையேயானாலும், நமது பழைய இலக்கியங்களின் கருத்து சாச்வதமான பல உண்மைகளைத் திருப்பித் திருப்பிப் பல வகைகளில் எடுத்துரைத்து நமது சிந்தனையை அவற்றில் நிலைநிறுத்துவதுதான் என்ற உண்மையும் இதற்கு ஒரு காரணமாகும். நமது மிகப் பழைய கதைகளை, (நமது அழியாத செல்வங்கள் போன்ற காவியங்களை), நவீன காலத்தில், சந்தர்ப்பத்தைவிட்டுத் தனியே பிரித்தெடுத்துக் கேலி செய்து காட்டும் ஒரு மண்டூகக் கூட்டத்தின் பிரசாரம் இப்போது சிறிது ஓங்கியிருப்பதுபோல் தோன்றினாலும் அந்தப் பழைய செல்வங்களை யாராலும், எத்தகைய முயற்சிகளாலும் அழித்துவிட முடியாது என்பது மறுக்கமுடியாத உண்மை.

பாகவத புராணத்தில் பிராயச்சித்தம் ஸம்பந்தமாகக் கூறியிருக்கும் பகுதியை இங்கு சற்று ஆராய்வோம். ஆறாவது ஸ்கந்தத்தின் ஆரம்பத்தில் சுகப்ரும்மத்துக்கும் பரீக்ஷித்துக்கும் ஒரு ஸம்வாதம் நடக்கிறது.

சுகர் சொல்லுகிறார் :—

"மரணம் அடைவதற்கு முன்னமே, மனோ வாக் காயங்களென்கிற மூன்று கரணங்களும் வலிவுடன் இருக்கும்பொழுதே, இவ்வுலகத்திலேயே, தான் செய்த பாபத்திற்கு ப்ராயச்சித்தத்தைப் பற்றி யத்னம் செய்யவேண்டும்."

பரீக்ஷித்து வினவுகிறான் :—

"பெரியோர்கள் இந்த செய்கைகளைக் கெடுதல் என்று நிந்திக்கிறார்கள் என்ற அறிவாலும், சாஸ்திரங்களில் இந்த இந்தச் செயல்கள் தீயவை என்று கண்டிக்கப்பட்டிருப்பதைக் கேட்டதாலும், ஒரு மனிதன் கெட்ட காரியங்கள் எவை என்று ஒருவாறு அறிந்திருக்கிறான். ஆனால் அவனது மனம் இந்த உண்மையில் நிலை நிற்காமல் பல சமயங்களில் தடம் புரண்டுவிடுகிறது. அவன் தன்னையும் அறியாது பாப கர்மங்களைச் செய்துவிடுகிறான். அவன் பிராயச்சித்தம் செய்தால் அதற்கு எப்படிப் பலன் கிடைக்கும்?"

சுகர் சொல்லுகிறார் :—

"பிராயச்சித்த ரூபமான கர்மத்தினால் பாபத்திற்கு அடியோடு பரிஹாரம் உண்டாகமாட்டாது. உலகில் சாச்வதமான உண்மைகளை அறியாமல், அஹங்கார மமகாரங்களில் மனக்கலக்கமுற்றிருப்பவனுக்குத் தான் பிராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. உண்மைகளை அறிந்த ஆத்ம ஞானிக்கு, ஞானமே பாபங்களைப் போக்குகிறது."

மேலே கொடுக்கப்பட்டுள்ள ஸம்வாதத்தில் பிராயச்சித்தத்துக்கு ஒரு சிறிய விளக்கமும், ஞானத்தின் முக்கியத்துவமும் கூறப்பட்டுள்ளன. நம்மில் வைதிகர்கள் என்று கூறிக்கொள்ளும் பலர், வாழ்க்கையில் அநியாயமான வழிகளில் பணத்தைச் சேகரித்துவிட்டு, கடைசி காலத்தில் சில சாங்க்யங்கள் செய்துவிட்டு தாங்கள் செய்த பாபங்கள் அதன் மூலம் கழிந்துவிடும் என்று தங்களை ஏமாற்றிக்கொள்வதில் உள்ள தவறு மேலே விளக்கப்பட்டிருக்கிறது.

★

பர்னார்டு ஷா என்ற மேல் நாட்டு அறிவாளி "Androcles and the Lion" (அண்ட்ராக்ளீஸும் சிங்கமும்) என்ற தனது நாடகத்துக்கு எழுதியுள்ள நீண்ட முன்னுரையில் கிறிஸ்துவ வேதப் புத்தகமான பைபிளைத் துருவி ஆராய்ந்து, ஏசுகிறிஸ்துவின் ஸ்தானத்தை நிர்ணயம் செய்து, ஏசுகிறிஸ்துவுக்குப் பிறகு கிறிஸ்துவ மதத்தில் தோன்றிய பிளவுகளையும், கிறிஸ்து விதித்த தத்துவங்கள் தவறான முறையில் பொருள் கொள்ளப்பட்டதையும் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்கிறார். இந்த முன்னுரையின் பின் பாதியில் "The Perils of Salvationism" (பிராயச்சித்தம் இருக்

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES

FIRST - CLASS CLOTHES

MADE OF SUPERIOR B. & C.

MATERIALS

Prices Moderate

C. C. JACOB

Tailors, Dress Manufacturers & Contractors
(Specialists in B & C Quality Textile Dresses)

10, Thambu Chetty St., Madras - 1.

★

For Readymade garments fabricated out of India's best clothing materials
—B. & C. Mills cloths

Contact us for your requirements.

கிறது என்ற எண்ணத்தினுல் வரும் ஆபத்துகள்) என்ற தலைப்பின் கீழ் எழுதுவதைக் கவனிப்போம் :

"The conviction is spreading that to encourage a man to believe that though his sins be as scarlet he can be made whiter than snow by an easy exercise of self-conceit, is to encourage him to be a rascal."

("மக்களிடையே ஒரு தெளிவு பிறந்திருக்கிறது. ஒரு மனிதன் கொடுமையான பாபங்களைச் செய்கிருன், ஆனுலும் மிகவும் சுலப மான முறையில் அந்தப் பாபங்களைப் போக்கிவிடலாம் என்று அவனை நாம் உத்ஸாகப்படுத்துவது, அவன் இன்னும் அயோக்கி யனுகப் போவதற்கு வழிகாட்டுகிறது.")

பிராயச்சித்தம் என்பது உண்மையில் மனத்தைத் தூய்மை யாக்கிக் கொள்ளும் ஒரு வழியே தவிர, ஒரு ஏமாற்று வித்தையல்ல. "Judge not that ye be not judged" (பிறரது செய்கைகளைப் பற்றி நீ எடைபோடாதே. ஏனெனில் பிறர் உன் செய்கைகளை எடை போடுவார்கள்) என்று ஏசுகிறிஸ்து கூறியதன் மூலமாக, உலகத்தில் இன்று நாம் அனுஷ்டித்து வரும் தண்டனை முறை களின் அடிப்படையில் இருக்கும் தவறு விளக்கப்பட்டிருப்பது போலவே, பாகவதத்தில் "ஞானமே பாபங்களைப் போக்குகிறது" என்ற உண்மையும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

நம்மிடையே இருக்கும் தண்டனை முறைகளைப் பற்றிக் கூறுங் கால் பர்னர்டு ஷா சொல்வதைப் பாருங்கள் :—

"When we are robbed we generally appeal to the criminal law, not considering that if the criminal law were effective we should not have been robbed. That convicts us of vengeance."

("நமது பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டால் நாம் உடனே குற்றச் சட்டத்தின் உதவியை நாடுகிறேம். குற்றச் சட்டம் வலிவுடையதாக இருந்திருந்தால் நம் பொருள்களை யாரும் திருடியே இருக்கமாட்டார்கள் என்ற உண்மை நமக்குத் தெரிவதில்லை. இது காரணமாகப் பழி வாங்கும் குற்றத்தை நாம் செய்கிறேம்.")

இதுபோலவே பிராயச்சித்த ஸம்பந்தமாகவும் தவருன சில கருத்துக்கள் நம்மிடையே நிலவி வருகின்றன. இந்தத் தவறை பாகவதம் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. —"ஸ்ரீரா"

CONSULT

K. M. S. Press
22-A, Narasingapuram St.,
Mount Road, Madras - 2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

மயக்கம் பிறந்த கதை

வேகவதியான கங்கைக் கரையில் ஒரு ரிஷி இருந்து வந்தார். அவர் ஆஸ்ரமம் ஒரு வனத்தில் இருந்தது. அந்த ஏகாந்த வனத்தில் அவருக்குத் துணையாக ஒரே ஒரு ஜந்துதான் இருந்தது. அது ஒரு சுண்டெலி. அந்தச் சுண்டெலி மீதுரிஷிக்குகருணை ஏற்பட்டது.

தனக்கு அது வெறும் துணையாக இருப்பதைவிட பேச்சுத் துணையாக இருக்கட்டுமே என்று ஒரு காரியம் செய்தார். தன் தபோபலத்தை உபயோகித்து சுண்டெலிக்கு பேசும் சக்தியை அளித்தார்.

பேசும் சக்தி பெற்ற சுண்டெலி தினந்தோறும் ரிஷியிடம் வந்து பேசிப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் பேச்சுவாக்கில் ரிஷியிடம் சுண்டெலி கேட்டது. "என்னைப் பூனை சாப்பிட்டு விடும் போலிருக்கிறது. ஆகையால் என்னைப் பூனையாக மாற்றிவிட்டால் ரொம்ப நல்லது" என்றது. "சரி அப்படியே ஆகட்டும்" என்று சுண்டெலியைப் பூனையாக்கி விட்டார் ரிஷி. பூனையான சில தினங்களுக்கெல்லாம் ரிஷியிடம் பேசிக்கொண்டிருந்த மாஜி சுண்டெலி "இந்த நாய்களெல்லாம் என்னை ஓட ஓட துரத்துகின்றன. நாயாக மாற்றிவிட்டால் தேவலை!" என்றது.

"சரி அப்படியே ஆகிவிடு" என்று பூனையை நாயாக மாற்றி விட்டார் ரிஷி.

நாயாகிச் சில தினங்கள் கழிந்த பின்பு ஒரு நாள் ரிஷியிடம் பேசிக்கொண்டிருக்கும் சமயம் எனக்குப் பசி அதிகமாக எடுக்கிறது. உணவோ கிடைக்கவில்லை என்னை ஒரு குரங்காக மாற்றினால் நிறையப் பழங்களைச் சாப்பிட்டு விட்டு உங்களுக்கும் கொண்டு வருவேன்" என்று பூனையாகி, நாயாகிவிட்ட ஜந்து கூறிற்று. "அப்படியே ஆகுக" என்று அதை குரங்காக மாற்றினார் ரிஷி.

குரங்காகிவிட்டதும் இது கிளைக்குக் கிளை தாவிப் பழங்களைச் சாப்பிட்டு குதூஹலமாய்ச் சில மாதங்கள் பொழுது போக்கிவிட்டு—ஒரு நாள் ரிஷியிடம் வந்து தன்னை ஒரு காட்டுப் பன்றியாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. ரிஷியும் அதை ஒரு காட்டுப் பன்றியாக மாற்றிவிட்டார், தன் தபோபலத்தால்.

ஒரு நாள் வேட்டையாட வந்த அரசன் பூனையாகி, நாயாகி, குரங்காகி, காட்டுப்

பன்றியாகிவிட்ட மாஜி சுண்டெலியை வேட்டையாடிக் கொன்றுவிட இருந்தான். ஆனால் இந்த மாஜி சுண்டெலி வெகுவேகமாக ஓடி ஒளிந்து கொண்டதால் உயிர்தப்பிற்று.

பிறகு அன்றிரவு ரிஷியிடம் சென்று தன்னை ஒரு யானையாக மாற்றும்படி கேட்டுக் கொண்டு அவ்வாறே ஒரு யானையாக மாறிவிட்டது. இந்த யானையைக் கண்ட அரசன் அதைப்பிடித்து தன் வசப் படுத்தி அரண்மனைக்குக் கொண்டுபோய் அம்பாரி வைத்துத் தானும் தன் ராணியும் சவாரி செய்ய உபயோகித்துக் கொண்டான். தங்கமும், முத்தும், மணியும் பட்டும் ஜரிகையும் அலங்காரமும், பராமரிப்பும் வாய்ந்த இந்த ராஜாங்க யானைப் பதவியும் கொஞ்ச நாளில் அலுத்துவிட்டது இந்த மாஜி சுண்டெலிக்கு.

தன்னை ஒரு அழகிய யுவதியாக மாற்றிவிடும்படி ரிஷியிடம் போய்க் கேட்டு அழகிய நங்கையாக மாறியவுடன் அங்கு வந்த அரசகுமாரன் ஒருவன் அவளைக் கண்டு மோகித்து அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்று பொன்னாலும் மணியாலும் இழைத்து போக பாக்யவதியாக வைத்திருந்தான். ஆனாலும் ஒரு நாள் கிணற்றங் கரையில் நிற்கும்போது தலை சுற்றி மயக்கத்தால் கிணற்றுக் குள் விழுந்துவிட்டாள்.

ராஜகுமாரனுக்கு இந்த பூனையாகி, நாயாகி, குரங்காகி, காட்டுப்பன்றி ஆகி, யானை ஆகி, பெண்ணாக மாறின சுண்டெலியின் மரணத்தைத் தாங்க முடியவில்லை.

இதையறிந்த ரிஷி ராஜகுமாரனிடம் வந்து இவள் கதையை விஸ்தாரமாகச் சொல்லி அந்தக் கிணற்றில் நிறைய மண்ணைப்போட்டு மூடி விடும்படியும் அதிலிருந்து சில தினங்கள் கழித்து பல செடிகள் முளைக்குமென்றும் அவை சிவந்த புஷ்பங்களைப் புஷ்பிக்குமென்றும் தெரிவித்தார்.

அந்தப் புஷ்பங்களிலிருந்து அபின் என்ற மருந்து உண்டாகலாமென்றும் அந்த அபினியைச் சாப்பிடுபவர்களுக்கு மேலேகண்ட பெண் எடுத்த மிருக ஜென்மங்களின் சுபாவ குணங்கள் எல்லாம் மாறிமாறி ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

சுண்டெலியின் விஷமம், பூனைக்குப் பால்மேலுள்ள சபலம், நாயின் கலக புத்தி, குரங்கின் அருவருப்பான சேஷ்டைகள், காட்டுப் பன்றியின் மிருகத்தனம்— இவையாவும் அபினிக்கு அடிமையானவர்களிடம் காணப்படும்.

"மோஹினி"